KALKI 23.9.90 ரூ. 2.50

கல்கி



சினிமாவை வீடியோ வீழ்த்துமா?



ஒரு வீடு



இரு வாசல்

மனத்தை உறுத்துகிற மூன்று விஷயங்களை எடுத்த எடுப்பிலேயே சொல்லி விட்டால் நிம்மதி. 1. செண்பகம் பால் கறப்பதை அவ்வளவு நேரம் காட்டி இன்ஜினியர் குமரேஷை மட்டுமின்றி நம்மையும் சிரமப்படுத்தியிருக்க வேண்டாம். விரசம். பாலுணர்வைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை 'பசு தர்மம்' என்றே நம் முன்னோர்கள் குறிப்பிட்டனர். 2. யாமினி, மகனைத் தன் உடலோடு சேர்த்துக் கட்டிக்கொண்டு தற்கொலை செய்து கொள்ள நீரில் இறங்கி, ஆழத்துக்கு நடந்திருக்க வேண்டாம். அருவருப்பு. 3. உதட்டு அசைவுகளும் பேச்சும் பொருந்தவில்லை; கவனக்குறைவு.

அப்பாடா! சங்கடப்படுத்திய விஷயங்களைக் கொட்டித் தீர்த்தாச்சு. இனி எல்லாமே பிளஸ் பாயிண்டுகள்தாம்.

1. சினிமா ஃபார்முலாவைத் தகர்த்து, சண்டை, டூயெட், பாட்டு, டான்ஸ் ஏதும் இல்லாமல் இயல்பாகப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

2. இடைவேளைக்கு முன்னும் பின்னுமாக இரு கதைகள் தனித்தனியே படம் பிடிக்கப்பட்டுள்ள துணிச்சல், கே. பி. யின் தன்னம்பிக்கையையும் உணர்த்தும்.

3. இரண்டும் அழுத்தமான கதைகள். பாராட்டுக்குரியவர்கள்: அனுராதா ரமணன்; அனந்து.

4. ஆண் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும் துணிவைப் பெண் குலத்துக்கு ஊட்டியுள்ள சிறப்பு.

5. ஒளிப்பதிவு. காமிராவின் அற்புதப் படப்பிடிப்பு. குறிப்பாக அருவிக் காட்சிகள் பல்வேறு கோணங்களில். நன்றி: ரகுநாத ரெட்டி.

6. பாடல்கள் இல்லை எனினும் இசை இருக்கிறது. வி. எஸ். நரசிம்மன். சாமா, தேஷ் ராகங்கள், வயலின் இசையில் காட்சியுடன் இழைகின்றன. மனம் நிறைகிறது.

7. அறிமுக கணேஷ் குமரேஷ்; அறிமுக யாமினி — இவர்களைச் சிறப்பாக நடிக்க வைத்த இயக்குனரின் ஆற்றல்.

8. முதல் கதையில் அனுதாபத்துக்குரிய செண்பகம்; தட்டிக் கேட்கும் வீரம் மிக்க வைஷ்ணவி. பின்னவர் நடிப்பு அசத்துகிறது.

9. இரண்டாவது கதையில் அனுதாபத்துக்குரிய கோடம்பாக்கம் துணை நடிகர்கள்; இறுதியில் கொடுமையை எதிர்க்கத் துணியும் யாமினி. நிற்கிறார். நின்று நிலைப்பார்.

10. தலைநிமிர்ந்து நடக்கப் போகிறவர்கள், படம் பார்க்கிற பெண்கள் — தேங்க்ஸ் டு கே. பி.

11. ஹேட்ஸ் ஆஃப் டு வைஷ்ணவி — பெண் குலமே பெருமைப்படும்.


12. 'ஏன்தான் பெண்ணாய்ப் பிறந்தோமோ' என்ற சொற்கள் இனி வழக்கொழிந்து போயின.

— கி. ராஜேந்திரன்



அ.தி.மு.க
அரசியல்
விளையாட்டு

தயாரிப்பு: ஜலி





ஹெக்டே மனம் திறந்த பேட்டி!

"நான் தார்மீக அரசியலைக் கடைப்பிடித்தது குற்றமா?"

நிருபர்: நீங்கள் கர்நாடகாவின் முதலமைச்சராக இருந்த பொழுது வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் (NRI) அசோசியேஷன் ஒன்றிற்கு, பெங்களூர் அபிவிருத்தி வாரியம் (BDA) 110 ஏக்கர் நிலம் வழங்குவதாகத் தீர்மானம் செய்தது. இதிலுள்ள ஊழல் குற்றச்சாட்டைப் பற்றி விசாரணை செய்வதற்கென்று ஜஸ்டிஸ் குல்தீப் சிங் கமிஷன் நியமிக்கப்பட்டது. இந்தக் கமிஷனின் முடிவுகளைப் பற்றி ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

ஹெக்டே: அரசு அறிக்கையின்படி, பெங்களூர் அபிவிருத்தி வாரியம், என். ஆர். ஐ. அசோசியேஷன் ஒன்றிற்கு 110 ஏக்கர் நிலம் வழங்கவிருக்கும் உத்தேசத்தைப் பற்றி விசாரிக்க இக்கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது. ஒரு சாண் நிலம் கூட விற்கப்படவோ அல்லது பரிசாக வழங்கப்படவோ இல்லை. ஒரு உத்தேசத்தைப் பற்றி எப்படி விசாரணை செய்ய முடியும்? இந்த உத்தேசம் ஒன்றரை ஆண்டு காலமாக அரசாங்கத்தின் முன்பு இருந்தது. அதற்குப் பிறகும் நான் ஓராண்டு காலம் முதலமைச்சராக இருந்தேன். நான் இத் திட்டத்தைப் பற்றிய ஒருவிதமான முடிவும் எடுக்கவில்லையே. அப்படியிருக்கையில், விசாரணைக் கமிஷன் என்னை எப்படிக் குற்றம் சாட்ட முடியும்? இந்தக் கமிஷனே ஒரு பெரிய கேலிக் கூத்துத்தான்.

நிருபர்: இந்தக் கமிஷனின் அறிக்கை அரசியல் நோக்கமுள்ளது என்று சொல்கிறீர்களா....?

ஹெக்டே: நிச்சயமாக!

நிருபர்: அப்படியென்றால், இந் நாட்டில் நீதிபதிகள் பாரபட்சமற்றவர்கள் இல்லை என்று சொல்கிறீர்களா?

ஹெக்டே: இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போன்ற நீதி நிலைமை இன்று இல்லை என்று வருத்தத்துடன் சொல்கிறேன். நீதிபதிகளை நியமிப்பதில் அரசியல் தலையீடு நிறையவே இருக்கிறது. அலகாபாத் உயர்நீதி மன்றம் இந்திரா காந்திக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய நிகழ்ச்சிக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி, இந்திரா காந்தி காலத்திலும் சரி, ராஜீவ் காந்தி ஆட்சியிலும்

சரி பொறுப்புள்ள நீதிபதிகளையும், அதிகார வர்க்கத்தையும் விலை பேசி விட்டது.

நிருபர்: நீதிபதிகளோ பாரபட்சமுள்ளவர்கள். அரசியல் நோக்கு உள்ளவர்கள் என்று நீங்கள் சொன்னால், ஊழல் குற்றச்சாட்டுகளை எப்படித்தான் விசாரணை செய்வது?

ஹெக்டே: என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். நான் நீதிமன்றங்கள் உபயோகமற்றவை என்று சொல்லவில்லை. நான் நீதிபதிகள் மீதும், நீதிமன்றங்களின் மீதும் பெரும் மதிப்பு வைத்திருக்கிறேன். நான் கர்நாடகா முதல்வராக இருந்த பொழுது, நீதிமன்றங்கள் பாரபட்சமின்றி இயங்கத் தேவையான வசதிகள் செய்து கொடுத்திருக்கிறேன். உயர் நீதிமன்ற நீதிபதி



களின் நியமனத்தில் நான் ஒரு பொழுதும் தலையிட்டதில்லை. ஆனால் இப்பொழுது நிலைமை வெகுவாக மாறி விட்டது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு நீதிமன்றங்களுக்கு இருந்த நற்பெயர், நன்மதிப்பு இன்று இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பம்பாய் நீதிபதிகள் குறித்தும் உச்சநீதிமன்ற நீதிபதிகளைப் பற்றியும் உலவும் குற்றச்சாட்டுகள், இன்றைய நீதிமன்றங்களுடைய மதிப்பை சர்ச்சைக்குரிய விஷயமாக்கி விட்டன. மரபுக்கு விரோதமாக, எல்லாரையும் விட அனுபவம் குறைவாக உள்ள நீதிபதியை (குல்தீப்சிங்) விசாரணைக் கமிஷன் தலைவராக ஏன் நியமிக்க வேண்டும்?

நிருபர்: குல்தீப் சிங் கமிஷனின் அறிக்கை தவிர தங்கள் மேல் ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகள், புகார்கள் இருக்கின்றனவே! இதற்கு என்ன காரணம்? உதாரணமாக, சாராய பாட்டிலிங் காண்ட்ராக்ட் அவதூறு (இதில் தங்கள் மருமகள் நிச்சானி சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது), M.D. அட்மிஷன் அவதூறு (தங்கள் மகன் பரத் ஹெக்டேயின் பெயர் அடிபட்டது), ரேவஜீடு பில்டர்ஸுக்கு நிலம் விற்கப்பட்டது சம்பந்தமாகப் புகார்கள்...

ஹெக்டே: ரேவஜீடு கட்டடக்காரர்கள் நிலம் வாங்கியதில் அரசாங்கத்திற்கு ஒரு சம்பந்தமும் இல்லை. சாராய பாட்டில்கள் விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் ஒருவிதமான ஊழல் குற்றச்சாட்டோ, வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டியதாகக் குற்றச்சாட்டோ கிடையாது. ஊழல் குற்றச்சாட்டுகளுக்குப் போதிய ஆதாரம், சாட்சி இல்லை என்றும் தவறுதலான எண்ணத்துடன் நீதிமன்றத்தில் புகார் சுமத்தியதாகவும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் நான் முதலமைச்சராகத்தான் இருந்தேன். இதைக் கவனித்தது கலால்வரித்துறை அமைச்சர். உற்பத்தி வரிகள் (எக்ஸைஸ்) பற்றிய புதிய விதிமுறைகள் வருமுன்னரே இந்த காண்டிராக்ட் வழங்கப்பட்டது.

நிருபர்: ஆனால் பிற்பாடு இந்த காண்ட்ராக்ட் ரத்து செய்யப்பட்டு விட்டதே...?

ஹெக்டே: ஏதாவது ஒரு அரசாங்க அதிகாரிக்கு மாற்றல் கொடுத்தால் கூட ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தால் மாற்றலை நிறுத்தி விடலாம். அதனால் காண்ட்ராக்டை ரத்து செய்தது ஒன்றும் அபூர்வமான விஷயம் இல்லை. காங்கிரஸ் கட்சிக்கு ஒரு பொழுதும் நான் முக்கியத்துவம் அடைவதோ, புகழ் அடைவதோ பொறுக்கவில்லை.

நிருபர்: சரி, டெலிபோனில் ஒட்டுக் கேட்டதாகக் குற்றம் சாட்டியது குறித்து ...?

ஹெக்டே: நான் இந்த விஷயத்திற்குப் பிறகு வருகிறேன். M.D. அட்மிஷன் பற்றிக் குறிப்பிட்டீர்கள். அதற்குப் பதில் சொல்கிறேன். ஒரு முதலமைச்சரின் மகன் மெடிகல் காலேஜில் இடம் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தால் அது ஒன்றும் கஷ்டமான வேலை இல்லை. ஆனால் நானோ **discretionary quota**வையே ஒரேயடியாக எடுத்து விட்டவன். என் மகனோ, வேறு உறவினர்களோ அரசியல் விஷயங்களில் தலையிட மாட்டார்கள். நான் ஏழு ஆண்டுகள் முதல்வராக இருந்த காலத்தில் என் மகன் ஏதாவது அதிகாரியுடன் போய்ப் பேசியிருக்கிறானா என்று விசாரித்துப் பாருங்கள்!

நிருபர்: அப்படியென்றால் ஏன் உங்கள்


வளரும் வயதில் குழந்தைகளுக்குத்
தேவை
காம்ப்ளான்
ஏனெனில், காம்ப்ளான், குழந்தைகளுக்கு
அன்றாடம் தேவைப்படும் அத்யாவசிய
ஊட்டச்சத்தை வழங்குகிறது.
குழந்தைகளின் வளர்ச்சிப் பருவம்.
சாதாரணமாக 15 அல்லது 16
வயதிலே நிறைவு பெறுகிறது. இந்த
வளர்ச்சிக்கு அடிப்படையான
ஊட்டச்சத்து, புரதமாகும். ஆகவே,
உங்கள் குழந்தைகளுக்கு இப்போது
காம்ப்ளான் மிகமிக அவசியம். புரதச்
சத்துக்களிலேயே தலைசிறந்த பால்-
புரதம் (20%) கொண்டது
காம்ப்ளான். மேலும்
22 ஆதார உணவுச்சத்துக்களும்
காம்ப்ளானில் உள்ளன.
குழந்தைகள் ஆசையோடு கேட்டு
அருந்தும் சுவைகளில் கிடைக்கிறது
காம்ப்ளான்.
Complan
23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்க்கத் தேவையில்லை
காம்ப்ளான்®
GK/62/203 TAM
திட்டமிட்ட பரிபூரண உணவு



பாவம் தமிழ்த்தாய்!

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் தமிழக அரசின் சார்பில் அண்மையில் மதுரையில் கிராமியக் கலை விழா ஒன்றை நடத்தியது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி தொடங்கும் போது தமிழ்த்தாய் வாழ்த்து பதிவு செய்யப்பட்ட ஆடியோ கேசட்டைப் போடச் சொல்லி அனைவரும் எழுந்து நின்றனர். கேசட் ஏதோ மக்கர் செய்யவே, மேடையிலிருந்து ஒரு குரல் வந்தது. 'நாமே பாடுவோமே' என்று.

மேடையிலிருந்தவர்கள் பாட ஆரம்பித்தனர். மைக் முன் நின்று பாடத் தொடங்கியவர் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றச் செயலாளர் கவிஞர். கு. ம. பாலசுப்பிரமணியன். **"நீராரும் கடலுடுத்த..." எனத்** தொடங்கி முதல் வரியைப் பாடி முடித்தவுடன்,

"அடுத்த வரி என்ன?" என்று அருகில் இருந்தவரிடம் கேட்டார். அதுவும் அனைவரின் காதிலும் விழுந்து விடவே அரங்கம் சிரித்தது. இது போதாதென்று வரிகளை மாற்றி மாற்றிப் போட்டுப் பாடி, **முக்கால் பாட்டோடு உட்கார்ந்து விட்டனர். பாவம்** தமிழ்த்தாய்! செம அடி!

— க. மான்.

மகன், மருமகன்களின் பெயர்கள் எல்லா ஊழல் குற்றச்சாட்டுகளிலும் அடிபடுகின்றன?

ஹெக்டே: இதற்கெல்லாம் பிளாக் மெயில் செய்வதையே தொழிலாகக் கொண்ட சிலர்தான் காரணம். எனக்குக் களங்கம் உண்டாக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி இவர்களை ஊக்குவிக்கிறது. இந்திய சரித்திரத்திலேயே, என்னைத் தவிர வேறு யாராவது ஒரு முதல் அமைச்சர் தம் மகனின் மீது சாட்டப்பட்ட ஒரு சாதாரண குற்றச்சாட்டுக்காக விசாரணைக் கமிஷன் நியமித்ததுண்டா...? இந்த நாட்டில் எத்தனையோ மகன்கள், மருமகன்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய எல்லா கதைகளும் எனக்குத் தெரியும்... ரேவஜீடு பற்றிக் கேட்டீர்கள். அந்த வழக்கில் முதலமைச்சரோ, புறநகர் வளர்ச்சி அமைச்சரோ ஒரு விதத்திலும் தங்கள் பதவியை துஷ்பிரயோகம் செய்யவில்லை என்று தீர்ப்பு வழங்கியுள்ளது உயர்நீதி மன்றம். அது அரசாங்க நிலமே இல்லை.

நிருபர்: அரசாங்க நிலமாக இல்லாவிட்டாலும், நிலத்தை விற்பதில் அரசாங்கத்தின் அனுமதி தேவையாக இருந்தது அல்லவா?

ஹெக்டே: ரேவஜீடு பில்டர்ஸில் எனக்கு வெகு தூரத்து உறவினர், அதாவது என் மருமகனின் சகோதரியின் கணவர் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதற்காக அரசாங்கம் அனுமதியளிக்க மறுக்க முடியுமா? இப்படியே போனால் அரசாங்கத்தில் ஒரு வேலையும் நடக்காது. டெலிஃபோன் ஒட்டுக் கேட்பது பற்றிக் குறிப்பிட்டீர்கள். இது நாடு முழுவதிலும், இப்பொழுது நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஸி.பி.ஐ.யின் புலன் விசாரணையின்படி, ராஜீவ் காந்தி காலத்தில் ஒரு வருடத்தில் 66 பாராளுமன்ற உறுப்பினர்களின் தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டதாகத் தெரிகிறது.

நிருபர்: அப்படியென்றால் தாங்கள் ஒட்டுக் கேட்டதை மறுக்கவில்லை....?

ஹெக்டே: நான் எப்படித் தொலைபேசிகளில் ஒட்டுக் கேட்க முடியும்?

நிருபர்: நீங்கள் என்றால், நீங்களே செய்ய வேண்டியது இல்லை.. உங்கள் அதிகாரிகள்...

ஹெக்டே: அதிகாரிகள் தாங்களாகவே செய்வார்கள்.

நிருபர்: அதிகாரிகளுக்கு யார் உத்தரவு வழங்குவார்கள்?

ஹெக்டே: முதல் முதலாக வீரேந்திர பாட்டில் காலத்தில் அதிகாரிகளுக்கு போனில் ஒட்டுக் கேட்க உத்தரவு வழங்கப்பட்டது. அது அப்படியே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நிருபர்: யாருடைய தொலைபேசிகளை ஒட்டுக் கேட்க வேண்டும் என்று அதிகாரிகளுக்குப் பட்டியல் கொடுக்கப்படுமா? அவர்களுக்கு எப்படித் தெரியும் யார், யாருடைய தொலைபேசிகளை ஒட்டுக் கேட்க வேண்டும் என்று?

ஹெக்டே: இது மாநில உளவுத் துறை அதிகாரிகளுடைய வேலை. அல்லது கடமை. முதலமைச்சரையோ, வேறு அமைச்சர்களையோ கலந்து கொள்ள வேண்டிய இல்லை.

நிருபர்: ஜஸ்டிஸ் குல்தீப்சிங் கமிஷனின் அறிக்கையைத் தொடர்ந்து, அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? தாங்கள் குற்றமற்றவர் என்ற முடிவை எடுப்பார்களா?

ஹெக்டே: எனக்குத் தெரியாது. எந்தக் குற்றத்திலிருந்து என்னை விடுவிப்பார்கள்? குற்றம் செய்திருந்தால்தானே?

நிருபர்: பெங்களூர் அபிவிருத்தி வாரியம், என்.ஆர்.ஐ. அசோசியேஷனுக்கு நிலம் வழங்கும் விஷயத்தில் உள்ள ஊழல் உங்களுக்குத் தெரிந்தும், தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பது குற்றச்சாட்டு.



"வேற வீடு தேடிக்கிட்டிருக்கேன்!"

"இங்கே என்ன அசௌகர்யம்?"

"வாடகை பாக்கிதான்...."

— மணியன் தர்மலிங்கம்.

ஹெக்டே: நான் என்ன நடவடிக்கை எடுக்கவில்லை? பெங்களூர் அபிவிருத்தி வாரியத்தின் தீர்மானம் பற்றி எனக்குத் தெரியும். அது ஒரு ரகசியமும் அல்ல. முதலமைச்சர் என்ற முறையில் எனக்கு பெங்களூர் நகரத்தின் வளர்ச்சியில் அக்கறை இருந்தது. நான் முதலமைச்சராக இருந்த பொழுது ஒவ்வொரு சனிக்கிழமையும், பெங்களூரில் எல்லா இடங்களுக்கும் விஜயம் செய்வேன். பெங்களூரை, அதன் சுற்றுவட்டாரத்தை ஒரு அழகிய நகராக உருவாக்க ஆசைப்பட்டேன்... என்ன தவறு?

நிருபர்: ஆனால் குல்தீப்சிங் கமிஷன் அந்த என். ஆர். ஐ. அமைப்பு ஒரு போலி அமைப்பு என்று கூறியுள்ளதே?

ஹெக்டே: குல்தீப் சிங் கமிஷன் சொன்னால், அது வேதவாக்காக ஆகி விடுமா? குல்தீப் சிங் கமிஷனின் அறிக்கையே ஒரு மோசடி என்று நான் சொல்கிறேன். முதலாவதாக 110 ஏக்கர் நிலம் பெங்களூர் அபிவிருத்தி வாரியத்திடம் இல்லவே இல்லை! 65 ஏக்கர்தான் இருந்தது. மீதி 45 ஏக்கர் இன்னும் விவசாயிகளிடம்தான் இருக்கிறது. மேலும் என். ஆர். ஐ. பண விவகாரங்களில் ரிசர்வ் வங்கியின் அனுமதி அவசியம். ரிசர்வ் வங்கி பரிசிலனை செய்த பிறகு அனுமதித்த, 55 லட்ச ரூபாய், கர்நாடக அரசிடம் இன்னும் இருக்கிறது. இதில் கர்நாடக அரசு ஒரு நயா பைசா கூட இழக்கவில்லை.

நிருபர்: இந்த அடிப்படையில் பார்த்தால், அரசாங்கம் குல்தீப் கமிஷனின் அறிக்கையைச் சட்டை செய்யாது என்று நினைக்கிறீர்களா?

ஹெக்டே: எனக்குத் தெரியாது. ஆனால் இது எவ்வளவு வெட்கக்கேடான விஷயம். ஒரு மதிப்பிற்குரிய மனிதரை ஒருவேளை இப்படி இருக்கலாம், ஒருவேளை இப்படி நடக்கலாம் என்ற அடிப்படையில் குற்றவாளி என்று அறிக்கை வெளியிடுவதா! அப்படிச் செய்த இந்த நீதிபதி பெரிய அறிவாளிதான்! (உணர்ச்சியுடன்) **Probable.... Possibilities!**

நிருபர்: நீங்கள் ஏமாற்றமடைந்திருக்கிறீர்களா?

ஹெக்டே: ஏமாற்றம் என்பதை விட, நாட்டின் இன்றைய நிலை கண்டு வருத்தம் என்று சொல்லலாம். நான் தார்மீக அரசியல் பாதையில் நடப்பேன் என்று சொன்னது குற்றமா? நானும் காங்கிரஸ்காரர்கள் போல் திருடனாக வேண்டுமா? நானே என் மகன் மேலும், என் மேலும் விசாரணைக் கமிஷன்களை ஏன் நியமிக்க வேண்டும்? ஏன் லோக் யுக்தா அமைத்து அதற்கு முதல் மந்திரியையும் விசாரிக்க அதிகாரம் கொடுக்க வேண்டும்? காங்கிரஸ் இந் நாட்டை, போஃபர்ஸ் போன்ற ஊழல்களில் கோடிக்கணக்கில் கொள்ளை அடித்திருக்கிறது. மூன்று கோடி ரூபாய் கால்நடைத் தீவன மிஷின் ஊழலை (பல்ராம் ஜாக்கர் சம்பந்தப்பட்டது) ஏன் விசாரிக்கவில்லை? அந்தப் பணம் என்ன ஆயிற்று?

நிருபர்: தாங்கள் அடிக்கடி பதவியை ராஜினாமா செய்துள்ளீர்கள். அப்படிப் பட்ட ராஜினாமாக்களுக்கு இன்னமும் மதிப்பு இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? அல்லது கவனத்தைக் கவர்வதற்காக அவ்வாறு செய்கிறீர்களா?

ஹெக்டே: நான் பலமுறை ராஜினாமா செய்தது கொள்கைப் பிடிப்பினால்தான். 1984ல் பாராளுமன்றத் தேர்தலில் தோற்றவுடன், முதல்வர் பதவியிலிருந்து ராஜினாமா செய்தேன். அது அவசியமா? அந்த மாதிரி சட்டம் ஏதாவது இருக்கிறதா? 1964ல் எனது பஞ்சாயத்து மசோதாவை எனது கட்சியில் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால் மந்திரி பதவியைத் து[illegible]ன். இது கட்டாயமா? 1977ல் ஒ[illegible] வித்தியாசத்தில் பாராளுமன்றத் [illegible] தோற்றதால், நான் வகித்த மேலவ[illegible] பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்தேன். அப்பொழுது நான் எதிர்க் கட்சித் தலைவனாக இருந்தேன். இதற்கும் ஒரு நிர்ப்பந்தமும் இல்லை. இதற்கெல்லாம் ஒரு மதிப்பும் கிடையாதா?

நிருபர்: கடைசியாக திட்டக் கமிஷனிலிருந்து ராஜினாமா. பல மாறுதல்களை ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டு வருவதாக இருந்தீர்கள்... அதற்குள் திட்டக் கமிஷன் துணைத் தலைவர் பதவியை ராஜினாமா செய்ய நேர்ந்தது. இது குறித்து வருத்தம் உண்டா?

ஹெக்டே: என் வருத்தம் நாட்டின் நிலை பற்றியதுதானே தவிர தனிப்பட்ட வருத்தம் ஏதும் கிடையாது. அறிவு என்னுடைய தனி உடைமை என்று நான் நினைக்கவில்லை. என்னை விட அறிவாளிகள், திறமைசாலிகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் திட்டக் கமிஷன் பணிகளைச் செய்து விட்டுப் போகிறார்கள்.

பேட்டி: **ரமாமணி சுந்தர்**


மீண்டும் மீண்டும் அருந்தத் தூண்டும்
வின்ஸெண்ட்ஸ்
VINCENTS
FRUIT VITA
★ ஆரஞ்ச், லெமன்,
காக்டெய்ல், ஜின்ஜர், சோடா
மற்றும் பன்னீர் சோடா
★ CONTAINS NO FRUIT JUICE PULP
பழரசபானம்
மேங்கோ, பைனாப்பிள், க்ரேப்
மற்றும் ஆரஞ்ச்.
★ CONTAINS PERMITTED COLOUR AND ADDED FLAVOUR
VINCENTS
Vincents
MCS/VIN/494



தியாகம்: சுஜாதா
வாசகர் விமர்சனம்.

அட்டகாசமாக அறிமுகமாகும் அதமன்!

கடைசி மூன்று வாக்கியங்கள் கதையின் உயிர் நாடி.

கதையின் ஆரம்பத்திலிருந்து சொல்லப்படும் வாழ்க்கையின் அவசரப் பிக்கல், பிடுங்கல்கள் விலக, ஓர் ஆணாதிக்கச் சமுதாயப் பிரதிநிதியின் அந்தரங்கம் முடிச்சவிழ்ந்து கொட்டுகிறது.

உனக்குச் சம்பளம் அதிகம் எனக் கூறி, பொறுப்பைத் தட்டிக் கழித்து, சோம்பலில் சுகம் காண அலையும் மத்யமரில் ஓர் அதமன் அட்டகாசமாக அறிமுகம் ஆகிறான்.

தன்னால் வீட்டை, குழந்தைகளைப் பராமரிக்க முடியுமா? என்ற கேள்வியோ அல்லது கருவுற்ற நிலையில் ஓய்வு தன்னைவிட இவளுக்கல்லவா இப்போது தேவை என்ற எண்ணமோ ஏற்படாத அவன் இந்த யுகத்தின் மாடல் பிறவி!

— அ. திலகவதி, தஞ்சாவூர்.

புது வார்த்தைகள் அகராதி!

* சுஜாதா தமிழில் உருவாக்கிய புதிய வார்த்தைகளுக்குச் சில ஆண்டுகளில் ஒரு சிறு அகராதியே தயாரிக்கலாம். 'பயணித்தான்,' 'தொலை பேசினான்,' 'மத்யமர்' போன்ற வார்த்தைகள் ஏற்கெனவே புழக்கத்தில் வந்துவிட்டன. இக்கதையில், 'பல் உரசவும், முகம் சவரவும்,' 'குளிக்கப்பட்ட குழந்தைகள்' போன்றவைகளில் சொல் சிக்கனத்துடன் நகைச்சுவையும் இழையோடுகிறது.

— அ. ஷண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.

ரூ. 50 பரிசு பெறுபவர்:

அ. திலகவதி, கல்லூரி முதல்வர், அரசு மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

மற்ற விமர்சனங்கள் ரூ. 25/— சன்மானம் பெறுகின்றன.

தீர்வுகள் தெரியுமா?

* கதையாரம்பத்தில் அருணாவின் அவசர கதியான காலை நேரத்தை விவரிக்கையில் அரை வாக்கியங்களாகவே கமாப் போட்டு எழுதிக் கொண்டே போகிறார். ஒரு முழு வாக்கியம் முடிவதற்குள் அருணா ஐந்தாறு வேலைகளைச் செய்து விடுகிறாள். அவளது படபடப்பும், பரிதவிப்பும் முழுமையாக உணர்த்தப்படுகிறது. உரையாடல்கள் செயற்கையின்றி உண்மைப் பேச்சாகவே அமைந்துள்ளது. அருணாவின் ஒரு நாளைய பாடு ஏனென்று கேட்காமல் நம்பும்படி எழுதப்பட்டிருக்கிறது. சக்தி வாய்ந்த நடை. மத்யமர் பிரச்னைகள் எல்லோருக்கும் தெரியும். தீர்வுகள்? அது சுஜாதாவுக்குத் தெரியும் என்று நினைத்திருந்தேன்.

— கா. சுப்பிரமணியன், திருநெல்வேலி—6.

குழப்பியது ஏனோ?

* இரு இடங்களில் மட்டும் அருணாவின் கணவன் முரளியை ரமேஷ் என்று குறிப்பிட்டு எங்களைக் குழப்பியது ஏனோ! கதை ஆசிரியர் அறியாமல் செய்த தவறா? அல்லது வாசகர்கள் இதைப் பற்றியும் விமர்சிக்க வேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே செய்த தவறா?

— எம். தணிகை வேலன், ஆற்காடு.

(ஆசிரியர் குழாத்தின் கவனக் குறைவு. வருந்துகிறோம். — ஆர்.)

தீர்வு பெண்கள் கையில்...

* தீர்வு பெண்கள் கையில்தான் இருக்கிறது. ஒவ்வொரு தாயும் தன் குழந்தைகளை ஆண், பெண் பேதமின்றி வீட்டில் வேலை செய்யப் பழக்க வேண்டும். சலுகைகளைச் சமமாக அளிக்க வேண்டும். மணமான புதிதில் காதலும், தெம்பும் இருக்கும் போது கணவனுக்குப் பணிவிடை செய்து விட்டு, முடியாத நேரத்தில் கோபப்படுவதையும் தவிர்க்க வேண்டும்.

— க. சித்ரா, மன்னார்குடி.

விமர்சனங்கள்: தரமான அலசல் திறமைகள்

பின்னுரை: சுஜாதா

முத்தரசநல்லூர் பொன் ராஜேந்திரன் எனக்கு எழுதிய கடிதம்: ''ஜாதி இரண்டொழிய ரமேஷ் பாத்திரம் கண்களில் நீரை வரவழைத்து விட்டது. காரணம், நானும் ஒரு வேலையில்லாத — 28 வயதான பட்டதாரி. ஒவ்வொரு முறை அப்ளிகேஷன் போடும்போதும், ஒவ்வொரு இண்டர்வியூவின் போதும் நமக்கு இந்த வேலை நிச்சயம் கிடைக்கும் என மகிழ்ச்சியில் மிதந்தே 'கோட்டா'வின் மூலம் அடிபட்டவன். எங்கள் குடும்பம் இக்கதையில் வரும் ரமேஷினுடையதைப் போன்றதுதான்...''

இந்த உருக்கமான கடிதம் எனக்குக் கிடைத்த அதே சமயம் திருநெல்வேலி பாண்டியன் என்னைத் தேர்ந்த தமிழ் வார்த்தைகளில் திட்டி எழுதியிருந்தார்: ''அம்பி! வசை பாடாதே! பாடினா நாக்கை அறுத்து நடுவீதியில் வீசிடுவோம். ஜாக்கிரதை. யோவ்! பிராமணத்திக்கெல்லாம் தாலி கட்டி எங்க ஆள் சோறு போடறான்யா! காலம் மாறிப் போச்சுடா. உன் மகளைக் கூட ஒரு எஸ்.சி.தான் கல்யாணம் பண்ணப் போறான். எதிர்காலம் பதில் சொல்லும்.''

துரதிர்ஷ்டவசமாக எனக்கு மகன் இல்லை.

இந்தக் கடிதத்தில் பொதிந்துள்ள கோபம்... உண்மையைச் சொல்லும் போது வரும் கோபம்—ஒரு விதத்தில் என் கதையின் யோக்கியத்தைச் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் 'ஜாதி இரண்டொழிய' கதையில் நான் பிற்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யும் திட்டத்தை எதிர்க்கவில்லை. திட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுச் சலுகைகள் நிஜமாகவே பிற்பட்டவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பதையே குறிப்பிட்டேன்.

இந்தக் கதைகளின் பிரச்னைகள் மத்யமர் என்னும் வர்க்கத்தினருக்கு மட்டும் உரியனவா என்று சிலர் கேட்டிருந்தார்கள். இல்லை. இந்தப் பிரச்னைகள் எல்லா வர்க்கத்தினருக்கும் ஏற்படுகின்றன. மத்யமர் அவ்வகைகளுக்குத் தீர்வு காணும் விதம் வேறாக இருக்கும்.

முதல் இரண்டு கதைகளும் பிராமணர்கள் கதா பாத்திரங்களாக இருப்பது உறுத்தியது என்று சிலர் எழுதியிருந்தனர். பிராமணர்களைப் பற்றி எழுதுவதில் எனக்கு ஒரு பரிச்சயமும் தெளிவும் இருப்பதால் அந்தச் சௌகரியத்துக்குத்தான் எழுதினேன். அந்த மாதிரிச் சம்பவங்கள் மற்ற இனங்களின் மத்யமர் குடும்பங்களில் நடக்காது என்றில்லை. பெண்ணுக்கு அமெரிக்காவில் மாப்பிள்ளை பார்ப்பதும் சினிமா சந்தர்ப்பத்துக்காக அலைவதும் ஜாதிக்கு அப்பாற்பட்டவை. அதேபோல் பொய் சொல்வதும் சோரம் போவதும்.

விமர்சனக் கடிதங்கள் அனைத்தும் அதை எழுதியவர்களின் பண்பட்ட தரமான அலசல் திறமைகளைக் காட்டின. ஒரு கதை எழுதும் போது அதன் பற்பல சாத்தியக்கூறுகளை, மறை பொருட்களை யோசித்து யாரும் எழுதுவதில்லை. என்னைப் பொறுத்தவரையில் கதைக் கரு உதித்துவிட்டால் என் கணிப்பொறியின் முன்னிலையில் உட்கார்ந்தால் என்னை யாரோ செலுத்துவது போல்த்தான் உணர்கிறேன். ஆதாரக் கருத்து தோன்றுவதில்தான் சற்றுத் தடுமாறுவேன்.

மத்யமர் கதைகளில் பன்னிரண்டு கதைகளில் பதினொன்று என்னைச் சுற்றுப்பட்ட என் நண்பர்கள், நண்பர்களுக்குத் தெரிந்த மத்யம வர்க்கக் குடும்பங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளே. முற்றிலும் கற்பனை என்று சொன்னால் ஒரே ஒரு கதைதான்: ''நீலப் புடைவை ரோஜாப் பூ'' இந்தக் கதையில் ஒரு சிறப்பை வாசகர்கள் கவனிக்காததில் எனக்கு வருத்தம். கதை முழுவதும் ஓர் ஆங்கில வார்த்தைகூடப் பயன்படுத்தவில்லை!


பிரசுரமான அனைத்துக் கடிதங்களையும் நான் ரசித்தேன். இந்தக் கதைகள் புத்தகமாக வரும்போது வாசகர்களின் கடிதங்களையும் தொகுத்துப் பிரசுரிக்க அவர்கள் அனுமதி கோருகிறேன். அவர்கள் எனக்குக் கல்கி மூலமாகக் கடிதம் எழுதினால் புத்தகம் அனுப்புகிறேன்.

31·8·90





Situations/WPC/135/90



தலைமைப் பதவி...
நாங்களுந்தான் போட்டுப் பார்த்தோம்... அவரும்... உங்களுக்குத்தான் சரியாப் பொருந்துது! ஆஹா... ஆஹா...
திருநாவுக்கரசு
டி.வி. இருக்கு, கிம்பியடி...
ஸ்டாலின்
ராமராஜன்
சினிமா இருக்கு, கிம்பியடி.
தானானே... தானானே...
லியாகத் அலி கான் (ஜெ.)
டி.வி. மோகம்
சினிமா கவர்ச்சி
அரசியலுக்கும் உதவுமய்யா, தானானே... தானானே...
திருநாவுக்கரசு
கத்தரிக்காய் 4 ரூபாய்... கீரைக்கட்டு 3 ரூபாய்... வெங்காயம் 8 ரூபாய்...
வெண்ணெய் கிலோ - 70ரூ
நல்லெண்ணெய் கிலோ - 35ரூ
சமையல் எண்ணெய் கிலோ - 40ரூ
காபிக்கொட்டை கிலோ - 50ரூ
து. பருப்பு கிலோ - 14ரூ
எல்லாத்தையும் ஒரு பார்வை பார்த்திட்டே இல்லே.... பசி தீர்ந்திருக்குமே! கிளம்பு, கிளம்பு!



ஸ்ரீ
கல்கி

1990 செப்டம்பர் 23
மலர் : 49 இதழ் 8
பிரமோதூத புரட்டாசி 7



மனிதாபிமானம் வெல்லட்டும்!

வேலை வாய்ப்பிழந்து, சேமிப்பை முழுதுமாகப் பறிகொடுத்து, உடைமைகளை முற்றிலும் துறந்து, இவையெல்லாம் போதாக்குறைக்கு வழிநெடுக எத்தனையோ அவதிகளை அனுபவித்துக் கொண்டு குவைத்திலிருந்து தாய்நாடு திரும்பியுள்ள பல்லாயிரக்கணக்கான இந்தியர்களை எண்ணினால் மனம் கனத்துப் போகிறது.

ஆனால் இவர்களாவது தேவலாம்; திரும்பி வரவும் முடியாமல் அங்கேயே தங்கவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாக அவதிப்படும் பல்லாயிரக்கணக்கானோரை எண்ணுகையில் எப்படியோ திரும்பி வந்து சேர்ந்தவர்களை அதிர்ஷ்டசாலிகளாகக் கருத வேண்டியிருக்கிறது!

குவைத்திலும், ஈராக்கிலும், ஜோர்டானிலும் அகதிகள் முகாம்களில் பல்லாயிரக்கணக்கான இந்தியர்கள் வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் அவதிப்படுகிறார்கள். நெஞ்சை உலுக்கும் சோகச் செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன. இவர்களுக்கு உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை; குடிக்கத் தண்ணீர் கூட இல்லை! அதிலும் அவை பாலைவனப் பிரதேசங்கள். பகலில் அசாத்திய வெயில்; இரவில் அசாதாரணக் குளிர். இவர்கள் இருப்பதோ திறந்த வெளிகளில், தாற்காலிக கூடார முகாம்களில்.

இந்திய அரசு ஆரம்பத்தில் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிய பிறகு, திடுமென இப்போதுதான் விழித்துக் கொண்டிருக்கிறது. அந்த நாடுகளில் உள்ள இந்திய மக்களின் அவதியை ஒருவாறு புரிந்து கொண்டு, அவர்களுக்கு உணவும் உடையும் குடிநீரும் கிடைக்க முயற்சி எடுத்திருக்கிறது. அகதிகளைத் திரும்ப அழைத்துவர விமானங்களை அனுப்புகிறது. இதற்கெல்லாம் ஏராளச் செலவு ஆகிறது என்பதும், ஏற்கெனவே தடுமாறும் இந்தியப் பொருளாதாரம் இதனால் மேலும் பாதிக்கப்படப் போகிறது என்பதும் மெய்தான். ஆனால் அங்கே நம் சகோதரர்கள் அவதிப்படும்போது நம்மால் சும்மா இருக்க முடியாது. செலவுகளைத் தாங்கவும், அதற்கான தியாகங்களைப் புரியவும் இந்தியன் தயாராகவே இருக்கிறான்.

ஆனால் இந்தியாவின் மனிதாபிமான முயற்சிக்கு, ஈராக்கை முற்றுகை இட்டுள்ள அமெரிக்கா தடையாக நிற்கிறது என்பதுதான் அதிர்ச்சி! ஸத்தாம் செய்தது சரியல்லதான். குவைத் மீது படையெடுத்து, ஆக்கிரமித்து, அந்நாட்டை ஈராக்குடன் இணைத்துக் கொண்டது அநாகரிகமானதே. உலகமே கண்டித்தும் கேளாததால், ஈராக்கைக் குவைத்திலிருந்து பின்வாங்கச் செய்ய, முற்றுகை இடுவதுதான் வழி என்று அமெரிக்கா உள்ளிட்ட பல உலக நாடுகள் எண்ணுகின்றன. ஈராக்குக்கு வெளி உலகிலிருந்து எந்தவிதமான உதவியும் கிட்டாது போனால் — இறக்குமதியே இல்லை என்ற நிலை தோன்றினால் — ஈராக் பணியும் என்று கருதுகிறார்கள். எனவேதான் முற்றுகை.

தமது நாடு பிடிக்கும் வெறியால் தமது மக்களுக்கே துன்பம் நேர்வதை உணர்ந்து ஸத்தாம் தமது துருப்புக்களைக் குவைத்திலிருந்து வாபஸ் பெற்றால் நல்லதுதான். ஆனால் அதற்கான அறிகுறிகள் ஏதும் இப்போதைக்குத் தென்படாதபோது, ஈராக்கை வழிக்குக் கொண்டு வரும் அமெரிக்காவின் முயற்சி ஒரு பாவமும் அறியாத அகதிகளைப் பட்டினி போட்டுக் கொல்வதாக ஆகிவிடக் கூடாது. ஈராக்கை எதிர்ப்பது என்பது வேறு; ஈராக் தற்போது ஆக்கிரமித்துள்ள குவைத்தில் பிழைப்பு தேடிச் சென்ற பல்லாயிரக்கணக்கான அந்நியர்களின் நிலை வேறு. இந்த வித்தியாசத்தைப் புரிந்து கொண்டு அமெரிக்கா செயல்படட்டும். ஈராக்கிய அதிபர் ஸத்தாமும், இந்தியர்களைக் காப்பாற்றும் இந்தியாவின் கடமை உணர்வுக்கும் மனிதாபிமான உணர்வுக்கும் வரவேற்புக் கூறட்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

பாக்கெட்

கதை: பி.எஸ்.கிரி
படம்:



மென்பட்டு மேனி காக்க எளிய குறிப்புகள்



டாக்டர் பாரதி மாரு

கே: என் வயது 27. என் முகத்தில் சுருக்கம் விழுந்துள்ளது. புருவச் சுளிப்புடன், கன்னக்குழி, மஞ்சள் புள்ளிகளும் உள்ளன. இதனால் கிழடு தட்டியது போல் காட்சி அளிக்கிறேன். எனக்கு உதவுங்கள்.

ப: சருமம் வறண்டு விட்டதால்தான், முகச் சுருக்கம் ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து நிவாரணம் பெற கீழ் கண்டவாறு செய்யவும்:

கிளிசரின் அல்லது தேன், நசுக்கப்பட்ட வாழைப்பழம் கொஞ்சம், அத்துடன் நன்றாக அடித்துக் கலக்கப்பட்ட முட்டைக்கரு ஆகியவற்றை சேர்த்து கலக்குங்கள். தினமும் இதைத் தடவி 15 நிமிடங்கள் கழித்து நிறைய நீரில் முகத்தை அலசிக் கழுவுங்கள்.

கே: என் கண்ணுக்குக் கீழே தளர்ந்த கருப்பு வளையம் உள்ளது. இதனால் நான் கிழடு தட்டி ஆரோக்கியமற்று காட்சி அளிக்கிறேன். இதிலிருந்து நிவாரணம் பெறுவது எப்படி?

ப: பஞ்சை, உருண்டை போல செய்து, காய்ச்சாத குளிர்ந்த பாலில் முக்கி நனைத்து பிழியுங்கள். பிறகு, கண்ணுக்குக் கீழே தளர்ந்த இடத்தில் 10-15 நிமிடங்களுக்கு இதமாக ஒத்தடம் கொடுத்து பின் சிறிது நேரம் ஓய்வு எடுங்கள். அப்படியே இரவில் தூங்கி விடுங்கள். தினசரி இரண்டு முறை வீதம் ஏழு நாட்களுக்கு இப்படி செய்தால் குறிப்பிடத்தக்க பலன் கிடைக்கும்.

கே: என் முழங்கை, கால் முட்டி, விரலடிகளில் உள்ள சருமம் மிகவும் கடினமாகிவிட்டது. அதை நான் எப்படி மென்மைப்படுத்துவது?

ப: ஒரு தேக்கரண்டி கல் உப்பு, ஒரு தேக்கரண்டியில் ஏதாவது ஒரு காய்கறி எண்ணெய், அரை தேக்கரண்டி எலுமிச்சம் சாறு இவற்றை உங்கள் உள்ளங்கையில் வைத்து கலக்கி முழங்கை, கால்முட்டி, விரலடிகளில் அழுத்தி வட்ட வடிவில் தேய்க்கவும். வறண்ட, இருண்ட சருமம் உதிர்வதைக் காணலாம். பிறகு, சூடான நீரில் கழுவிய பின் உலர விடுங்கள்.

கே: என் கையில் ஏற்பட்டுள்ள வெடிப்பு காரணமாக சருமம் சுருங்கி விட்டது. இதை எப்படி நான் தீர்ப்பது?

ப: ஒரு தேக்கரண்டி தேன், ஒரு தேக்கரண்டி பாதாம் எண்ணெய், புல்லரிசிக்கூழ், 4 வெண்டைக்காய் ஆகியவற்றை கலக்கவும். ஒரு காரைக் கிண்ணத்தில் இவற்றை ஊற்றி மிக லேசாக சூடுபடுத்தவும். கைகளில் இதை பூசி 25 நிமிடங்கள் கழித்து கழுவலாம் அல்லது இரவு முழுவதும் அப்படியே வைத்திருந்து காலையில் கழுவினால் சீக்கிரம் நல்ல பலன் கிடைக்கும்.

கே: என் முகம் முழுவதும் உள்ள முடியினால், எனக்கு கஷ்டமாக உள்ளது. எந்த மேக்-அப் போட்டாலும் இது மறைவதில்லை. வீட்டிலேயே நான் செய்யக்கூடிய நிவாரணம் உண்டா?

ப: அரை கப் கடலை மாவு, அரை தேக்கரண்டி மஞ்சள், அரை தேக்கரண்டி வெல்லம், 2 தேக்கரண்டி பால் ஆகியவற்றை கலந்து, பேஸ்ட் போல குழைத்து முகத்தில் முடி உள்ள இடங்களில் தடவவும். 5-7 நிமிடங்களுக்கு உலர விடவும். பாதி உலர்ந்த நிலையில் அந்தக் குழைவை சிறு உருண்டைகளாக்கும் வகையில் சருமத்தை இதமாக தேய்க்கவும். இந்தக் குழைவு கருப்பாவதுடன், சில முடிகள் உதிர்வதையும் பார்க்கலாம். முடிக் கற்றையை வெல்லம் அகற்றி விடும். முடி வளர்ச்சியை மஞ்சள் தடுக்கும். எனவே இம்முறையை பொறுமையுடன் ஒரு மாதம் செய்து வந்தால், முடி வளர்வது குறைந்து விடும்.

வாசகர்களே!
உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி: Rexona-Tips on Skin Care, P.O. Box No. 756, Bombay-400 001.

டாக்டர் பதில்கள்:



தலைவலி மாத்திரைகள் தரும் 'தலைவலிகள்'!



● **இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்:**

தலைவலி, உடல்வலி, காய்ச்சல் போன்றவற்றிற்குக் கடைகளில் விற்கப்படும் சில ரெடிமேட் மாத்திரைகளை, சில டாக்டர்கள் சிபாரிசு செய்கிறார்கள். சில டாக்டர்களோ, 'அதையெல்லாம் யாரைக் கேட்டுச் சாப்பிட்டீர்கள்?' என நம்மைக் கேட்கிறார்கள். இதில் எது சரி?

● **டாக்டர் ரேவதி அனந்த், ஏ. வி. ஹாஸ்பிடல், சென்னை—18.**

தலைவலி, உடல் வலி, காய்ச்சல் போன்றவற்றிற்குக் கடைகளில் விற்கப்படும் சில ரெடிமேட் மாத்திரைகளை டாக்டர் ஆலோசனை இன்றிச் சாப்பிடுவது தவறு. உதாரணமாக, ஆஸ்பிரின் போன்ற மாத்திரைகளை அதிகமாக எடுத்துக் கொள்ளுவதால் வயிறு புண்ணாகி, இரத்தக் குழாய் வெடிப்பு ஏற்பட்டு **acute gastric bleeding** ஏற்படலாம். அளவுக்கு அதிகமாக பாரசிடமால் மாத்திரைகளைச் சாப்பிடுவதால் சிறுநீரகம் பாதிக்கப்படக் கூடும். மேலும் இம்மாதிரி மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனையின்றிச் சாப்பிடுவதால், காய்ச்சலின் காரணமும், தன்மையும் மாறுபட்டு, பிறகு சிகிச்சைக்கு இடையூறாகவும் ஆகலாம்.

● **எஸ். சங்கிலியாண்டி, காமய கவுண்டன்பட்டி:**

மூளை வளர்ச்சியின்றி—Mentally Retarded—உடல் உறுப்புக்கள் செயல் திறனற்றுக் குழந்தைகள் பிறப்பதற்குக் காரணங்கள் யாவை?

மூளை வளர்ச்சியின்றி உடல் உறுப்புக்கள் செயல் திறனற்றுக் குழந்தைகள் பிறப்பதற்குக் காரணங்கள் பல. 1. நெருங்கிய உறவிலேயே திருமணம் செய்து கொள்ளுதல். 2. வயதாகி, பெண் திருமணம் செய்து கொள்ளுதல்: உதாரணமாக, பெண் 35 வயதுக்கு மேல் செய்து கொள்ளும் திருமணத்துக்குப் பிறகு உண்டாகும் குழந்தைப் பேறு. 3. **Chromosomal abnormality** தம்பதியரில் யாரேனும் ஒருவருக்கு இருந்தால். 4. தாயார் கர்ப்பமாக இருக்கும் போது ஏற்படும் சில பாக்டீரியா, வைரஸ் கிருமிகளின் தாக்குதல். 5. கதிர் வீச்சுச் சிகிச்சைக்கு, கர்ப்பமாக இருக்கையில், உட்படுதல். 6. கர்ப்பமாக இருக்கும் போது போதைப் பொருட்களை உட்கொள்ளுதல். (கணவன் உட்கொண்டாலும், இந்தப் பாதிப்பு ஏற்படும்.) 7. ஆயுத பிரசவம் செய்யும் போது குழந்தையின் மூளைக்குப் பாதிப்பு ஏற்படுதல். 8. பிரசவத்தின் போது, அது கடினமானதாகி, குழந்தைக்குப் பிராணவாயு குறைந்து அதனால் குழந்தையின் மூளை பாதிக்கப்படுதல்.

தொகுப்பு: **எஸ். வி. என்.**

அதிர்ஷ்ட தேவதை

24

தாத்தாவுக்கு அன்றைய தினசரியில் வெளியாகியிருந்த செய்திகளைப் படித்துக் கொண்டிருந்தான் ரமணி. திடீரென்று அவருக்கு அலுப்பு உண்டாயிருக்க வேண்டும்.

''போதும்டா...'' என்றார்.

''அப்ப நான் கிளம்பறேன், தாத்தா.''

''ரெண்டு காலும் வலிக்கறதுடா. ரத்தம் கட்டிப் போனாப்ல இருக்கு...''

''ஏன் தாத்தா கத்தி வளைக்கறீங்க? பிடிச்சு விடுன்னு சொல்லுங்களேன்.''

''இதெல்லாம் நான் சொல்லித்தான் உனக்குத் தெரியணுமா...?''

''காலை நீட்டி ஸ்டூல்லே வைச்சுக்குங்கோ தாத்தா!''

அவர் கால்களை, அவன் சொன்னது போல, வைக்கவும் ரங்கன் அறையினுள் பிரவேசிக்கவும் சரியாக இருந்தது.

''என்ன ரங்கா?'' என்று ரமணி விசாரிக்க, தாத்தா, ''யார்டா, முதலாளி ரங்கனா... வா உட்காரு. அப்பப்ப ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வந்துட்டிருக்கியா?'' என்றார்.

''ரமணி சார்... நீங்க நகருங்க. தாத்தாவுக்கு நான் கால் பிடிச்சு விடறேன்'' என்றான்.

''நீ இப்ப நாப்பது ரூபாய் வேலைக்காரன் இல்லேடா ரங்கா.. லட்சாதிபதி. ரெண்டு வீட்டுக்குச் சொந்தக்காரன். கம்பீரமா அந்தச் சேர்ல உட்காரு'' என்றார் தாத்தா.

ரமணி சிரித்தான்.

''எதுக்குடா சிரிக்கிறே?''

''நீங்க பேசின விதம் என்னைச் சிரிக்க வைச்சது... அது எப்படி ரங்கனாலே கம்பீரமா உட்கார முடியும்... ஏழாவது தடவையா அவன் இஸபல் ஹாஸ்பிடல் லேர்ந்து மூந்தா நாள்தான் திரும்பி வந்தான். அமைதியாப் படுத்துக்கிட்டு ரெஸ்ட் எடுத்துக்கன்னு சொன்னாலும் கேக்கறதில்லே. நேத்திக்கு மட்டும் அவன் ரெண்டு வாட்டி பில்டிங்கைப் போய்ப் பார்த்து வந்தாச்சு.''

''நீ பேசிண்டே இரு... காலைப் பிடிச்சு விடாதே...''

''ஓ, அதை மறந்துட்டேன் இல்லே!''

''ஹாஹா.... ரமணி... ரொம்ப சுகமா இருக்குடா... உன் அப்பன் பெரியப்பன் யாரும் இதுவரை இப்படி சிசுருஷை செய்ஞ்சதில்லே...''

''காரணம் என்ன தெரியுமா, தாத்தா?''

''என்னடா..?''

''அவங்க கால்களையே இப்ப யாராவது பிடிச்சு விடணும். அவ்வளவு வயசாயிடுத்து.''

''சரி, பில்டிங்கிலே இன்னும் என்னென்ன வேலை பாக்கி இருக்கு?''

''முக்காலே மூணு விசமும் முடிஞ்சுட்டுது தாத்தா. மொஸாய்க்குக்கு ஆஸிட் பாலிஷ் போட்டுட்டிருக்காங்க. லைட் கனெக்ஷன் வந்தாச்சு. எல்லா வீட்டுக்கும்.''

''அப்ப சீக்கிரமே குடிபோயிடலாம்னு சொல்லு.''

''ஆனா காண்ட்ராக்டர் குஞ்சு சொன்னபடி எட்டு மாசத்துக்குள்ளே முடிக்கலே. 87 முடிஞ்சு 88 பிறந்துட்டுது.''

''பொங்கல் முடிஞ்சு ஒரு நல்ல நாள் பார்த்துக் கிரகப்பிரவேசம் செய்யலாமாடா?''

''செய்யலாம் தாத்தா.''

''பில்டிங்குக்கு என்ன பேர் வைக்கலாம்? ஒரு நல்ல பேராச் சொல்லு.''

''வெங்கடரமணி அபார்ட்மெண்ட்ஸ்ன்னு பேர் வைக்கலாம்னு நினைச்சுட்டிருக்கேன்.''

''என்னடா என் பேரா... எனக்கு என்ன நினைவுச் சின்னமா கட்டியிருக்கே?''

''இது உங்க ஐடியாதானே தாத்தா?''

''என் ஐடியா எப்படியடா வந்தது? எல்லாம் உன் நச்சரிப்பு... முன்னெல்லாம் அடிக்கடி, ஃப்ளாட் கட்டலாம், ஃப்ளாட் கட்டலாம்னு எங்கிட்ட வந்து தொண தொணப்பே... நான் கண்ணை மூடின மறுநாளே அதுக்காகப் பிரயத்தனம் செய்வேன்னு எனக்குப் புரிஞ்சுது. இவன் யார், நான் செத்தப்புறம் கட்டறதுக்கு, நான் உசிரோட இருக்கறப்பவே இவனுடைய ஆசை நிறைவேறட்டுமே அப்படீன்னு தோணித்து. ஆமாம், நிகரமா எவ்வளவு மிஞ்சும்?''

''கணக்கெல்லாம் சரியா எழுத மூணு பேரைப் போட்டிருக்கேன் தாத்தா... நான் தினசரி எல்லாத்தையும் சரிபார்த்துட்டுத்தான் தூங்கப் போறேன்.''

''நீ என்ன செய்யறேன்னா இப்பக் கேட்டேன்...? நன்னாப் பிடி... முழங்காலுக்குக் கீழே, ஆடு சதையில் கை வை.''

''குஞ்சு சொன்னார், குறைஞ்சது இருபது இருபத்திரண்டு லட்சமாவது உங்களுக்கு லாபமா வரும்னு. எனக்கு என்னமோ அது குறைவாப் பட்டது.''

பி.வி.ஆர்.

"என்னடா சொன்னே, இருபது இருபத்திரண்டு லட்சம் குறைவாப் பட்டதா..."

"ஆமாம் தாத்தா... இருபத்தஞ்சாவது தேற வேண்டாம்? அதுக்கு ஒரு வழி செய்ஞ்சேன்."

"என்னடா செய்ஞ்சே?"

"எம். எம். டி. ஏ., கார்ப்பரேஷன், அப்புறம் செக்ரடேரியட்னு எல்லா இடங்களுக்கும் நடையா நடந்து ஒரு ஸ்பெஷல் பர்மிட் வாங்கினேன்."

"எதுக்கு?"

"வாசப் பக்கத்திலே கேட்டுக்கு ரெண்டு பக்கத்திலேயும் நாலு நாலு கடைகள். மாடியிலே ஒண்ணு, கீழே ஒண்ணுன்னு. ஒவ்வொண்ணும் நூத்தம்பது சதுர அடி. ஒரு டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்ஸ் வைக்க, ஒருத்தர் ஒரு பக்கத்து நாலு கடைகளையும் வாங்கிக்கிட்டார். இன்னொரு பக்கத்திலே ஒரு வீடியோக் கடை, ஒரு ஐஸ்க்ரீம் பார்லர். ரெண்டு பேரும் சேர்ந்து நாலு கடைகள். அப்புறம் என்ன?"

"மாடியிலே இன்னும் நாலு கடைகள் இருக்கேடா?"

"சித்தப்பா பிள்ளை ரங்கு இந்த வருஷம் சி.ஏ. எழுதறான். அவன் சொந்தமாத் தொழிலை ஆரம்பிக்கிறதானா நல்ல இடம் வேண்டாமா? அவனுக்கு ரெண்டு கொடுத்துடலாம், நீங்க சரின்னு சொன்னா."

"சரி..."

"மீதி ரெண்டு இருக்கு இல்லியா? பெரியப்பாவோட பேரன் பேத்தி ரெண்டு பேரும் இன்னும் ஒண்ணு ரெண்டு வருஷத்திலே டாக்டர்களா திரும்பி வருவாங்க... அவங்க ரெண்டு பேருக்கும் சின்னதா கன்சல்டிங் ரூம். அமைச்சுக்கச் சௌகரியமா இருக்கும். இதுக்கும் நீங்கதான் தாத்தா அனுமதி கொடுக்கணும்."

"எழுதியே கொடுத்துடறேன் போறுமா" என்ற தாத்தா, "ஏண்டா, உனக்குன்னு எதுவும் தனியா நீ வைச்சுக்கலையா?" என்றார்.

"நான் எப்படி தாத்தா உங்க பணத்திலே கை வைக்க முடியும்? ஒண்ணரை வருஷமா உழைச்சிருக்கேன். அதுக்கு நீங்க சரியா



ஏதானும் கொடுத்தா சந்தோஷமா வாங்கிக்கறேன்.''

''ரங்கா, நீ கொஞ்சம் வெளியே போய் இரு!'' என்றார் தாத்தா.

''வேண்டாம் தாத்தா. அவன் இங்கேயே இருக்கட்டும்...''

''நான் போயிடறேன், ரமணி சார்!''

''போயிடு'' என்ற தாத்தா ரங்கன் வெளியே செல்லும் வரை காத்திருந்தார்.

''நான் சொல்லப் போறது உன் அம்மா அப்பாவுக்குக் கூட இப்பத் தெரியப்படாதுடா, ரமணி... விஷயம் அப்படி இருக்கிறப்ப, ரங்கன் மட்டும் இருக்கலாமா... அது ஓர் அசத்து. அசமஞ்சம்... தத்துப்பித்துன்னு வெளியே சொல்லி வைச்சா?''

''சரி சொல்லுங்க, தாத்தா.''

''இப்ப எவ்வளவு லாபம் வர்றது? சுமாராச் சொல்லு, போறும்.''

''நாலு கடைகளையும் பத்து லட்சத்துக்கு வித்தேன் தாத்தா... ஆனா எட்டு கடைகளையும் கட்டி முடிக்க எனக்கு லட்சம் ரூபாய் கூட ஆகலே... நிறைய மணல், சிமெண்ட், மரம், கம்பி எல்லாம் மிஞ்சியிருந்தது. நம்ப பழைய வீட்டோட தேக்கு மரமெல்லாம் உபயோகமாச்சு.''

''மொத்த லாபத்தைச் சொல்லுடா படவா!''

''கிட்டத்தட்ட முப்பது லட்சம்!''

''இதை வைச்சுட்டு என்ன செய்யலாம்டா?''

''எனக்கு என்ன தெரியும், தாத்தா.''

''மூணு பெண்களுக்கு, ஆளுக்கு லட்சம்னு கொடுக்கறேன். அம்பதாயிரம்னு மொதல்லே நினைச்சுட்டிருந்தேன். பாக்கியை நம்ப ரெண்டு பேர் பேர்லேயும், ஜாயின்ட் அக்கௌண்ட்லே பாங்க்லே போட்டுடுவோம். நான் ஒருநாள் இல்லாட்டா ஒரு நாள் கண்ணை மூடாம இருக்க மாட்டேன். அப்ப ஜாயின்ட் அக்கௌண்ட் சிங்கிள் அக்கௌண்ட்டா உன் பேர்ல வந்துடும். இதுக்கு நான் என்ன எழுதித் தரணுமோ அதை எழுதிக் கொடுத்துடறேன்...''

''தாத்தா, உங்களுக்கு நிறைய பேரன் பேத்திகள் இருக்கிறப்ப எனக்கு மட்டும் இப்படிச் செய்தா.....''

''மூடுடா வாயை... எனக்கு இருக்கிறது ஒரு பேரன்தாண்டா.. அது நீதான்.. நீ ஏமாத்த மாட்டே. பொய் சொல்ல மாட்டே.. வாயாலே எல்லாருடைய வயத்தெரிச்சலையும் நீ கொட்டிக்கிறவன்தான்.. ஆனா உன் மனசு சுத்தம்டா. இனிமேல் இதைப் பத்தி என்கிட்டப் பேசாதே, ஆமாம்!''

ரமணி நீண்ட நேரம் பதில் பேசவில்லை. சிறு வயதிலிருந்து அவன் ஒருவன்தான் தாத்தாவுடன் நெருங்கிப் பழகியிருக்கிறான். ஆனால் இத்தனை ஆண்டு காலமாகத் தாத்தா தன் மனத்தில் அவனுக்காக ஒரு பிரத்யேக இடத்தை வைத்திருக்கிறார். அதில் என்னென்ன வைரங்களையும் முத்துக்களையும் கொட்டி மூட வேண்டும் என்று யோசித்து வந்திருக்கிறார். அகஸ்மாத்தாக, பல குடியிருப்புகளைக் கொண்ட கட்டடம் கட்டினால் நன்றாக இருக்கும் என்று ஒரு தடவை அவன் அவரிடம் கூறியிருக்கிறான்.

அப்போது அவர் அலட்சியமாக இருந்தார். ஆனால் எண்ணம் உள்ளே பதிந்து போயிருக்கிறது. எண்ணத்தை அவர், பிரத்தியேகமான இடத்தில் பூட்டி வைத்து, போன வருடம்தான் வெளியே கொட்டியிருக்கிறார்.

ஏன் போன வருடம்?

திடீரென்று, ''தாத்தா!'' என்றான்.

பாதிக் கண் அயர்ந்து போயிருந்த தாத்தா, கண் திறவாமலே, ''என்னடா?'' என்றார்.

''நான் யாரையும் ஏமாத்த மாட்டேன். என் மனசு சுத்தம்னு எப்படித் தாத்தா நீங்க கண்டுபிடிச்சீங்க? நான் வேஷம் போட்டுட்டே வாழ்ந்து கொண்டிருக்கலாம், இல்லியா?''

''ராஸ்கல், என்னைக் கேள்வியா கேட்கிறே?''

''ஆமாம் தாத்தா!''

''சரி நான் கேக்கறேன், பதில் சொல்லுடா!''

''கேளுங்க.''

''இந்தச் சோனிப் பயல் யாரு?''

''ரங்கன்தானே... அவன் என் சிநேகிதன்.''

''சரி, இதுக்குப் பதில் சொல்லு.''

''நீங்க யக்ஷன்.. நான் தர்மபுத்திரர்னு எண்ணமா தாத்தா?''

''ஆமாம்டா, படவா... சொல்லு... அவனோட லாட்டரி டிக்கட்டையெல்லாம் நீதானே பத்திரப்படுத்தி வைச்சிருந்தே?''

'ஓ.சி' பேப்பர் கேட்கும்போதெல்லாம் 'நான் படிக்கப் போறேன்' என்று சாக்கு சொல்லி வந்த பக்கத்து வீட்டுக் காரனை ஏமாற்ற...

''சார், கொஞ்சம் மண்வெட்டி கிடைக்குமா?''

''அடாடா! இதோ தோட்ட வேலை ஆரம்பிக்கப் போறேன்!''

''ஓ! தோட்ட வேலை செய்யப் போறீங்களா? அப்போ பேப்பர் படிக்கமாட்டீங்க! கொஞ்சம் பேப்பர் தாங்களேன்! படிச்சுட்டுத் தர்றேன்!''

— சம்பத்குமாரி





— ஆர். ரத்னசாமி

''ஆமாம்.''

''டிக்கெட் கடைக்காரன் உன் பேரைத் தானே எழுதி வைச்சிருந்தான்?''

''ஆமாம்.''

''நீ நினைச்சிருந்தா, அது என் டிக்கெட், நான் வாங்கின டிக்கட்டுன்னு சாதிச்சிருக்கலாம் இல்லியா?''

''ஆமாம்.''

''பணம்னு வர்றப்ப சொந்தம் பந்தம் சிநேகம் எல்லாம் காத்தாப் பறந்துடும்டா படவா! உனக்கு நிறையப் பணம் சம்பாதிக்கணும்னு பேராசையா இருக்கு. ஆனா அந்தப் பணத்தைக் குறுக்கு வழியிலோ, இன்னொருத்தரை ஏமாத்தியோ சம்பாதிக்க உன் மனசு சம்மதிக்கலே... இப்பச் சொல்லு, உன் மனசு சுத்தம்தானே?''

''தெரியாது, தாத்தா.. என்னைப் பத்தி நானே இன்னும் தெரிஞ்சுக்கலே...''

''இன்னொரு விஷயம்!''

''என்ன தாத்தா?''

''தை பொறந்ததும், கிரகப் பிரவேசம். அது முடிஞ்சதும் கலியாணம். மாலுவுக்கும் உனக்கும் என் கண் முன்னாடி நடக்கணும். நீங்க ரெண்டு பேரும் ஊஞ்சல்லே உட்கார்ந்ததும், நான் பாட ஆரம்பிப்பேன்.''

''அதான் பல தடவை சொல்லியாச்சே, தாத்தா... சகிச்சுக்கறேன்...''

''படவா... நான் நன்னாப் பாடுவேன்டா.. மாலுவுக்கு அவா என்ன போடறாளோ போடட்டும். நான் வைர நெக்லஸ் போடப் போறேன். அவகிட்ட இப்பவே சொல்லித் தொலைக்காதே!''

''நான் வரேன் தாத்தா.. எனக்கு நிறைய வேலையிருக்கு.''

''மறுபடியும் வர்றப்ப, பாங்க் டெபாசிட் ஃபாரத்தோட வரணும். இல்லாமப் போனா தொலைச்சுப்புடுவேன்...''

''சரி தாத்தா.''

ரமணி நகர்ந்தான்.

''நம்ப கட்டடத்துக்கு என்ன பேர் வைக்கிறதுன்னு கேட்டேனே...''

''நான் சொன்ன பேர்தான் வேண்டாம்னு சொல்லிட்டீங்களே, தாத்தா!''

'''அதிர்ஷ்ட தேவதை'ன்னு வைச்சுடு. அதான் பொருத்தமான பெயர்!''

''என்ன தாத்தா, இப்படி ஒரு பெயரா?''

''ரங்கனுக்கு ஓர் அதிர்ஷ்டம் அடிச்சது. எனக்கும் போற வயசிலே ஓர் அதிர்ஷ்டம் அடிச்சு முப்பது லட்சமும் வீடும் கிடைக்கிறது. என் மூணு பிள்ளைகளும் இப்படித் தனித்தனி வீடு கிடைக்கும்னு எதிர்பார்க்கலே. அவங்களுக்கும் அதிர்ஷ்டம்.''

''எனக்கும் அதிர்ஷ்டம்னு சொல்லுங்களேன்....''

''அதான் மாட்டேன்... உனக்கு ஒரு சான்ஸ் கிடைச்சுது. ராட்சசன் அதிர்ஷ்டத்தை ஒரு லாட்டரி டிக்கெட் மூலமா உன் மடியிலே போட்டான்... நீ? அதைத் தூக்கி எறிஞ்சே... உனக்குக் கிடைக்கறதெல்லாம் உன் உடம்போட உழைப்புக்கு ஊதியம்! மனசோட சுத்தத்துக்குப் பரிசு... சரி சரி, நடையைக் கட்டு... எனக்குத் தூங்கணும்.''

ரமணி வெளியே வந்தான்.

அறைக்குச் சற்று அப்பால் சுவரோடு சுவராய் ஒட்டிக் கொண்டு ரங்கன் நின்று கொண்டிருந்தான்.

''என்னடா ரங்கா இங்கே நிக்கறே?''

''உங்களுக்காகத்தான், ரமணி சார்!''

''என்ன வேணும்?''

''சொன்னாக் கோவிச்சுக்க மாட்டீங்களே?''

''கோபம் வர்ற நிலையிலே நான் இல்லே, ரங்கா! சொல்லு.''

ரங்கன் சொன்னான்.

கோபம் வராத நிலையில் இருந்த ரமணிக்குக் கோபம் வரவில்லை. ஆத்திரமும் ஆக்ரோஷமும் பீறிட்டு வந்தன.

''ராஸ்கல்... உனக்கு என்னடா புத்தி மழுங்கியா போச்சு?'' என்றான்.

ரங்கன் பதில் கூறவில்லை.

(தொடரும்)

சந்தனப் பூங்காவில் சிறிய முள்

ஸௌமுகன்



அவர் போய்ச் சேர்ந்து ஒரு வருஷம் ஆகி விட்டது....

வருஷாப்திகம் முடிந்து வீட்டிற்குச் செய்ய வேண்டிய சாந்தியெல்லாம் முடித்தாகி விட்டது. காலையில் நவக்கிரஹ ஹோமம் விமரிசையாக நடந்து முடிந்திருந்தது.

என்னுடைய மூன்று பெண்கள் மாப்பிள்ளைகளுடன், பேரன் பேத்திகளைக் கூட்டிக் கொண்டு வந்திருந்தார்கள். இந்த மாதிரி சமயங்களில் தானே எல்லோரும் சேர்ந்து இருக்க முடிகிறது.

பாவம், கோபி... என்னுடைய ஒரே பிள்ளை.

எல்லாக் காரியங்களையும் சிரத்தையாக, இந்த ஒரு வருஷமாகச் செய்து முடித்திருந்தான். இந்த வருஷம் எம்.பி.ஏ. கடைசி வருஷப் படிப்பு. பரீட்சை எழுதி முடித்திருந்தான்.

அவன் எதிர்காலத்தைப் பற்றிக் கவலையில்லை. அவன் அப்பா பணிபுரிந்த தொழிற்சாலையிலேயே அவனுக்கு ஓர் இடம் காத்திருந்தது. அடுத்த மாதம் வேலையில் சேர வேண்டும்.

வாணி, கவிதா, காயத்ரி பிறந்து பத்து வருஷங்களுக்குப் பிறகு இவன் எங்களுக்குக் கிடைத்தான்.

அவனுக்கு ஏழு வயது ஆன போது வாணிக்குக் கல்யாணம் ஆயிற்று. அவன் பூணலும், அவள் கல்யாணமும் ஒன்றாக நடந்தன. வாணியின் கணவர் பெரிய வக்கீல். எக்கச்சக்கமான சொத்து.

பத்தாயிரம் ரூபாய் ரொக்கமாகக் கையில் கொடுத்து, ஐம்பது பவுன் நகை செய்து போட்டுக் கல்யாணம் செய்து கொடுத்தோம். அவள் கல்யாணத்துக்கும் அதைத் தொடர்ந்து வந்த வைபவங்களின் போதும் செய்த சீர்வரிசைகளைக் கணக்குப் பார்த்த போது எங்கள் கிராமத்து வீடும், மூன்று போகம் விளையும் நான்கு ஏக்கர் நஞ்சை நிலமும் எங்கள் கைகளை விட்டுப் போயிருந்தன.

கோபிக்குப் பத்து வயது முடிந்த சமயம் கவிதாவுக்குக் கல்யாணம். மாப்பிள்ளை மோகன் தஞ்சாவூரில் பெரிய ஜவுளிக் கடை வைத்திருக்கிறார். நல்ல வியாபாரம். ராசியுள்ள கடை. பரம்பரைச் சொத்தும் இருந்தது.

அவர்கள் வரதட்சணை ஏதும் கேட்கவில்லை. ஆனால் தஞ்சாவூர் வடக்கு ரத வீதியில் உள்ள எங்கள் பூர்வீக வீட்டைக் கேட்டார்கள். அதைப் புதுப்பித்து, தன் கடைக்கு ஒரு

கிளை ஆரம்பித்துக் கொள்வதாகச் சொன்னார் மாப்பிள்ளை. நாங்கள் தலை அசைத்துச் சம்மதம் கொடுத்தோம்.

வழக்கம் போல் ஒரு வருஷம் கழித்துக் கணக்குப் பார்த்த போது, என் மாமியார் எனக்கு வைத்திருந்து போன அறுபது பவுன் நகைகளை அடக்கிக் கொண்டிருந்த "பாங்கி" பெட்டகம் காலியாகிப் போயிருந்தது. போன வருஷம் தஞ்சாவூருக்குப் போயிருந்த போது கேள்விப்பட்டோம். எங்கள் தஞ்சாவூர் வீடு இப்போது பதினைந்து லட்சம் பெறும் என்று.

கோபி 'பிளஸ்—டு' முடித்த வருஷம் காயத்திரிக்குக் கல்யாணம் நடந்தது. மாப்பிள்ளை வீட்டில் ரொம்பவும் நல்லவர்கள். நகை, பாத்திரம், சீர், செனத்தி எதுவுமே கேட்கவில்லை. அதற்காக நாம் சும்மா இருக்க முடியுமா? பந்தலில் நம் பெண்ணை மூளியாக நிறுத்த முடியுமா? என் நகைகள் அத்தனையும், தாலிக் கொடி, இரண்டு ஜோடி வளையல்கள் தவிர, விற்றுத்தான் ஆக வேண்டியிருந்தது.

மாப்பிள்ளை வீட்டில் ஒரே ஒரு 'கண்டிஷன்' போட்டார்கள். 'நிபந்தனை' என நினைக்கக் கூடாது. வேண்டுகோளாக மதிக்க வேண்டும் என்றார்கள்.

அவர்களுக்குச் சென்னையில்தான் எல்லாச் சொந்தக்காரர்களும் வேண்டப்பட்டவர்களும் இருந்தார்கள். "ஒரே பிள்ளையின் கல்யாணம். கல்யாணத்தை மட்டும் மெட்ராஸில் ஏற்பாடு செய்யுங்கள்" என்றார்கள்.

நாங்கள் யோசிப்பதற்குள் அவர்களே பெரிய கல்யாண மண்டபத்தை நாள் ஒன்றுக்கு எட்டாயிரம் ரூபாய் வாடகையில் பேசி, 'அட்வான்ஸ்' கொடுத்த பிறகு, எங்களுக்கு விவரம் சொன்னார்கள். மண்டபம் மூன்று நாட்களுக்குத் தேவைப்பட்டது.

கல்யாணம் முடிந்த நான்காம் மாதம் இந்த வீட்டிற்குக் குடி வந்தோம். கல்யாணச் செலவு மட்டும் ஐந்து லட்சம்!

கடைசிப் பெண்ணிற்குப் பிறந்த பெண்ணையும், பிள்ளையையும் தூக்கிக் கொஞ்சி விட்டுத்தான் அவர் கண் மூடினார்.

தான் உயிர் பிழைக்க முடியும் என்ற நம்பிக்கை படுக்கையில் விழுந்த நாள் முதல் அவருக்கு இல்லை. அப்போதுதான் ஒரு நாள் என்னைத் தனியாக அழைத்து என்னிடம் ஒரு சத்தியப் பிரமாணம் வாங்கிக் கொண்டார்.

அதைப் பற்றி நான் யாரிடமும் சொல்லவில்லை. அநாவசியமாக ஏதாவது விமரிசிப்பார்கள்.

அது மட்டும் அல்ல. என்னால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியும் எனத் தோன்றவில்லை.

ஆயிற்று. பெண்கள் எல்லோரும் ஊருக்குக் கிளம்பும் நாள் வந்து விட்டது. நான் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே வாணி என் கால்மாட்டில் உட்கார்ந்திருந்தாள். வேறு யாரும் இன்னும் எழுந்திருக்கவில்லை.

"அம்மா! கோபிக்கும் வயசாகிறது. அப்பா காரியங்கள் எல்லாம் குடும்பஸ்தனாக இருந்து செய்தால்தான் நல்லது என்று சொல்வார்கள். உனக்குத் தெரியாததையா நான் சொல்லப் போகிறேன். உன் மாப்பிள்ளையின் மாமா பெண் இருக்கிறாள். ராஜேஸ்வரி என்று பெயர். ராஜாத்தி மாதிரி இருப்பாள். நீ கூட அவளைப் பார்த்திருக்கிறாய். நன்றாகச் செய்வார்கள். இந்த ஜாதகம் கீதகம் இவற்றில் எல்லாம் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது. என்ன சொல்கிறாய்?"

"உம்.. பார்க்கலாம்!" என்றேன்.

காலை வேளையில் படுக்கையில் உட்கார்ந்தபடி நானாக முடிவு செய்ய வேண்டிய சமாசாரமா இது?

அன்று புழக்கடையில் நான் துணிகளைப் பிழிந்து உலர்த்திக் கொண்டிருந்த போது கவிதா வந்தாள். எனக்கு உதவுகிற சாக்கில் பேச்செடுத்தாள்.

"இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நீ சிரமப்படப் போகிறாய்? உனக்கும் வயசாகவில்லையா? கோபிக்குப் படிப்பு முடிந்து விட்டது. வேலைக்குப் போகப் போகிறான். இனிமேல் அவன் கல்யாணத்தைப் பற்றி யோசிக்க வேண்டாமா!"

"அதற்கு என்னடி அவசரம்? இப்போதானே அவனுக்கு இருபத்து நாலு வயதாகிறது?"

"காலாகாலத்தில் கல்யாணம் செய்து கொள்வதுதான் நல்லது. அப்பாவைப் பார். தன் பொறுப்புகளை எல்லாம் சீக்கிரமாக முடித்து விட்டுக் கடைசிக் காலத்தில் எத்தனை நிம்மதியாக இருந்தார்?"

நான் மனத்திற்குள் சிரித்துக் கொண்டேன். நிம்மதியாக எங்கேடி இருந்தார்? அவர் பட்ட வேதனை எனக்குத்தான் தெரியும். பிள்ளைக்கு ஒன்றுமே வைக்காமல் எல்லாவற்றையும் துடைத்து விட்டுப் போகிறோமே என்று எத்தனை ஆதங்கப்பட்டிருப்பார்!

அவள் சொல்லிக் கொண்டே போனாள்.

"நீ மட்டும் சரி என்று சொல் அம்மா. என் நாத்தனார் பெண்ணிற்குப் பார்க்கலாம். நல்ல சிவப்பு. 'மாமி.. மாமி' என்று

என்னிடம் உயிராக இருப்பாள். பிரமாதமாகப் பாடுவாள். ஒரே பெண். எனக்கு நீங்கள் செய்ததை வட்டியும் முதலுமாகக் 'கறக்கலாம்'. என்ன சொல்கிறாய்?''

''பார்க்கலாம்!'' என்றேன் சுருக்கமாக.

கடைசிப் பெண் காயத்ரி எப்பவுமே சுற்றி வளைத்துப் பேச மாட்டாள். ஒரு பெண் 'போட்டோ'வை என்னிடம் காண்பித்தாள்.

''இவள் பெயர் டாக்டர் வாசுகி. இவள் அப்பா இவளுக்குத் தனியாக ஒரு நர்ஸிங் ஹோம் கட்டிக் கொண்டு இருக்கிறார். நல்ல கௌரவமான குடும்பம். நம்ம கோபிக்கு இவளைத்தான் நான் பார்த்திருக்கிறேன். அடுத்த வாரம் அவர்கள் கல்யாணம் பேச இங்கே வருவார்கள்.''

''என்னம்மா இப்படி திடுதிப்பென்று. கோபியை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா?''

''அவனுக்கு என்னம்மா தெரியும்? நாம் சொல்றபடி சொன்னால் சரி என்கிறான்.''

''இதெல்லாம் என்னிடம் ஏன் சொல்கிறாய்? உன் தம்பியிடம் நீயே சொல்லிப் பார். நான் என்ன குறுக்கே பேசப் போகிறேனா?'' என்றேன்.

''அவனை எங்கே தனியாகப் பார்க்க முடிகிறது? எப்போது பார்த்தாலும் யாராவது பேசப் பிடித்துக் கொண்டு விடுகிறார்கள்'' என அலுத்துக் கொண்டாள் காயத்ரி.

வாணியும், காயத்ரியும் பாண்டியனில் சென்னை போகிறார்கள். கவிதா இரவு பத்து மணி பஸ்ஸில் தஞ்சைக்குப் புறப்படுகிறாள்.

மாலை ஐந்து மணிக்கு எல்லோருமாக உட்கார்ந்து, சிரித்து அரட்டை அடித்தபடி பேசிக் கொண்டிருந்தார்கள். கோபியை மட்டும் காணோம். காயத்ரி சொன்னது போல ஓர் இடத்தில் சேர்ந்தாற்போல் ஐந்து நிமிடம் இருக்காமல் என்ன ஓட்டம்!

நான் பக்கத்து அறையில் அவர்கள் பேசுவதைக் கவனித்துக் கொண்டு வாசலைப் பார்க்க உட்கார்ந்திருந்தேன்.

வாசலில் ஒரு 'டாக்ஸி' வந்து நின்றது. முதலில் இறங்கியது கோபி. டாக்ஸியின் பின் கதவைத் திறந்து விட்டான். அறுபது வயது மதிக்கத்தக்க பெரியவர், ஒரு பழுத்த சுமங்கலி. கூட ஒரு பெண் உள்ளே வந்தார்கள்.

அந்தப் பெண்ணிற்கு இருபது வயதிருக்கும். அழகி என்று சொல்ல முடியாது. ஆனால் முகத்தில் நல்ல களை இருந்தது.

கோபி அவர்களை உட்காரச் சொல்லி உபசரித்தான்.

அவர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த வெற்றிலை, பழம், பாக்கு இவற்றைத் தட்டில் எடுத்து வைத்த போது, நான் எழுந்து நின்றேன்.

''இந்த கோபி என்ன செய்கிறான்?'' — எனக்கு ஆச்சரியமாக, ஏன் பயமாகக் கூட இருந்தது.

என்ன தைரியம் இருந்தால் என்னை ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் இப்படியெல்லாம் செய்வான். மாப்பிள்ளைகளுக்கு முன் எத்தனை பெரிய அவமானம். எவ்வளவு தலைகுனிவு!

கோபி அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தான்.

''இவர் நாராயணன். என் பள்ளிக்கூடத்

தில் எனக்குக் கணக்கு வாத்தியாராக இருந்தவர். அவருடைய மிஸஸ். அவர் பெண் சுமதி. ஒரே பெண். போன வருஷம் பி.எஸ்.ஸி. முடித்திருக்கிறாள்.''

அவனுடைய தமக்கைகள் மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''நீங்கள் ஊருக்குப் போவதற்குள் நான்தான் இவர்களை வரச் சொன்னேன். தனியாக ஒரு பெண் பார்க்கும் நாடகம் வேண்டாம் எனப் பட்டது. உங்கள் ஒவ்வொருவருடைய மனத்திலும் எனக்குப் பெண் நிச்சயித்திருப்பதாக உங்கள் பேச்சிலிருந்து புரிந்து கொண்டேன். ஆனால் என் மனத்திற்குப் பிடித்தவள் இவள்தான். நான் பேசுவது கொஞ்சம் அடக்கக் குறைவாக இருப்பதாகத் தோன்றினால் மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்கு இந்த சுமதி போதும். வேறு எந்த ரதியோ, ரம்பையோ குபேரன் வீட்டுச் சம்பந்தமோ வேண்டாம். இவள்தான் என் மனைவி என்பது முடிவான விஷயம். அதை நான் மாற்றிக் கொள்வதாக இல்லை. அது மட்டும் இல்லை. இப்போது இவள் எப்படியிருக்கிறாளோ அப்படித்தான் இந்த வீட்டு மருமகளாக வருவாள். கூட ஒரு நகையோ ஒரு ஸ்பூனோ வராது. இவர்கள் கூட முதலில் அதற்குச் சம்மதிக்கவில்லை. ''எங்கள் பெண்ணிற்கு நாங்கள் செய்கிறோம்!'' என்றார்கள். அப்படியானால் இந்தக் கல்யாணம் நடக்காது எனச் சொல்லி விட்டேன். காரணம் நான் என் அப்பாவுக்குக் கொடுத்த வாக்கு. ''கட்டிய புடைவையுடன் உனக்குப் பிடித்தவளைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். அவளைத் தவிர எதையுமே நேராகவோ மறைமுகமாகவோ எதிர்பார்க்கக் கூடாது" எனச் சத்தியம் வாங்கிக் கொண்டிருக்கிறார்.''

சில வினாடிகள் நிசப்தம்.

காயத்ரிதான் எந்தச் சந்தர்ப்பத்தையும் அருமையாகச் சமாளிப்பவள்.

''அதனால் என்னடா கோபி.. கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவன் நீ. சுமதிக்கு என்ன? சிலை மாதிரி இருக்கிறாள். வா அம்மா! உன்னே என் அம்மாவிடம் கூட்டிப் போகிறேன்!'' என அவளைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்தாள்.

என்னை நமஸ்கரித்த சுமதியை என் மனம் வாழ்த்தியது.

அதே சமயம் ஒரு வருத்தம் கூட.

நான் எங்கே கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் காற்றில் பறக்க விட்டு விடுவேனோ என்ற அவநம்பிக்கையில் கோபியிடம் தனியாகச் சத்தியம் வாங்கிக் கொண்டிருக்கிறாரே அவன் அப்பா...

அதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை.



அருள்வாக்கு

புராண புருஷர்கள் நமக்கு லக்ஷியத்தைக் காட்டுகிறார்கள். அந்த லக்ஷியத்தை அடைவதற்கு வழி என்ன என்றால் கர்மாநுஷ்டானத்தில்தான் ஆரம்பிக்க வேண்டும். இப்படி நாம் நடைமுறையில் practical ஆகச் செய்ய வேண்டியதை எல்லாம் சொல்வது தர்ம சாஸ்திரம். நாம் என்னென்ன செய்ய வேண்டும் என்று வேதத்தில் அங்கங்கே உதிரியாகச் சொல்லியிருக்கின்றனவோ அவற்றை நன்றாக வகைப்படுத்தி விவரமாகச் சொல்கிற வேத உபாங்கம் இது.

குடும்பக் காரியம், சொந்தக் காரியம், குளிப்பது, சாப்பிடுவது முதற்கொண்டு எல்லாவற்றையும் ஒரு நிர்ணயப்படி, நியதிப்படிச் செய்ய வேண்டும். வேத தர்மத்தில் மனுஷ்ய வாழ்வின் ஸகல அம்சங்களையும் ஆத்மா விருத்திக்கு அநுகூலமாக ஆக்கி, விதிகள் போட்டிருக்கிறது. இப்படிப் படுத்துக் கொண்டால் ச்ரேயஸ், இப்படி ட்ரெஸ் பண்ணிக் கொண்டால் அது ஆத்மாவுக்கும் நல்லது. இப்படி வீடு கட்டினால்தான் அநுஷ்டானத்துக்குச் சாதகமாக இருக்கும் என்பதாக வாழ்க்கையில் எல்லா விஷயங்களையும் மதத்தோடு அது சம்பந்தப்படுத்தி விடுகிறது. லௌகிக வாழ்க்கை (secular life) மத வாழ்க்கை (religious life) என்று அது இரண்டாகப் பிரிக்கவில்லை. லௌகிகம் கூட மதத்தில் கொண்டு சேர்க்கும்படியாகவே வேத தர்மம் அமைந்திருக்கிறது. எந்தக் கர்மாவைப் பண்ணினாலும் அதை மந்திர பூர்வமாகச் செய்யும்படி பண்ணி ஆத்மா விருத்திக்கு அங்கமாக ஆக்கி விடுகிறது. லௌகிகத்தையும் ஆத்மிகத்தையும் சேர்த்துக் கொடுப்பது போலவே, தனி மனுஷ்யன் தன் ச்ரேயஸுக்(individual salvation)காகப் பண்ண வேண்டியதிலேயே ஸமூக வாழ்க்கையின் ஒழுங்கும், லோக க்ஷேமமும் (common welfare) சேரும்படியாக இணைத்துக் கொடுத்திருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

யாரிடம் ஆட்டோகிராப் வாங்க ஆசை?

50

சீர்காழி ஜி. சிவசிதம்பரம்:

எம். ஜி. ஆர். முதலமைச்சராக இருந்த போது, அன்னை தெரசா தமிழகம் வந்திருந்தார். வள்ளுவர் கோட்டத்தில் நடந்த விழாவில், இறைவணக்கம் பாட என்னை அழைத்திருந்தனர். பாடி முடித்துவிட்டு, மேடையில் அமர்ந்திருக்கும் அன்னை தெரசாவின் பாதங்களைத் தொட்டு ஆசி பெற்றுக் கொண்டு, அப்படியே ஆட்டோகிராபும் வாங்கிவிடலாம் என்ற எண்ணத்துடன் சென்றேன். ஆனால் விழா நிகழ்ச்சியில் சிறுமாற்றம் செய்து, இறைவணக்கத்துக்குப்பின் குழந்தைகள் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அது முடிந்த பின்தான் அன்னை மேடைக்கு வந்தார். எனவே ஆட்டோகிராப் வாங்க முடியாமல் போய் விட்டது. அவரிடம் ஆட்டோகிராப் வாங்கும் ஆர்வம் எனக்கு இப்போதும் இருக்கிறது.



• சீர்காழி சிவசிதம்பரம்

பாலகுமாரன்:

ஆட்டோகிராப் வாங்க வேண்டும் என்கிற ஆர்வம் கிடையாது. காரணம் ஆட்டோகிராப் வாங்குகிறதெல்லாம் குழந்தைத்தனமான விஷயங்கள் என நான் நினைக்கிறேன். ஆனாலும் கன்னட எழுத்தாளர் சிவராம் கரந்தைச் சந்தித்து நிறையப் பேச வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். "ஆட்டோகிராப் வாங்குவது குழந்தைத்தனம் என்றால், உங்களிடம் ஆட்டோகிராப் கேட்பவர்களிடமும் இதையே கூறி மறுத்து விடுவீர்களா?" என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். நேரில் வந்து ஆட்டோகிராப் கேட்பவர்களுக்குத் தர மறுத்தால் அவர்கள் மனம் புண்படும் என்பதால் போட்டுக் கொடுப்பேன்.



• பாலகுமாரன்

அஞ்சு:

இன்றையச் சூழ்நிலையில் புரட்சித் தலைவர் என்று பட்டம் பெறப் பொருத்தமானவர் ரஷ்ய அதிபர் கோர்பச்சேவ் தான். பழைமையிலிருந்து, புதுமைக்கு வழிகாட்டும் ரஷ்ய அதிபர், ஆயுதக் குறைப்பு மற்றும் உலக அமைதிக்காக ஆற்றி வரும் பணி மகத்தானது. எனவே அவரைச் சந்தித்து ஆட்டோகிராப் வாங்க வேண்டும் என்று எனக்கு ஆசை.



• அஞ்சு

ஔவை நடராஜன்:

தமிழறிஞர் வ. சுப. மாணிக்கம் என்னை மிகவும் பிரமிப்பூட்டிய மனிதர். அவர் சொல்கிற கருத்துக்கள் புதியவையாய் இருக்கும்; பழைய கருத்து என்றால், அவர் சொல்லும் முறை புதியதாய் இருக்கும். அவருடைய சொல்லாட்சி இருக்கிறதே! அப்பப்பா! எந்தக் கட்டுரை எழுதினாலும் அதிலே புதிதாய் நான்கு சொற்களைப் பயன்படுத்தியிருப்பார் அவர். நான் தமிழ் வளர்ச்சித்துறையில் பொறுப்பேற்ற தினம், என்னைப் பார்க்க வந்திருந்தார் அவர். நான் பணியைத் தொடங்கும்முன், ஏதாவது எழுதிக் கையொப்பமிட்டுத் தரும்படி நான் அவரைக் கேட்ட போது அவர் எழுதித் தந்தது: "அறத்தான் உருவாவதே இன்பம்". அதை இன்றும் பொக்கிஷமாய்ப் பாதுகாத்து வருகிறேன்.



• ஔவை நடராஜன்

யோசனை தந்த வாசகர்:
நெல்லை குரலோன்,
பொட்டல்புதூர்.

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி.

சிவகாமியின் சபதம்

பதினைந்தாம் அத்தியாயம்

ரதியின் தூது

குதிரை வந்த சப்தம் சிவகாமியின் செவியில் விழுந்தது. குதிரை நின்றதையும் அதன் மேல் வந்த வீரன் இறங்கித் தன்னை நோக்கி நடந்து வருவதையும் அவள் உணர்ந்தாள். வருகிறது இன்னார்தாம் என்பதை அவளுடைய நெஞ்சு அவளுக்கு உணர்த்தியது. இருந்தாலும், திரும்பிப் பார்த்துச் சந்தேகம் தீரவேண்டுமென்ற ஆவல் அளவில்லாமல் எழுந்தது. அந்த ஆவலைப் பலவந்தமாக அடக்கிக் கொண்டு, சிவகாமி சிலையைப் போல் அசையாமல் நின்று கொண்டிருந்தாள்.

குமார சக்கரவர்த்தி, மாமல்ல நரசிம்மர் கையில் பிடித்த வேலுடன் வந்து சிவகாமியின் அருகில் குளக்கரைப் படியில் நின்றார். குளத்தின் தெளிந்த நீரில் சிவகாமியின் உருவத்துக்குப் பக்கத்தில் நரசிம்மவர்மரின் உருவமும் புலப்பட்டது. அப்போதும் சிவகாமி அவரைத் திரும்பிப் பார்க்கவில்லை.

வீர சௌந்தரியம் குடிகொண்டு தேஜஸுடன் விளங்கிய நரசிம்மரின் நவயௌவன முகத்தில் இலேசாகப் புன்னகை அரும்பியது. அவரும் சிவகாமியை நேராகப் பார்க்காமல், தண்ணீரில் பிரதிபலித்த அவளுடைய முழுமதி முகத்தை உற்று நோக்கினார்.

சிவகாமி சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு அவளுக்கு இன்னொரு பக்கத்தில் நின்ற மான்குட்டியைப் பார்த்து, ''ரதி! இவர் யார்? எதற்காக இங்கு வந்தார் என்று கேள் '' என்றாள்.

இதைக் கேட்ட நரசிம்மரின் முகத்தில் புன்னகை மறைந்தது. புருவங்கள் நெரிந்தன. அவரும் ரதியைப் பார்த்து, ''ரதி! உன் எஜமானி பரத கண்டத்திலேயே இணையற்ற பரத கலாராணியாகிவிட்டாள் அல்லவா? பழைய சிநேகத்தை நினைவு வைத்திருக்க முடியுமா? 'இவர் யார்?' என்று கேட்கத்தான் தோன்றும். இது ஒன்றும் எனக்கு ஆச்சரியமில்லை, ரதி!'' என்றார்.

சிவகாமி ஆத்திரம் நிறைந்த குரலில் கூறினாள்: ''ரதி! ஆச்சரியத்தையே அறியாதவரான சக்கரவர்த்தியின் திருக்குமாரருக்கு என்னுடைய ஆயிரங்கோடி நமஸ்காரத்தைச் சொல்லிவிட்டு இதையும் சொல்லு: அவரோ பூமண்டலாதிபதியின் புதல்வர்! தேசதேசங்களின் ராஜராஜாக்கள் எல்லாம் தம் திருப்பாதங்களில் விழுந்து வணங்கப் பெற்ற பிரபு; அப்பேர்ப்பட்டவர்க்கும் இந்த ஏழைச் சிற்பியின் மகளுக்கும் சிநேகம் எப்படிச் சாத்தியம்? அந்த எட்டாத பழத்துக்கு ஆசைப்பட்டது என்னுடைய அறிவீனந்தான் என்பதை உணர்ந்து கொண்டேன், ரதி!''

மாமல்லர் பரிகாசம் தொனித்த குரலில் சொன்னார்: ''ரதி! உன் எஜமானிக்கு ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்து: பரத சாஸ்திர

அமரர் கல்கி

பண்டிதையான சிவகாமி தேவி இப்போது ஆடலரங்கத்தில் நிற்கவில்லை; அபிநயம் பிடிக்கவில்லை. நிருத்தம், நிருத்தியம், ஹஸ்தம், அபிநயம் ஆகியவைகளைக் கொஞ்சம் ஒதுக்கிவைத்துவிட்டு என்னுடன் சுபாவிகமாகப் பேசச் சொல்லு!''

இயற்கையில் செவ்வரியோடிய சிவகாமியின் கண்கள் இப்போது கோபத்தினால் கோவைப்பழம் போல் சிவந்தன.

''ஆமாம் ரதி, ஆமாம்! நான் நடன அரங்கத்தில் நடிக்கும் நாடகக்காரிதான். காஞ்சிச் சக்கரவர்த்தியின் திருக்குமாரர் எங்கே? ஆயனச் சிற்பியின் மகள் எங்கே? மாமல்லரின் அருளைப் பெறுவதற்கு அரண்மனைகளிலும் அந்தப்புரங்களிலும் வளரும் எத்தனையோ இராஜகுமாரிகள் தவங்கிடக்கிறார்கள்! அரங்க மேடையில் ஏறி ஆடும் இந்த ஏழைப் பெண்ணின் ஞாபகம் அவருக்கு எப்படி இருக்கும்?'' என்று சிவகாமி சொன்ன போது, அவளுடைய குரல் தழுதழுத்தது; அவளுடைய கண்களில் நீர் துளித்தது.

நரசிம்மவர்மர் மனங்கனிந்தவராய் அன்பு ததும்பிய குரலில், ''சிவகாமி! ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்? இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு நான் உண்மையில் தலைவனாகும் போது, அரங்க மேடையில் சதங்கை ஒலிக்க ஆடும் உன் அழகிய பாதங்களுக்கு அந்தப் பதவியை அர்ப்பணம் செய்வேன். என் உள்ளம் உனக்குத் தெரியாதா?'' என்றார்.

இதனாலும் சிவகாமியின் மனம் மாறவில்லை. மீண்டும் அவள் மான் குட்டியையே பார்த்தவளாய், ''ரதி! கதைகளிலும் காவியங்களிலும் புருஷர்களுடைய நயவஞ்சகத்தைப்பற்றி எவ்வளவோ கேட்டறிந்திருக்கிறேன். ஆனால் அவர்களில் யாரும் காஞ்சி குமார சக்கரவர்த்திக்கு இணையாக மாட்டார்கள்'' என்றாள்.

நரசிம்மவர்மருக்கு இப்போது உண்மையாகவே கோபம் வந்ததென்று அவருடைய புருவங்களின் நெரிப்பிலிருந்து தெரிந்தது.

''சிவகாமி! ஏன் இன்றைக்கு இவ்விதம் மாறிப்போயிருக்கிறாய்? எவ்வளவோ ஆசையுடன் நான் உன்னைத் தேடி வந்தேன். எவ்வளவோ விஷயங்கள் பேச எண்ணியிருந்தேன். நான் வந்ததே உனக்குப் பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது. இதோ போகிறேன்'' என்று ஓர் அடி எடுத்து வைத்தார்.

அப்போது சிவகாமி விம்மிய குரலில், ''ரதி! அவர் போகிறதாயிருந்தால் போகட்டும். ஆனால், குற்றத்தை என்பேரில் சுமத்திவிட்டுப் போகவேண்டாமென்று சொல்லு!'' என்றாள்.

நரசிம்மர் மேலே அடி எடுத்து வைக்காமல் நின்று, ''நான்தான் என்ன குற்றம் செய்துவிட்டேன்? அதைச் சொல்லிவிட்டுக் கோபித்துக் கொண்டால் மிகவும் நன்றாயிருக்கும்!'' என்றார்.

சிவகாமி பெண் சிங்கத்தைப் போல் கம்பீரமாக அவரைத் திரும்பிப் பார்த்து, ''என்னுடைய நடனக் கலையைப் பற்றி எப்படி எப்படியெல்லாம் பாராட்டிப் பேசினீர்கள்! எவ்வளவெல்லாம் முகஸ்துதி செய்தீர்கள்! அப்படியெல்லாம் பேசிவிட்டு, என் அரங்கேற்றத்துக்கு ஏன் வராமல் இருந்தீர்கள்?'' என்று கண்களில் கனல் பறக்கக் கேட்டாள்.

நரசிம்மர் 'கலகல' வென்று சிரித்து, ''இதை முன்னமேயே கேட்டிருக்கக் கூடாதா? நான் அரங்கேற்றத்துக்கு வரவில்லையென்று உனக்கு யார் சொன்னது? மேல் உப்பரிகையில் என் தாய்மார்களோடு உட்கார்ந்து பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். அவர்களுக்குப் பரத சாஸ்திர நுட்பங்களைப்பற்றி அவ்வப்போது எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தேன். நான் சபையில் நேரில் வந்து உட்கார்ந்தால், ஒருவேளை உன் ஆட்டத்துக்குப் பங்கம் விளையுமோ என்று பயந்தேன். அதற்காக இவ்வளவு ஆர்ப்பாட்டமா?'' என்று கேட்ட போது, சிவகாமியின் முகத்தில் அதுவரை காணப்படாத மகிழ்ச்சியும் மலர்ச்சியும் தோன்றின. நரசிம்மரை ஆர்வத்துடன் நோக்கி, ''இதை ஏன் முன்னமே நீங்கள் சொல்லவில்லை?'' என்று கேட்டாள்.

''சொல்லுவதற்கு நீ இடம் கொடுத்தால் தானே? இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டியிருக்கிறது. உன்னுடைய சிம்மாசனத்தில் உட்கார்ந்து பேசலாம், வா!'' என்று கூறி, நரசிம்மர் குளக்கரையில் மரத்தடியில் அமைந்திருந்த பலகையைப் பார்த்தவாறு சிவகாமியின் கரத்தைப் பிடித்து அழைத்துப் போக யத்தனித்தார். சிவகாமியோ, அவர் பிடித்த கையைச் சட்டென்று இழுத்துக் கொண்டு, மானைப்போல் துள்ளிக் கரை மீது ஏறினாள்.

அவர்கள் இருவரும் போய் மரத்தடியில் போட்டிருந்த பலகையில் உட்கார்ந்ததை ரதி தலை நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்தது. இனி நம்முடைய தூது இவர்களுக்குத் தேவையில்லை என்பதைத் தெரிந்து கொண்டது போல், அது குளத்தோரமாகக் 'கருகரு' வென்று வளர்ந்திருந்த பசும் புல்லை மேயச் சென்றது.

பதினாறாம் அத்தியாயம்

தடைப்பட்ட திருமணம்

பலகையில் உட்கார்ந்த பிறகும் சிவகாமி வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டிருப்பதைப் பார்த்த நரசிம்மர், "இன்னும் என்ன கோபம், சிவகாமி? இப்படி நீ பிடிவாதம் பிடிக்கும் பட்சத்தில் என்னிடம் உனக்குப் பிரியம் இல்லை என்றுதான் எண்ணிக்கொள்வேன்" என்றார்.

சிவகாமி உடனே திரும்பி, நரசிம்மரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து, "உங்களுக்கு மட்டும் என்னிடம் பிரியம் இருக்கிறதா? இருந்தால் இந்த மூன்று நாளாக என்னுடைய ஞாபகம் இல்லாமற் போனதேன்?" என்று கேட்டாள்.

"இந்த மூன்று தினங்களாக நானும் உன்னைப் பார்க்க வரவேணுமென்று துடித்துக் கொண்டுதான் இருந்தேன். ஆனால் முக்கியமான இராஜாங்க வேலைகள் குறுக்கிட்டன. அன்றைக்கு உன்னுடைய அரங்கேற்றத்தை நடுவில் முடிக்கும்படி நேர்ந்தது ஏன் என்று உனக்குத் தெரியாதா? பல்லவ சாம்ராஜ்யத்தில் பல வருஷங்களாக இல்லாத பெரிய யுத்தம் வந்திருக்கிறது...."

இவ்விதம் நரசிம்மர் சொல்லி வந்தபோது சிவகாமி குறுக்கிட்டு, "நானும் கேள்விப்பட்டேன். யுத்தம், வந்துவிட்டதே என்று நினைத்து நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தீர்களாக்கும்!" என்றாள்..

"கவலையா? ஒருநாளும் இல்லை, சிவகாமி! பல்லவ குலத்தில் பிறந்தவர்கள் யுத்தம் வந்துவிட்டதே என்று கவலைப்பட மாட்டார்கள். குதூகலப்படுவார்கள். என் பாட்டனார் சிம்ம விஷ்ணு மகாராஜாவின் காலத்திலிருந்து பல்லவ சாம்ராஜ்யத்தில் யுத்தம் நேரவில்லை. பல்லவ சேனாவீரர்களின் கையில் வேல்களும் வாள்களும் துருப்பிடித்து வந்தன. இப்போது அவற்றுக்கெல்லாம் வேலை வந்திருக்கிறது. போர்க்களத்தில் ஆயிரக்கணக்கில் மின்னிப் பாயும் வேல்களையும், வாள்களையும் கண்டு பயப்படுகிறவன் நான் அல்ல. ஆனால், உன்னுடைய கரிய விழிகளிலிருந்து கிளம்பிப் பாயும் வாள்களையும் வேல்களையும் கண்டுதான் அஞ்சுகிறேன்!"

சிவகாமி தன்னை மீறி வந்த புன்முறுவலை அடக்கிக் கொள்ள முடியாதவளாய், "புருஷர்களே இப்படித்தான் போலிருக்கிறது. சாதுர்யமாயும் சக்கரவட்டமாயும் பேசி உண்மையை மறைக்கப் பார்ப்பார்கள்" என்று முணுமுணுத்தாள். ஆனாலும், அந்த வார்த்தைகள் நரசிம்மரின் காதில் விழாமற் போகவில்லை.

"பழிமேல் பழியாகச் சுமத்திக் கொண்டிருக்கிறாயே? எந்த உண்மையை நான் மறைக்கப் பார்த்தேன்!" என்று மாமல்லர் கேட்டார்.

"பின்னே, நீங்கள் யுத்தத்துக்குப் பயப்படுகிறவர் என்று நான் சொன்னேனா? நீங்கள் வீராதி வீரர், சிம்ம விஷ்ணு மகாராஜாவின் பேரர், மகேந்திர சக்கரவர்த்தியின் குமாரர் என்பதெல்லாம் எனக்குத் தெரியாதா? இந்த யுத்தம் வந்ததனால் திருமணம் தடைப்பட்டுவிட்டதே? அதைப் பற்றிக் கவலைப்படுகிறீர்களாக்கும் என்று தானே சொன்னேன்?"

இவ்விதம் சிவகாமி கூறியபோது, அவளுடைய முகத்தில் நாணத்துடன் கோபம் போராடியது. நரசிம்மர் வியப்புடன், "சிவகாமி! என்ன சொல்லுகிறாய்? திருமணம் தடைப்பட்டு விட்டதா? யாருடைய திருமணம்?" என்று கேட்டார்.

"ஓகோ! உங்களுக்குத் தெரியவே தெரியாதுபோல் இருக்கிறது. நான் சொல்லட்டுமா! காஞ்சி மாநகரத்தில் மகாராஜாதிராஜ திரிபுவன சக்கரவர்த்தி மகேந்திர வர்ம பல்லவர் இருக்கிறாரோ, இல்லையோ, அந்தச் சக்கரவர்த்திக்குத் தேசமெல்லாம் புகழ் பெற்ற மாமல்லர் என்னும் திருக்குமாரர் ஒருவர் உண்டு. அந்தக் குமார சக்கரவர்த்திக்குத் திருமணம் பேசி வருவதற்காக மதுரைக்கும், வஞ்சிக்கும், இன்னும் வட தேசத்துக்கும் தூதர்களை அனுப்ப ஏற்பாடாகியிருந்ததாம். அப்பேர்ப்பட்ட சமயத்தில் யாரோ ஒரு பொல்லாத அரசன் பல்லவ ராஜ்யத்துக்குள் படையெடுத்து வரவே கல்யாணத்தைத் தள்ளிப் போட வேண்டியதாகிவிட்டது. இதெல்லாம் தங்களுக்குத் தெரியாதல்லவா?" என்றாள் சிவகாமி.

நரசிம்மர் 'கலகல' வென்று சிரித்துவிட்டு, "இதற்குத்தானா இவ்வளவு பாடுபடுத்தினாய்? நான் பயந்து போய்விட்டேன்.

உனக்குத்தான் ஒருவேளை ஆயனர் திருமணம் நிச்சயம் செய்து விட்டாரோ என்று! அப்படி ஒன்றும் இல்லையே?'' என்றார்.

சிவகாமி கண்களில் கபடக் குறும்பு தோன்ற அவரைப் பார்த்து, ''ஏன் இல்லை? என் தந்தைகூட அடிக்கடி என் கல்யாணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டுதான் இருக்கிறார். அவரிடம் சிற்ப வேலை கற்றுக் கொள்ளும் கெட்டிக்கார சீடப்பிள்ளை ஒருவனைப் பார்த்து என்னை மணம் செய்து கொடுக்கப் போகிறாராம்'' என்றாள்.

''ரொம்ப சந்தோஷம். உன் தந்தை நிஜமாக அப்படிச் சொன்னாரா? அவரை உடனே பார்த்து என்னுடைய நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்'' என்று நரசிம்மர் கூறிய மறுமொழி சிவகாமியைத் திடுக்கிடச் செய்தது. அவள் தொடர்ந்து கலக்கமுற்ற குரலில், ''ஆனால், நான் அதற்குச் சம்மதிக்கவில்லை. 'எனக்குக் கல்யாணமே வேண்டாம்! நான் புத்த பிக்ஷுணி ஆகப் போகிறேன்' என்று அப்பாவிடம் சொல்லி விட்டேன்'' என்றாள்.

''என்ன? நீயா புத்த பிக்ஷுணி ஆகப் போகிறாய்? ஆயனர் மகளா இப்படிப் பேசுகிறது? சிவபெருமானும் திருமாலும் உனக்கு என்ன தீங்கைச் செய்தார்கள்? சிவகாமி! நம் திருநாவுக்கரசர் பெருமானின் தேனினும் இனிய சைவத் திருப்பாடல்களை நீ கேட்டிருக்கிறாயே? 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும்' என்ற தெய்வீகப் பாடலுக்கு அபிநயங்கூடப் பிடித்தாயே? அப்படியிருந்தும், புத்த பிக்ஷுணி யாகவேண்டுமென்ற எண்ணம் உன் மனத்தில் எப்படி உதித்தது?'' என்று நரசிம்மர் சரமாரியாய்ப் பொழிந்தார்.

''எனக்குச் சிவன்பேரிலும் திருமாலின் பேரிலும் வெறுப்பு ஒன்றுமில்லை. கல்யாணத்தின் பேரில்தான் வெறுப்பு. புத்த பிக்ஷுணியாகி, நான் தேச யாத்திரை செய்யப்போகிறேன்'' என்று சிவகாமி தலை குனிந்த வண்ணம் கூறினாள்.

''சிவகாமி! அந்தமாதிரி எண்ணமே உனக்குத் தோன்றியிருக்கக்கூடாது. மகா மேதாவியான உன் தந்தையின் பேச்சை நீ தட்டலாமா? அவருடைய விருப்பத்தின்படி அவருடைய சீடர்களில் மிகவும் கெட்டிக்காரன் எவனோ, அவனை, நீ மணம் புரிந்து கொள்ளத்தான் வேண்டும்'' என்று நரசிம்மர் கடுமையான குரலில் சொன்னார்.

''என்னை எந்த அசட்டுப் பிள்ளையின் கழுத்திலாவது கட்டி விடுவதில் உங்களுக்கு என்ன அவ்வளவு சிரத்தை? அரண்மனையில் பிறந்து வளர்ந்த அரசிளங் குமரியை நீங்கள் மணந்து கொள்வதை நான் குறுக்கே நின்று தடுக்கவில்லையே?'' என்றாள் சிவகாமி. அவளுடைய கண்களில் நீர் ததும்பி நின்றது.

''ஜாக்கிரதை, சிவகாமி! அசட்டுப் பிள்ளை என்று யாரைச் சொன்னாய்? உன் தந்தையின் சீடர்களுள் ரொம்பக் கெட்டிக்காரன் யார் என்பது உனக்குத் தெரியாதா? ஆயனர் எத்தனையோ தடவை, 'குமார சக்கரவர்த்திக்குச் சிற்பக் கலை வருவது போல் வேறு யாருக்கும் வராது' என்று சொல்லியதில்லையா? ஆயனரின் சீடர்களில் மிகவும் கெட்டிக்காரனுக்கு உன்னை மணம் செய்து கொடுப்பதாயிருந்தால் எனக்குத்தானே கொடுக்க வேண்டும்! அதற்காக







"உன் தந்தைக்கு நான் நன்றி செலுத்த வேண்டாமா?" என்று நரசிம்மர் கூறியபோது, அவருடைய முகத்தில் குறும்பும் குதூகலமும் தாண்டவமாடின.

சிவகாமியோ சட்டென்று பலகையிலிருந்து எழுந்து நின்றாள். "பிரபு! இந்த ஏழைப் பெண்ணுக்கு ஏன் வீண் ஆசை காட்டுகிறீர்கள்....?" என்று கூறி, மேலே பேசமுடியாமல் விம்மி அழத் தொடங்கினாள்.

நரசிம்மவர்மர் அவளுடைய கரங்களைப் பிடித்து மறுபடியும் பலகையில் தம் அருகில் உட்காரவைத்துக் கொண்டு, "சிவகாமி! என்னை நீ இன்னும் தெரிந்துகொள்ளவில்லையா? இப்படி நீ கண்ணீர் விடுவதைப் பார்க்கும்போது..." என்று கூறுவதற்குள், சிவகாமி விம்மிக் கொண்டே, "பிரபு! இது ஆனந்தக் கண்ணீர்! துயரக் கண்ணீர் அல்ல!" என்றாள்.

பதினேழாம் அத்தியாயம்

வேலின் மேல் ஆணை!

நரசிம்மர் தமது அங்கவஸ்திரத்தின் தலைப்பினால் சிவகாமியின் கண்ணீரைத் துடைத்த வண்ணம், "நினைக்க நினைக்க ஒரு விஷயம் எனக்கு வியப்பையளிக்கிறது!" என்று கூறினார்.

சற்றுமுன் சிவகாமியின் முகத்தை ரதி ஏறிட்டுப் பார்த்தது போல் இப்போது சிவகாமி நரசிம்மரை ஏறிட்டுப் பார்த்தாள். "அது என்ன வியப்பான விஷயம்?" என்னும் கேள்வியை அவளுடைய கண்களின் நோக்கும், புருவங்களின் நெரிப்பும் கேட்பன போலத் தோன்றின.

நரசிம்மர் சிவகாமியின் முகத்தைக் கண்ணால் விழுங்கி விடுபவர் போல் பார்த்துக் கொண்டு கூறினார்: "மூன்று வருஷ காலத்திற்குள் உன்னிடம் ஏற்பட்டிருக்கும் மாறுதலைத்தான் சொல்லுகிறேன். உனக்கு ஞாபகம் இருக்கிறதா, சிவகாமி? சக்கரவர்த்தியும் நானும் அந்த நாளில் உங்கள் வீட்டுக்கு வருவோம். என்னைக் கண்டதும் நீ கொஞ்சமும் கூச்சமோ, தயக்கமோ இல்லாமல் ஓடி வருவாய். என் கைகளைப் பிடித்துக் 'கரகர' வென்று இழுத்துக் கொண்டு போவாய். நம் இருவருடைய தந்தையரும் ஒரு பக்கம் பேசிக் கொண்டிருக்கும் போது நாம் இன்னொரு பக்கத்தில் கொட்டம் அடிப்போம்! சில சமயம் நான் உன்னை எனக்குப் பரத நாட்டியம் சொல்லிக் கொடுக்கும்படி கேட்பேன். நீ சொல்லிக் கொடுக்க முயல்வாய்; எனக்கு நன்றாய் வராது. அதைக் கண்டு நீ கலகல வென்று சிரிப்பாய். உன்னுடைய முல்லைப் பல் வரிசையைப் பார்த்து நான் மதிமயங்கி நிற்பேன். இன்னும் சில சமயம் நாம் இருவரும் ஓடிப் பிடித்து விளையாடுவோம். சில சமயம் ஆயனர் அமைத்த கற்சிலைகளுக்கு மத்தியில் நீயும் ஒரு சிலையைப் போல் அசையாமல் நிற்பாய். நானும் வேண்டுமென்றே உன்னைச் சிலையாகப் பாவித்துக் கொண்டு மேலே போவேன். உன்னுடைய சிரிப்பின் ஒலியைக் கேட்ட பிறகு திரும்பிப் பார்த்து உன்னைப் பிடித்துக்கொள்வேன். 'அகப்பட்டுக் கொண்டாயா, சிவகாமி தேவி?' என்று பாடுவேன். இப்படியெல்லாம் நாம் விளையாடுவதைப் பார்த்து நம்முடைய தந்தைமார்களும் சந்தோஷப்படுவார்கள். அதெல்லாம் ஒரு குதூகலமான கனவு மாதிரி இப்போது தோன்றுகிறது."

"பிரபு! நான் ஏதோ மாறிப்போனதாகச் சொன்னீர்கள். எந்த விதத்தில் மாறியிருக்கிறேன்?" என்று சிவகாமி கேட்டாள்.

"நல்லவேளை, ஞாபகப்படுத்தினாய். எனக்குப் பதினாறு பிராயம் பூர்த்தியான போது, சக்கரவர்த்தி என்னைத் தேச யாத்திரைக்கு அழைத்துச் சென்றார். தெற்கே சித்தர் மலையிலிருந்து வடக்கே நாகார்ஜுன மலை வரையில் நாங்கள் யாத்திரை செய்தோம். மேற்கே, காவேரி நதியின் ஜனன ஸ்தானம் வரையில் போயிருந்தோம். யாத்திரையை முடித்துக்கொண்டு நாங்கள் திரும்பி வருவதற்கு மூன்று வருஷம் ஆயிற்று..."

"அந்த மூன்று வருஷமும் எனக்கு மூன்று யுகமாக இருந்தது" என்றாள் சிவகாமி.

"மூன்று வருஷம் கழித்து நான் திரும்பி வந்து மறுபடியும் உன்னைப் பார்த்த போது, நீ பழைய சிவகாமியாகவே இல்லை. தேவ சபையிலிருந்து அரம்பையோ, ஊர்வசியோ வந்து ஆயனர் வீட்டில் வளர்வதாகவே தோன்றியது. உருவ மாறுதலைக் காட்டிலும் உன்னுடைய குணத்திலும் நடவடிக்கையிலும் காணப்பட்ட மாறுதல்தான் எனக்கு அதிக வியப்பையளித்தது. என்னைக் கண்டதும் நீ முன்போல் ஆர்வத்துடன் ஓடி வந்து வரவேற்கவில்லை; கலகலப்பாகப் பேசவில்லை; தூண் மறைவில் மறைந்து கொண்டு நின்றாய்; நான் உன்னைப் பார்க்கும்போது நீ வேறு பக்கம் திரும்பிக் கொண்டாய்; நான் உன்னைப் பார்க்காத சமயங்களில் கடைக்கண்ணால் என்னைப் பார்த்

துக் கொண்டிருந்தாய். தப்பித் தவறி நம் கண்கள் சந்திக்கும் சமயம் உடனே தலையைக் குனிந்து கொண்டாய்; உன்னுடைய கலீரென்ற சிரிப்பு மறைந்து விட்டது! சில சமயம் உன் கண்களில் நீர் ததும்பி நிற்பதைக் கண்டேன். ஒரு காரணமுமில்லாமல் நீ பெருமூச்சு விடுவதைக் கேட்டேன். எல்லாவற்றையும் விட அதிக வியப்பை எனக்கு அளித்தது என்னவென்றால், என்னை அறியாமல் நானே சில சமயம் பெருமூச்சு விடத் தொடங்கினேன்!....'' என்று நரசிம்மர் சொன்னபோது, சிவகாமி கலீர் என்று சிரித்து விட்டாள்.

நரசிம்மர் மீண்டும் தொடர்ந்து கூறினார்: ''என் உள்ளத்திலும் ஒரு மாறுதலைக் கண்டேன். இரவும் பகலும் சதா சர்வ காலமும் உன்னுடைய நினைவு என் இருதயத்தில் குடி கொண்டது. அந்த நினைவு, இன்பத்தையும் வேதனையையும் ஏக காலத்தில் அளித்தது. எப்பேர்ப்பட்ட முக்கியமான காரியத்தில் ஈடுபட்டபோதிலும் உன்னை என்னால் மறக்க முடியவில்லை. இந்த நிலைமையில் இந்தத் தாமரைக் குளக்கரையில் ஒருநாள் நாம் தனியாகச் சந்தித்தோம். மூன்று வருஷம் உன்னை வந்து பார்க்காமல் இருந்ததற்காக நீ என்னைச் சண்டை பிடித்தாய். கடைசியில் உன்னை மறப்பதில்லை என்று கையடித்துச் சத்தியம் செய்து கொடுக்கச் சொன்னாய். எனக்குச் சிரிப்பு வந்தது. உன்னை ஒருகணமும் மறக்க முடியாமல் நான் திண்டாடிய திண்டாட்டம் எனக்கல்லவா தெரியும்? ஆனாலும், உன்னுடைய மனத் திருப்திக்காகச் சத்தியம் செய்து கொடுத்தேன். அதன் பிறகு, இன்றுதான் நாம் இந்தக் குளக்கரையில் சந்திக்கிறோம். ஒருவேளை நீ இங்கு இருக்க மாட்டாயா என்ற ஆசையினால் வந்தேன். வந்து பார்த்தால், நீ இங்கே இருக்கிறாய்! நம்முடைய உள்ளங்கள்தாம் எப்படி ஒத்திருக்கின்றன!'' என்று சொல்லி நரசிம்மர் நிறுத்தினார்.

''இவ்வளவெல்லாம் சொன்னீர்கள். நான் முதலில் கேட்ட கேள்விக்கு மட்டும் மறுமொழி சொல்லவில்லை!'' என்றாள் சிவகாமி.

''என்ன கேள்வி அது? தயவு செய்து ஞாபகப்படுத்தினால் நல்லது'' என்றார் மாமல்லர்.

''மதுரைக்கும் வஞ்சிக்கும் திருமணத் தூதர்களை அனுப்புவதாக இருந்த விஷயந்தான்!''

நரசிம்மர் இலேசாகச் சிரித்து விட்டு, ''அது உண்மைதான். மகனுக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று எந்தத் தாயாருக்குத்தான் எண்ணமில்லாமலிருக்கும்? என் தாயாருடைய ஏற்பாடு அது! ஆனால், நான் சக்கரவர்த்தியிடம் என் மனநிலையைத்



''ஏம்பா, இது உன் சொந்த ஆட்டோ தானே?''

''ஆமா சார்... எப்படித் தெரிஞ்சுக்கிட்டீங்க?''

''வேகத் தடையிலே நிறுத்தி மெதுவா போறே. குழியிலெல்லாம் விடாம ஒதுங்கிப் போறியே...!''

— அ. தெய்வசிகாமணி.

தெரியப்படுத்தச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தேன். அதற்குள் இந்த யுத்தம் வந்து அதற்கு அவசியமே இல்லாமல் செய்து விட்டது'' என்று கூறினார்.

''பிரபு எனக்கு என்னவோ நிம்மதி இல்லை. மூன்றரை வருஷத்துக்கு முன்பு இருந்தது போல் நாம் இருவரும் குழந்தைகளாகி விடக் கூடாதா என்று தோன்றுகிறது.''

''இல்லை, சிவகாமி! மறுபடியும் குழந்தைகள் ஆவதற்கு ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன். அதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, தேவி சிவகாமியைப் பார்த்த பிறகு குழந்தை சிவகாமியை நான் விரும்ப முடியாது. இரண்டாவது காரணம், சக்கரவர்த்தி இப்போதே நான் போர்க்களம் போவதற்கு ஆட்சேபிக்கிறார்; நான் குழந்தையாயிருந்தால் சம்மதிப்பாரா?''

''பிரபு! தாங்கள் கூட உண்மையாகவே போர்க்களம் போவீர்களா?'' என்று சிவகாமி கவலையுடன் கேட்டாள்.

''அவசியம் போவேன். என் தந்தையுடன் அதைப் பற்றித்தான் மூன்று நாளாக வாதம் செய்து கொண்டிருக்கிறேன். நூறு வருஷ காலமாக அந்நியர்கள் காலடி வைக்காத பல்லவ சாம்ராஜ்யத்தில் இன்று சளுக்கர்கள் படையெடுத்திருக்கிறார்கள். அவர்களைத் துவம்ஸம் செய்து புத்தி புகட்ட வேண்டாமா?''

''பிரபு! அதற்குப் பல்லவ சைனியங்கள் இல்லையா? படைத் தலைவர்கள் இல்லையா? தாங்கள் ஏன் போக வேண்டும்?''

''பல்லவ சைனியங்கள் அன்னியர்களை எதிர்த்து வீரப் போர் புரியும்போது, நான் என்ன செய்வதாம்? அரண்மனையில் உட்கார்ந்து அறுசுவை உண்டி அருந்தி அந்தப்புர மாதர்களுடன் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கட்டுமா? அப்படி நான் இருந்தால், ஆயனர் மகளின் காதலுக்குப் பாத்திரன் ஆவேனா?''

சிவகாமி கூறினாள்: "பிரபு! தாங்கள் போர்க்களம் போவதைத் தடுப்பவள் நானல்ல. தாராளமாய்ச் சென்று பகைவர்களை வென்று வாகை மாலை சூடி வாருங்கள். ஆனால்...."

"ஆனால், என்ன?"

"என்னுடைய கோரிக்கையைப் பரிகாசம் செய்யக் கூடாது."

"இல்லை, சிவகாமி, சொல்லு!"

"வள்ளியம்மைக்கு சுப்பிரமணியர் சத்தியம் செய்து கொடுத்தது போல், உங்கள் கையிலுள்ள வேலின் மேல் ஆணை வைத்துச் சொல்லுங்கள், போர்க்களத்திலும் என்னை மறப்பதில்லையென்று!"

நரசிம்மர் புன்முறுவல் செய்து, "இவ்வளவுதானே? 'என்னை மறந்து விடுங்கள்' என்று நீ ஆணையிடச் சொன்னால்தான் என்னால் முடியாது! மறக்காமலிருப்பதற்கு எத்தனை தடவை வேணுமானாலும் செய்கிறேன். இதோ....!" என்று வேலைத் தூக்கிப் பிடித்தவர், சட்டென்று தயங்கி நின்றார்.

"பிரபு! ஏன் தயங்குகிறீர்கள்? அதற்குள்ளே மனம் மாறி விட்டதா?" என்றாள் சிவகாமி.

"இல்லை, சிவகாமி, இல்லை! இந்த வேல் என்னுடையதில்லையே! இன்னொருவருடைய வேலின் மேல் ஆணையிடலாமா என்றுதான் நான் யோசிக்கிறேன்."

"உங்களுடைய வேல் இல்லையா? பின் யாருடையது?"

"அரங்கேற்றத்தன்று மதயானையின் மேல் வேல் எறிந்து ஆயனரையும் உன்னையும் தப்புவித்தானே, அந்த வீர வாலிபனுடையது. அந்த மகாவீரனை நேரில் கண்டு அவனிடம் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறேன்."

"அப்புறம் அந்த வாலிபனை நீங்கள் பார்க்கவே இல்லையா?" என்று சிவகாமி கேட்டாள்.

"மூன்று நாளாக நாடு நகரமெல்லாம் தேடுகிறோம்; அவன் மட்டும் அகப்படவில்லை."

"பிரபு! அவன் இருக்குமிடம் சொன்னால், எனக்கு என்ன தருவீர்கள்?" என்று கேட்டாள் சிவகாமி.

"அவன் இருக்குமிடம் உனக்குத் தெரியுமா? சீக்கிரம் சொல், சிவகாமி! உனக்கு என்னையேதான் கொடுத்திருக்கிறேனே! வேறு என்ன தரப் போகிறேன்?"

"அந்த வாலிபன் இப்போது எங்கள் வீட்டில் இருக்கிறான்."

நரசிம்மர் துள்ளி எழுந்து, "என்ன சொல்லுகிறாய், சிவகாமி! உங்கள் வீட்டுக்கு அவன் எப்படி வந்தான்?" என்று கேட்டார்.

"முன்னே உங்களிடம் சொன்னேனல்லவா, ஒரு புத்த பிக்ஷு அடிக்கடி வந்து அப்பாவையும் என்னையும் வடநாட்டுக்கு வரும்படி அழைத்துக் கொண்டிருக்கிறார் என்று; அந்த நாகநந்தி அடிகள்தான் அழைத்துக் கொண்டு வந்தார்."

"ஆகா! சக்கரவர்த்தி கூறியது உண்மையாயிற்று... சிவகாமி! அதோ கேள்!" என்றார் நரசிம்மர்.

தூரத்தில் பேரிகை முழக்கம், சங்கநாதம், குதிரைகளின் காலடிச் சப்தம் கலந்து கேட்டன.

"யார், சக்கரவர்த்தியா?" என்றாள் சிவகாமி.

"ஆம்; சக்கரவர்த்திதான் வருகிறார். இதோ! நான் போய்ச் சக்கரவர்த்தியுடன் சேர்ந்து கொள்கிறேன். நீயும் சீக்கிரம் வீடு வந்து விடுவாயல்லவா?"

"குறுக்கு வழியாக வந்து விடுவேன். பிரபு! தாங்கள் போர்க்களம் போவதற்கு முன்னால் இங்கே மறுபடியும் வருவீர்களா?"

"அவசியம் வருகிறேன்! உன் கருவிழிகளில் மின்னும் வேல்களின் மேல் ஆணை!" என்று சொல்லிவிட்டு நரசிம்மர் திரும்பிப் பார்த்துக் கொண்டே விரைந்து சென்று குதிரை மீதேறினார்.


அவர் போவதை மலர்ந்த முகத்துடன் பார்த்துக் கொண்டு நின்ற சிவகாமி, குதிரை காட்டுக்குள் மறைந்ததும் வீட்டை நோக்கி விரைந்து நடந்தாள். வீட்டிலிருந்து வந்த போது அவளுடைய நடையில் காணப்படாத மிடுக்கும் குதூகலமும் இப்போது காணப்பட்டன. ரதியை அவள் மறந்து சென்றாலும், அவள் போவதைப் பார்த்து விட்டு ரதி பின்தொடர்ந்து துள்ளி ஓடிற்று.

வீட்டின் கொல்லைப்புறத்தைச் சிவகாமி அடைந்த போது, வாசலில் பேரிகை முழக்கம் கேட்டது. வீட்டின் மூன்று கட்டுகளையும் அதிவேகமாய்த் தாண்டி வாசற்புறம் சென்றாள். அங்கே அவளுடைய தந்தை ஏற்கெனவே நின்று, குதிரைகளின் மீது ஆரோகணித்து வந்த சக்கரவர்த்தியையும் அவருடைய திருக்குமாரரையும் வரவேற்க ஆயத்தமாயிருப்பதைப் பார்த்தாள்.

குமார சக்கரவர்த்தியின் அறிவொளி வீசிய கண்கள் சிவகாமியின் ஆர்வம் நிறைந்த கண்களுடன் சங்கேதம் பேசிய போது, புத்த பிக்ஷுவையும் அவருடன் வந்த வாலிபனையும் வீட்டிற்குள்ளே காணவில்லையென்று சிவகாமிக்கு நினைவு வந்தது!

(தொடரும்)

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி — பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதை — 1



வீடியோ 'நாயகனில்' கமலஹாசனின் உக்கிரமான சண்டைக் காட்சியில் உணர்ச்சி வயப்பட்டுக் கொண்டிருந்தவர்களின் கவனத்தைச் 'சட்'டென்று திருப்பியது அந்தக் குரல்.

''சார், தந்தி!''

வயதான தந்தையின் மெலிந்த உருவம் ஒரு கணம் கண்களில் நிழலாட, பரபரப்புடன் தந்தியை வாங்கிப் பிரித்தார். ''தந்தை சீரியஸ், உடனே வரவும்'' என்ற வாசகம் எதிர்பார்த்தது போல் சம்மட்டி கொண்டு தாக்காவிட்டாலும், அவரைப் பாதிக்கவே செய்தது. மனைவி பார்வதியும் அவளுடைய அப்பா, அம்மா, வயதான பாட்டி இவர்களின் உருவம் நினைவில் கணப்பொழுது தோன்றி மறைய, அவர் அருகில் வந்துஎட்டிப்பார்த்து, விஷயம் தெரிந்தபின் லேசான திருப்தி கலந்த அதிர்ச்சியுடன், ''இப்ப என்னங்க பண்றது, உடனே புறப்படவா?'' என்று கேட்டாள்.

''பின்னே, போய்த்தானே ஆகணும், சரி, படத்தை 'ஆப்' பண்ணு'' என்றார். பிள்ளைகள் எதிர்ப்புத் தெரிவிக்க, படம் ஓடிக் கொண்டிருந்தது. அவர் புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யலானார்.

'''சீரியஸ்' என்றுதானே வந்திருக்கு, ஒண்ணும் ஆகியிருக்காது'' என்று அவள் சமாதானத்துடன் சொல்ல முயன்றாள்.

''சீரியஸ்னு அடிச்சா 'அது'ன்னுதான் அர்த்தம். தந்தி அப்படித்தான் கொடுப்பாங்க. இங்கே, பம்பாயிலிருந்து நாகர்கோயிலுக்குப் போறதுன்னா அவ்வளவு சீக்கிரம் டிக்கெட் இடைச்சுடுமா என்ன? எதுக்கும் நான் போய் டிக்கெட் ரிசர்வ் பண்ணிட்டு வர்றேன். இன்னிக்குச் சாயங்கால ரயிலில் கிளம்பினா நாளை மறுநாள் போய்ச் சேர்ந்துரலாம். 'புறப்பட்டாச்சுன்னு' பதில் தந்தி கொடுத்துட்டு, 'லீவ்' அப்ளை பண்ணிட்டு வர்றேன். நீ ரெடியா இரு'' என்று சொல்லி, புறப்பட்டார் ஈஸ்வரன்.

ரயிலில் வரும்போதே தந்தையின் ஒவ்வோர் அசைவும் அவர் கண்முன் நிழற்படமாக ஓடி மறைந்தது. அப்பாவோடு வாழ்ந்த அந்தக் காலம், இனிமையான இளமைப் பருவம். இரவு பத்து மணிக்கு வழக்கமாகவந்து'கேட்'டைத்திறக்கும்தந்தையின் காலடி ஓசை தந்த பரவசத்தில் 'அப்பா வந்தாச்சு' என்று மகிழ்ச்சியுடன் ஓடிக் கதவைத் திறக்க, அவர் கையிலிருக்கும் பார்சலைப் பங்கிடுவதில் அண்ணனுடன் ஏற்படும் போட்டி... அவர் மனம் நெகிழ்ந்தது. சராசரியான மாணவனாக இருந்த தன்னை, தன் தொணதொணப்பால் படிக்கச் செய்தார் அப்பா. உறங்கவே விட மாட்டார். மாடியில் படித்துக் கொண்டிருக்கும் போது இடைஇடையே, ''லேய், என்ன சத்தத்தையே காணோம்; உறங்கிட்டியா?'' என்று அவர் உறங்காமல் இவரைக் கண்காணித்தது; அவர் குரல் கேட்டு லேசான உறக்கத்தில் இருந்து விழித்த இவர், ''படிச்சுட்டுத்தானே இருக்கேன். மனசுல படிக்கேம்பா'' என்று சமாதானம் சொன்னது, ''அப்படியா, படி, படி'' என்று அவர் ஊக்கப்படுத்தியது. எல்லாம் நேற்று நடந்தது போலிருந்தது.

''சீரியஸ்'னுதானே தந்தி வந்திருக்கு. ஏதாவது ஆகியிருக்குமா? நமக்காகக் காத்திருப்பார்களோ? வேறு யாருக்கும் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லையே. அண்ணன் அப்பாவோடுதான் இருக்கான். கிராமத்துல நிலபுலன்களைப் பார்த்துக் கொண்டு, தங்கைகள் பக்கத்து ஊர்லதான். நாம்தான் ரொம்ப தூரம். 'ஐஸ்'ல வெச்சிருப்பாங்க!

இந்தச் சிந்தனைக்கு அவசியமே இல்

நாஞ்சிலமுதன்

லையே. தந்தி அடிக்கும் போது சீரியஸா இருந்திருக்கலாம். இப்ப நல்லாயிருக்கலாமே! அப்படின்னா, பார்த்துட்டு, ரெண்டுநாள் இருந்துட்டு, வந்துரணும். லீவை கான்சல் பண்ணிடலாம். ஒருவேளை 'அப்படி' நடந்திருந்தால் லீவ் 'எக்ஸ்டண்ட்' பண்ணணும். அனேகமா லீவ் 'எக்ஸ்டண்ட்' பண்ண வேண்டியதிருக்காதுன்னு நினைக்கிறேன். எல்லாம் அங்கே போய்ப் பார்த்துக்கலாம்.'

காலை ஏழு மணிக்கே நாகர்கோயிலுக்கு வந்து விட்டார்கள். உடனே ஒரு டாக்சியைப் பிடித்துத் தோவாளைக்கு — மலருக்குப் பெயர் பெற்ற அவர்கள் கிராமத்துக்கு விரைந்தார்கள். கிராமத்தினுள் நுழையும் போதே பிச்சி, முல்லை, மரிக்கொழுந்து, செவந்தியின் கதம்பவாசனை மூக்கைத் துளைக்க, டாக்சி பாலத்தைத் தாண்டி இவர்கள் வீடு இருக்கும் சந்தில் நுழைந்தது. பக்கத்து வீட்டினுள்ளோர் எட்டிப் பார்த்தார்கள். தூரத்திலிருந்தே வீட்டின் வாசலைக் கவனித்தார். கூட்டமோ, பரபரப்போ இல்லை. வாசலில் டாக்சி வந்து நின்றது. அங்கு நின்ற பெரியவர் ஒருவர், ''இப்பத்தான் வர்றியா ஈஸ்வரா? எல்லோரும் சுகம்தானே?'' என்று கேட்டு விட்டு நகர்ந்தார். நெஞ்சில் இருந்த பாரம் இறங்கியதா அல்லது கூடியதா என்று உணர முடியவில்லை.

தயக்கத்துடன் வீட்டினுள் நுழையும் போது, ''சித்தப்பா, வந்தாச்சு'' என்று அவர் அண்ணன் மகன், கத்திக் கொண்டே உள்ளே ஓடினான். அண்ணி எட்டிப் பார்த்தாள். அண்ணனைக் காணவில்லை.

''ரயில் உடனே இடைச்சுதா? பயணம் நல்லா இருந்ததா? வா! பார்வதி! பிள்ளைகள் சவுக்கியம்தானே?'' என்று சொல்லிக் கொண்டே பார்வதியையும் பிள்ளைகளையும் உள்ளே அழைத்துச் சென்றாள் அண்ணி.

''அப்பாக்கு எப்படி இருக்கு?'' என்ற அவர் குரலில் தொனித்தது ஏமாற்றமா அல்லது பயமா என்று இனம் கண்டு

அடப்பாவிகளா!

கிழமைப் பெயர்களில் ஊர்ப் பெயர்கள்

தலைஞாயிறு: (இப்பெயரில் இரண்டு ஊர்கள் தஞ்சை மாவட்டத்தில் உள்ளன.) திங்களூர்: (தஞ்சை மாவட்டத்தில் திருவையாற்றுக்கு அண்மையில்); செவ்வாய்ப்பேட்டை: (சேலம் மாவட்டத்தில்); புதன் சந்தை: (சேலம் மாவட்டம் திருச்சிராப்பள்ளி — சேலம் சாலையில்); வியாழமேடு: (திருச்சி நகரிலிருந்து ஏறத்தாழ பதினைந்து கி. மீட்டர் தொலைவில்); வெள்ளியங்கிரி: (வெள்ளிமலை, திருநெல்வேலி மாவட்டத்தில்); சனியூர்: (பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் பிறந்து வாழ்ந்த ஊர்.)

— நா. தண்டபாணி.

கொள்ள முடியவில்லை.

"உள்ளே படுத்திருக்கார். முந்தா நாள் சீரியசாயிட்டது. டாக்டர் வந்து ஊசி போட்டார். 'இன்னும் பத்து மணி நேரம் தாண்டினாத்தான் சொல்ல முடியும், எதுக்கும் உங்க தம்பிக்குத் தந்தி கொடுத்துடுங்க'ன்னு சொன்னார். அதான் உடனே தந்தி கொடுத்தோம். அப்புறம் ராத்திரி சரியாயிட்டுது. ஆனா பேச்சு மூச்சில்லை. 'கோமா'ன்னு சொல்றார் டாக்டர்."

"அண்ணா எங்கே?"

"வயலுக்குப் போனார். இப்ப வந்துருவார். வாங்க, குளிங்க. சுடச்சுட இட்லி சாப்பிட்டுட்டுப் பேசலாம்" என்று சொல்லி, அவள் அடுக்களைக்குள் நுழைய, இவர் அப்பா படுத்திருந்த அறைக்குச் சென்றார்.

படுக்கையோடு ஒட்டிக்கிடந்த உருவம். அசைவில்லை. மூச்சு மட்டும் வந்து கொண்டிருந்தது.

தன்னை மார்பு மீதும் தோள் மீதும் போட்டு வளர்த்த உடல், கனிவு மிகுந்த அந்தக் கண்கள், செயலற்றுக் கிடந்த நிலை. அவர் கண்களில் 'குபுக்'கென்று கண்ணீர் வந்தது. சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு வெளியேறினார்.

அண்ணா வந்து விட்டார்.

"வா, ஈஸ்வரா! இப்பத்தான் வந்தியா? பார்வதி, பிள்ளைகள் சுகம்தானே?" என்று கேட்டுக் கொண்டே, தலையிலிருந்த தலைப்பாகையை அவிழ்த்து 'உஸ், உஸ்'ஸென்று விசிறியவாறே பெஞ்சில் அமர்ந்தார்.

காப்பி சாப்பிடும்போது சொன்னார். "முந்தா நாள் டாக்டர் சந்தேகமாத்தான் சொன்னார். இப்ப, எப்ப ஆகும்னு சொல்ல முடியாதுங்கிறார். நாளைக்கும் இருக்கலாம். மாதக் கணக்கில் நீடிக்கவும் செய்யலாம் என்கிறார். நீ எத்தனை நாள் அவதி எடுத்திருக்கே?"

"அதைப் பத்திப் பிரச்னை இல்லைண்ணா. தேவையானா 'எக்ஸ்டண்ட்' பண்ணிக்கலாம். நிச்சயமாத் தெரியாததனாலே என்ன செய்யறதுன்னே புரியலை."

"ரெண்டு நாள் பார்ப்போம். ஒண்ணும் ஆகலைன்னா நீ கிளம்பு. ஏதாவது ஆச்சுன்னா தகவல் தெரிவிக்கிறேன். அப்ப வந்தால் போதும்."

"திரும்பவும் ஒருக்கா லாங் லீவ் போடறது சிரமம். லீவோட லீவுன்னா எக்ஸ்டண்ட் பண்ணிடலாம். எதுக்கும் கூட ஒரு வாரம் இருந்து பார்த்துட்டுப் போறேனே" என்று சொல்லும் போதே-குரலில் ஒரு தயக்கம், எதையோ எதிர்பார்த்து ஏமாந்த உணர்வு இழை — பம்பாயிலிருந்து மீண்டும் ஒரு முறை விடுப்பெடுத்து வர வேண்டுமென்றால் ஆகும் செலவு — இவற்றின் பிரதிபலிப்பு தெரிந்தது. அவருக்கே ஆச்சரியமாக இருந்தது. இது என்ன சிந்தனை? அப்பா உயிரோடு இருப்பது ஏமாற்றமா? தன் உதிரத்தைக் கொடுத்து, வளர்த்து, முழு மனிதனாக, கௌரவம் உள்ளவனாக ஆக்கிய தந்தைக்குச் செய்யும் கைமாறு இது தானா? ஒரு முறை மீண்டும் வரவேண்டும், கொஞ்சம் பணமும் செலவாகும். இதெல்லாம் ஒரு சுமையா? தன்னை ஆளாக்கத் தந்தை செய்த தியாகத்துக்கு இது ஈடா? சீ! எப்படி என் மனம் இத்தனை கீழ்மையானது? — அவர் சிந்தனையைக் கலைத்தது அண்ணனின் குரல்.

"உனக்கு 'லீவ்' பிரச்னை இல்லைன்னா இரு. இவ்வளவு தூரம் வந்திருக்கிங்க. சும்மாச் சும்மா அலைய முடியுமா?" என்று இவருடைய மனத்தில் ஓடும் எண்ணங்களைப் புரிந்து கொண்டவர் போல அவர் சொன்னதும்,

"அலைச்சல்என்ன அண்ணா அலைச்சல். நம்மை ஆளாக்க அப்பா செய்த தியாகங்களை நினைச்சா நம் உயிரையே கொடுத்தாலும் தகும். பணமும் அலைச்சலும் ஒரு பொருட்டே அல்ல. எதுக்கும் ஒரு வாரம் இருக்கேன். அப்புறம் போயிட்டு, உன் தகவல் கிடைச்சதும் வர்றேன். கடவுள் செயலா அவர் குணமாகி எழுந்து நீடூழி வாழணும்" என்று சொல்லி, தம் மனத்தில் முன்பு ஓடிய எண்ணங்களுக்குப் பரிகாரம் தேட முனைந்தார்.

இரண்டு நாட்கள் கழித்துப் பார்வதி கேட்டாள். ''என்னங்க, தந்தி வந்ததும் போட்டது போட்டபடி அரக்கப் பரக்க ஓடியாந்தோம். புள்ளைங்களுக்குஸ்கூல் நடந்துட்டிருக்கு. இங்கே என்னன்னா காப்பி, சாப்பாடு, தூக்கம், இதுல சீட்டு வெளையாட்டு வேற. என்னதான் மனசுல நெனைச்சிருக்கீங்க? நாம போகாண்டாமா?''

''போகணும். வந்த காரியம் முடியலியே!''

''உங்கப்பாவைப் பார்த்தா அவ்வளவு சீக்கிரமாப் போறவராத் தெரியலை. ரொம்ப நாள் ஆகும்னுதான் நெனைக்கிறேன். அப்புறம் உங்க இஷ்டம்.''

பெரியவர் படுத்தாலும் படுத்தார். உறவினர்களுக்குக் கொண்டாட்டமாகிவிட்டது. காலையிலும், மாலையிலும் தவறாமல் வருவது, ''என்னா, எப்படியிருக்கு?'' என்ற வழக்கமான கேள்வி — அப்புறம் காப்பி, சாப்பாடு, பின்பு வாய் நிறைய வெற்றிலை



''என்னங்க இப்படிப் பேசறீங்க? வந்த காரியம் முடியலியா? அப்ப, உங்க அப்பா செத்தாத்தான் புறப்படுவியளா?''

''நா அப்படியா சொன்னேன்? அப்பா சீரியஸா இருக்கார். இன்னிக்கோ நாளைக்கோன்னு இருக்கு. இதுல நாம போயிட்டா? ஒருவேளை உடனே திரும்ப வேண்டியிருக்கும். எதுக்கும் ரெண்டு மூணு நாள் பார்த்துட்டுப் போவமே...''

யைப் போட்டுக் குதப்பிக் கொண்டே, ஊர் வம்பு, அரசியல், சினிமா விமர்சனங்கள் — ஒவ்வொருவரும் தலைசிறந்த மருத்துவ நிபுணராகி அள்ளி வழங்கும் ஆலோசனைகள் — அத்தனையும் முகம் சுளிக்காமல் பொறுத்துக் கொண்டார் அவர் அண்ணன். முகம் சுளிக்காமல் வந்தவர்களை உபசரித்தார் அண்ணி.

ஒருநாள் வழக்கம்போல் விருந்துண்ட

பின் மூத்த உறவினர் பகவதிக்கண்ணு பிள்ளை அண்ணனைப் பார்த்துச் சொன்னார். "சிதம்பரம் எத்தனை நாளைக்குத்தான் இப்படியே இருக்கிறது? உனக்கு விஷயம் தெரியுமா? மேலத்தெரு சொக்கலிங்கம் பிள்ளை இப்படித்தான் 'கட்டிலும் ஒழிய மாட்டேங்குது; கட்டையும் போக மாட்டேங்குது'ன்னு இழுத்துக்கிட்டுக் கிடந்தார். நம்ம அம்மன் கோயில் நாடி ஜோஸ்யர், அவர் நாடியைப் பிடிச்சுப் பார்த்து, 'ரெண்டே நாள்'னு சொன்னார். கரெக்டா ரெண்டாவது நாள்ல போய்ச் சேர்ந்துட்டாரு. ஈஸ்வரா, போயி அந்த ஜோஸ்யரை வந்து பார்க்கச் சொல். சரியாச் சொல்வார். அதுக்கேத்தபடி நீ ஏற்பாடு பண்ணிக்கலாம்."

இந்த யோசனை நல்லதாகவே பட்டது ஈஸ்வரனுக்கு. உடனே ஆளனுப்பினார். ஜோஸ்யர் வந்தார். முதலில் தயங்கினார். "ஈஸ்வரா! ஒங்கப்பாவும் நானும் ஒண்ணாங்கிளாஸிலிருந்து ஒண்ணாப் படிச்சவங்க. எங்கிட்டக் கேக்காம எதுவும் செய்ய மாட்டார். எனக்கு அவர் செஞ்சிருக்கிற உதவிக்கு அளவே இல்லை. அவர் கையைப் பிடிச்சு, அவருடைய முடிவைச் சொல்லும் துர்ப்பாக்கியம் எனக்கு வேண்டாம். தயவு செய்து என்னைக் கட்டாயப்படுத்தாதே..." என்று நழுவினார்.

"ஜோஸ்யரே! அதெல்லாம் இருக்கட்டும் வேய்! நீரும் பார்த்துக்கிட்டுத்தானே இருக்கீர்? அவர் பிள்ளைங்க என்ன பாடுபடுதுன்னு. ஒரு 'நாள்' தெரிஞ்சுட்டா மனசு கெடந்து அடிக்காது. நீரா கொல்லப் போறீர்? 'நாளை'த்தானே சொல்லப் போறீர். இதுவரை நீர் சொன்னது எல்லாமே சரியா நடந்தது. அதனாலதான் கேக்கிறோம். வாரும், நாடியைப் பார்த்துச் சொல்லும்." என்றார் பகவதி கண்ணு பிள்ளை.

பலரும் வற்புறுத்தவே, மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு பெரியவரின் அருகில் அமர்ந்தார், ஜோஸ்யர். சற்று நேரம் கண்களை மூடித் தியானித்துவிட்டு நாடியைப் பிடித்தார். சிறிதுநேர மௌனம். அறையெங்கும் அமைதி. மிகப்பெரிய எதிர்பார்ப்பை எதிர்பார்க்கும் மரண அமைதி. ஜோஸ்யர், "இன்றிலிருந்து பதினைந்தாவது நாள் உயிர் பிரியும்" என்று சொல்லிவிட்டு விடுவிடென்று வெளியேறினார்.

பதினைந்தாவது நாளும் வந்துவிட்டது. அதிகாலையிலேயே எழுந்து விட்டார் ஈஸ்வரன். தந்தையின் அருகில் போய்ப் பார்த்தார். எந்த மாற்றமும் இல்லை. அண்ணன், அண்ணி, மனைவி, குழந்தைகள் எல்லோரும் குழுமிவிட்டனர். உறவினர்களும் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர். ஊர்ப் பெரியவர்களும் வந்துவிட்டனர். அவர்களுக்கு உணவு, காப்பி, வெற்றிலைப் பாக்கு என்று மீண்டும் கலகலப்பு.

ஈஸ்வரனுக்கு மனத்தில் இனம் புரியாத கலவரம். முடிவை எதிர்பார்த்தா? இல்லை முடிவு வந்துவிடப் போகிறதே என்றா? அவருக்கே புரியவில்லை. தேவாரம், திருவாசகம் படிக்கக் குருக்களை அழைத்து வந்தனர். அவர் உணர்ச்சி பொங்கப் பாடிக் கொண்டிருந்தார். மாலை நான்கு மணி வரை எந்தச் சலனமும் இல்லை. வந்தவர்களில் ஒருசிலர் விட்டுவிட்டு வந்த வேலைகளைக் கவனிக்கச் சலிப்புடன் சென்றனர். சுமார் ஐந்து மணி அளவில் லேசான அசைவு தெரிந்தது. இருபது நாட்களுக்குப் பிறகு முதன் முறையாகத் தோன்றும் அசைவு. அனைவரது முகத்திலும் ஆச்சரியம்.

பெரியவரின் கண்கள் லேசாகத் திறந்தன. மூத்த மகனை நோக்கி அசைந்தன கருவிழிகள். அவர் அருகில்சென்று, "அப்பா அப்பா! நான் சிதம்பரம்பா! தம்பி ஈஸ்வரன் வந்திருக்காம்பா" என்று சொல்ல, ஈஸ்வரன் அருகே சென்று, அவர் பார்வையில் படும்படி நின்றார். கண்கள் ஈஸ்வரனை உற்று நோக்கின. கைகள் லேசாக அசைந்தன அவரை நோக்கி. கைகளைப் பற்றிக் கொண்டார் ஈஸ்வரன். பெரியவர் எழ முயற்சி செய்வது தெரிந்தது. அணையப் போகும் விளக்கோ!

மீண்டும் எல்லாம் செயலற்று விட்டன. மூச்சு மட்டும் சீராக வந்து கொண்டிருந்தது. இரவு மணி எட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. எல்லோர் முகத்திலும் ஏமாற்றம்.

குருக்கள் திருவாசகத்தை உரக்கப் பாடினார். மீண்டும் லேசான அசைவு. உதடுகள் பிரிந்தன. பகவதிகண்ணு பிள்ளை, "ஈஸ்வரா! கோயில் தீர்த்தம் கொண்டு வந்துட்டானா! கொண்டா இப்படி" என்று வாங்கி அவர் வாயில் மெதுவாக

"இதுவரைக்கும் நான் செய்த ஐம்பது ஆபரேஷன்களில் இது ஒண்ணுதான் 'சக்ஸஸ்' ஆகியிருக்கு!"

"அதை ஏன் வருத்தத்தோடு சொல்றீங்க டாக்டர்?"

"அவசரத்தில் வேற பேஷண்ட்டுக்குச் செய்துட்டேன், போயிருக்கு! இப்பத்தான் தெரிஞ்சுது!"

— வேதபுரி எஸ். இரமேஷ்.



ஊற்றினார். இறங்குவது தெரிந்தது. "சிதம்பரம்! பாலும் ஒரு வெள்ளைத் துணியும் கொண்டா" என்று கட்டளையிட்டார். வந்தவுடன் வெள்ளைத் துணியைப் பாலில் நனைத்துப் பிழிந்து ஊற்றச் சொன்னார். சிதம்பரம் அப்படியே செய்ய, பால் மெதுவாக இறங்கியது. நெஞ்சு ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. வாய், மேலும் ஏதாவது விழாதா என்று எதிர்பார்த்த மாதிரி திறந்திருந்தது.

வேறு ஒன்றும் நிகழவில்லை. அனைவரது ஆர்வமும் வடிந்துவிட்டது. நேரம் ஆக ஆக, நாடி ஜோஸ்யரின் கணக்கு தப்பி விடப் போவதை எண்ணி, நம்ப முடியாமல் வியந்தனர்.

திடீரென்று ஏதோ நினைவு வந்தவர் போல பகவதிகண்ணு பிள்ளை சிதம்பரத்திடம் கேட்டார்.

"சிதம்பரம்! ஒங்கப்பா போன வருசம் கீழ்த்தெரு மூலையில் உள்ள களத்தை வாங்கினாரில்ல?"

"ஆமா, மாமா..."

"டேய்! அதுல மாட்டுத்தொழுவங் கட்டி நாலு சிமைமாடு வாங்கிவிடணும்னு சொலவிக்கிட்டே இருந்தார்டா. அதுல ஒரு 'போர்' போடணும்னும், காய்கறித் தோட்டம் போடணும்னும் ரொம்ப ஆசையாச் சொல்வார்டா. அந்தப் பூமியை விட்டுப் போகவே அவருக்கு மனசு இல்லடா. எப்பப் பார்த்தாலும் அந்தக் களத்தைப் பத்தியேதான் பேசுவார். நெனச்சபடி அனுபவிக்காம படுக்கையிலே விழுந்துட்டார். அந்த பூமியிலே உள்ள ஆசைதான் அவருக்கு நெஞ்சு கிடந்து துடிக்குதுன்னு நினைக்கிறேன்."

"அதுக்கு என்ன மாமா செய்யணும்?"

"போ! ஒன் தம்பியை அனுப்பிக் களத்திலே இருந்து கொஞ்சம் மண் எடுத்துவரச் சொல்லு."

ஈஸ்வரன் டார்ச்சை எடுத்துக் கொண்டு போய் ஒரு கிண்ணத்தில் மண்ணைக் கொண்டு வந்தார். அதை நீர்விட்டுக் கலக்கி வலைபோன்ற துணியில் இறுத்து. "சிதம்பரம்! இந்தா, உங்கப்பா வாயில் ஊத்து. அப்பத்தான் அவர் ஆத்மா சாந்தியடையும். நெஞ்சும் வேகும். ஓய்! குருக்களே உரக்கப் பாடும்!" என்று சொல்ல, சிதம்பரம் அந்த மண் கலந்த திரவத்தை, திறந்த வாயில் மெதுவாக ஊற்றினார். திடீரென்று வந்து விழுந்த திரவத்தின் கனம் தாங்க மாட்டாமலோ அல்லது புரை ஏறி விட்டதாலோ என்னவோ, 'ம்ம்க்க்ம், ஹக்' என்ற ஒலித் திணறலுடன் மார்பு ஒரு முறை அதிர்ச்சியுடன் ஏறி இறங்க, கண்கள் மேலே செருக, பெரியவர் உயிர் பிரிந்தது.

உலக நாயகியைத் தாங்கி உலா வரும் பெண்கள்

ஆனந்தி

இளைஞர்களான அர்ச்சகர்கள் சுறுசுறுப்பாகச் சந்தியா காலப் பூஜைக்குத் தயார் செய்கிறார்கள். அலங்கார தீப வரிசைகள் எண்ணெய்த் திரிபோட்டுத் தயாராக இருக்கின்றன. 'டணார்' 'டணார்' என்று மணிகள் அடிக்கத் தொடங்குகின்றன. நான்கு சந்நிதிகளிலும் மந்திரங்களின் ஒலி...

கூடவே ''கடகட, ஜிகுஜிகு'' என்று பெரிய சப்தம்! மந்திரம் சொல்லும் ஒலி இந்த இயந்திர சப்தத்தில் முழுகியே போயிற்று! கோவிலை ஒட்டியுள்ள போலீஸ் ஹாஸ்டல் தண்ணீர்த் தொட்டிக்குத் தண்ணீர் லாரியிலிருந்து தண்ணீர் விடப்படும் சப்தம் அது என்றுபிறகு கேட்டுத் தெரிந்து கொண்டேன். சந்தியாகாலப் பூஜை, குறிப்பிட்ட நேரத்தில்தான் சுமார் இருபது நிமிடங்கள் மிக அழகாக நடந்தது. தண்ணீர் இறைப்பதை அதற்கு முன்னோ பின்னோ வைத்துக் கொள்ளக் கூடாதோ?

சென்னை அசோக்நகர் பகுதியில் மல்லிகேசுவரர் கோயில் சுமார் இருபது வருடங்களுக்கு முன்னால் பூஜை இல்லாமல் வெறிச்சோடி இருந்தது. அசோக் நகர் பகுதி வளர்ச்சியுற ஆரம்பித்த காலத்தில் யாரோ ஒரு புண்ணியவான் தாமாகவே ஒரு விளக்கை ஏற்றி வைத்தார். அப்படி முதன் முதலில் விளக்கேற்றியவர் இன்று கோயிலில் மூன்று காலப் பூஜையும், ப்ரதோஷ பூஜை, மாத சிவராத்திரி, பௌர்ணமிகளில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், நவராத்திரி முதலிய பண்டிகைகளும் இவ்வளவு அழகாக நடைபெறும் என்று எதிர்பார்த்திருக்கவே முடியாது.

மூன்று நிலை வாசல்களுடன் சிறிய கோயில். முன்னால் மகா மண்டபம். முழுமுதற் கடவுளான கணபதியும், நடு நாயகமாக மல்லிகேசுவரரும், அடுத்த கருவறையில் காசி விசுவநாதரும் தரிசனம் தருகிறார்கள். வெள்ளிக்கவசம் சாத்தப்பட்டு விநாயகர் அலங்காரமாக வீற்றிருக்கிறார். அருள்மிகு மல்லிகேசுவரரும், விசுவநாதரும் நாகாபரணம் அணிந்து மோனத்தவம் செய்கிறார்கள். தெற்குப் பார்த்து அன்னை விசாலாட்சி காட்சி தருகிறார். தனியான கருவறையில் மஹேச்வரித் தாயார் மகத்தான ஞானச் செல்வத்தை அள்ளித்தரக் காத்திருக்கிறார்.

கோவிலை நெருங்கும் போது ஞானச் செல்வரான சம்பந்தர் பெருமானின் பதிகம் மனம் குவியச் செய்கிறது. இழையும் குரலில் – சற்று முதுமையின் உருக்கத்தோடு தேவாரப் பதிகம் காதுகளில் விழுகிறது:

> **''பீடுடைய பிரமாபுரம் மேவிய**
> **பெம்மான் இவனன்றே.''**

குறைந்தது அறுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில் இது என்று அபிப்பிராயப் படுகிறார்கள். பல்லவர் காலக் கோயில் அமைப்பு என்றும் சொல்லுகிறார்கள். மல்லிகேசுவரரே ஆதி முதல் அருள் பாலித்து வருபவர். இதர சந்நிதிகள் பிற்பாடு அமைக்கப்பட்டவை. பழைய சரித்திரச் சான்றுகள் கிடைக்கா விட்டாலும் சமீப காலச் சரித்திரம் மிக சுவாரஸ்யமாக இருக்கிறது.

கோவிலைச் சுற்றிலும் குடியிருப்புக்களைக் கட்டுவதற்கு முன்பாக 'புல்டோஸர்' கொண்டு வந்து நிலத்தைச் சமதரையாக்க முயற்சி செய்தார்களாம். புல்டோஸர் வேலை செய்திருந்தால் மல்லிகேசுவரர் கோவில் இருந்த இடம் மறைந்து கூடப் போயிருக்கும். மனிதர்களைவிட ''புல்டோஸர்'' பண்பாட்டுடன் நடந்து கொண்டது. ஒரு சரித்திரச் சின்னத்தை, தெய்வத்தின் இருப்பிடத்தைச் சுற்றி நகரவே அது மறுத்து விட்டது! கோவில் பிழைத்தது! அசோக் நகர் வாசிகள் புண்ணியம் செய்தவர்கள்.

அவர்கள் குடியேறுவதற்கு முன்பே மல்லிகேசுவரர் அருள் புரியக் காத்திருந்தார்.

மல்லிகேசுவரர் என்று ஏன் பெயர் வந்தது என்று பலரை விசாரித்தும் பதில் கிடைக்கவில்லை. ஒரு காலத்தில் மல்லிகைப் புதர்கள் இருந்திருக்கலாமோ என்னமோ...!

தோபா சுவாமிகள் என்ற மகான் இங்கு வந்து மல்லிகேசுவரரைப் பூஜித்து வந்ததாக ஒரு செவி வழிச் செய்தி.

காவல் படை (Police) பயிற்சிக் கல்லூரியின் முதல்வர் கோயிலில் சிரத்தை எடுத்துக் கொண்டார். இன்ஸ்பெக்டர் வேணுகோபால் ராவ் பூஜை செய்ய குருக்களை நியமித்தார். கோயில் பணிகளைச் செய்ய ஸ்ரீ தோபா ஸ்வாமி ஸத்ஸங்கம் திருவி அங்கத்தினர்களைச் சேர்த்தார். 1982 ஆம் ஆண்டு முதல் மல்லிகேசுவர சுவாமிக்கு நித்திய பூஜைகள் தொடங்கப்பட்டன.

83 – ஆம் ஆண்டில் ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கோயிலுக்கு எழுந்தருளினார். அதன் பிறகு கோயிலுக்கு வளர்

நவராத்திரி சிறப்புக் கட்டுரை:

• மகேச்வரி — வெள்ளிக்கிழமை சிறப்பலங்காரம்.



• உலக நாயகியைத் தோளில் சுமந்து...



பிறைதான்.

பக்தர்கள் வெயிலிலும் மழையிலும் நின்று கொண்டு சுவாமி தரிசனம் செய்கிறார்களே என்று ஒரு கூரைக் கொட்டகை போட்டுக் கொடுத்தார், பி. வி. சிவன் நாயர். இந்தக் கூரைக் கொட்டகைதான் நாளடைவில் பல பக்தர்கள் முயற்சியால் மகாமண்டபமாக உருவாயிற்று.

நவராத்திரியை இங்கு மிக விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். இந்த ஆண்டு செப்டம்பர் 19 முதல் 28 ந் தேதி வரையில் தினமும் அன்னை மஹேச்வரிக்குக் காலை மாலை இரண்டு வேளையும் லக்ஷார்ச்சனை நடைபெறவிருக்கிறது. தினமும் மாலையில் சந்தனாலங்காரம் செய்கிறார்கள்.

இந்தக் கோயிலில் உள்ள ஒரு தனிச் சிறப்பு என்னவென்றால் வெள்ளிக்கிழமை தோறும் பெண்கள் அம்பிகையைத் தாங்கிக் கொண்டு பிராகாரத்தில் உலா வருகிறார்கள். உலக நாயகியைத் தங்கள் தோளில் சுமக்க இவர்கள் என்ன புண்ணியம் செய்தார்களோ! இன்னும் என்ன பேறு பெறுவார்களோ!

பௌர்ணமியன்று விசாலாக்ஷி அம்மனுக்கும் மஹேச்வரி அம்மனுக்கும் குளிரக் குளிர அபிஷேகமும் திரிசதி அர்ச்சனையும் நடைபெறுகின்றன.

தேவிக்கு சாகம்பரி என்று ஒரு பெயர். சாகா என்றால் இலைகள். தேவியே தன்னுடைய அளப்பரிய கருணையினால் சகல ஜீவராசிகளுக்கும் பசிப்பிணி நீங்குவதற்காகப் பல்வேறு தாவரங்களாகவும், இலை தழைகளாகவும், காய் கனிகளாகவும் பரிணமிக்கிறாள். அக்டோபர் மாதம் வரும் பௌர்ணமியில் தேவியின் சந்நிதியில் காய்கறிகளால் பந்தல் அமைத்து மகிழ்கிறார்கள்!

தோபா ஸ்வாமிகள் ஸத்ஸங்கத்தாரால் பராமரிக்கப்படும் இந்தக் கோயிலுக்கு ராஜ கோபுரங்கள் இல்லை. உண்மையில் தெருவிலிருந்து இந்தக் கோயில் இருக்கும் இடமே தெரியவில்லை! மேலும் கீழும் அலைந்து திரிந்துதான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. ஒரு சரியான வழி கூட இல்லை. சிறிய கேட்தான் இருக்கிறது.

"ஏன் இப்படி? கோயிலுக்கு நேரே வருவதற்குச் சரியான வழி வைக்கக் கூடாதா?" என்ற கேள்விக்குக் காரியதரிசி காமேச்வரன் சற்று வருத்தத்துடன் பதில் சொன்னார். "பெரிய கதவு செய்து தயாராக இருக்கிறது. ஆனால் சரியான பாதை தரமாட்டேன் என்கிறார்கள். அந்தத் தடை நீங்கிக் கோயிலுக்கு நேர்ப்பாதை அமைய அவர்தான் கருணை செய்யவேண்டும்" என்று மல்லிகேசுவரரைக் காட்டினார்.

வண்ணப்படங்கள் : **யோகா**

சிரிக்க வையுங்கள்: சிங்கப்பூர் செல்லுங்கள்!

கீழே உள்ள இடத்தில் பால்பாயிண்ட் பேனாவால் ஒரு ஜோக் அல்லது ஓர் அனுபவச் சிரிப்புத் துணுக்கு எழுதி நிரப்பி அனுப்புங்கள். பிரசுரமானால் ரூ. 25 பரிசு. அடுத்த ஆகஸ்டு இறுதிக்குள் யாருடைய ஜோக்/துணுக்குகள் மிக அதிகமாகப் பிரசுரமாகிறதோ, அவர் ஜோடியாக சிங்கப்பூர் போகலாம் — செலவின்றி! திரும்பி வந்து பேட்டி தரலாம். உறை மீது, "சிரிப்பு — சிங்கப்பூர்" என்று குறிப்பிடவும். முடிவு தேதி: 1.10.90.

ஜோக்/துணுக்கு:

என் பெயர்: ....


விலாசம்: ....

....

....

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம்

ஐடிபிஐ-முதலீட்டுப் பத்திரங்கள் முதலீட்டு ஆதாய வரி விலக்குப் பெற ஒரு கவர்ந்திடும் வழி



Sobhagya-8/89 TAM

- ஆண்டு முழுவதும் சமவிலையில் கிடைக்கும்.
- வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு எண் 54E-ன் கீழ் முதலீட்டு ஆதாய வரி விலக்கு.
- செல்வ வரிச் சட்டம், 1957, பிரிவு எண் 5(1)xvie)-ன் கீழ் செல்வ வரி விலக்கு.
- வருமான வரிச் சட்டம், பிரிவு எண் 80-Lன் கீழ் வருமான வரி குறைப்பு.
- ஆண்டொன்றுக்கு 9% விகிதத்தில் ஆறு மாதத்திற்கொரு முறை வட்டி வழங்கப்படும்.
- முதலீடு செய்தவர் விரும்பினால் 3 ஆண்டுகட்கான மொத்த வட்டியும் தள்ளுபடி முறையில் முன்னதாகவே ஒரே நேரத்தில் வழங்கப்படும்.
- எவ்வித வரியும் வட்டி வழங்கும்பொழுது கழிக்கப்படமாட்டாது.
- வெளியூர்க் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றை மாற்றுவதற்கான செலவை ஐடிபிஐ ஏற்றுக்கொள்ளும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள ஐடிபிஐ ஆபிஸை அணுகுங்கள் அல்லது மானேஜருக்கு எழுதுங்கள்

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா

ஐடிபிஐ டவர், கஃப் பரேட், கொலாபா, பம்பாய்-400 005.

> ஒற்றர் தலைவன் தங்கள் தொழிலின் குரூரமான நிஜத்தை உணர்ந்திருக்க வேண்டும். ஓர் ஒற்றனைச் சதுர அங்குலம் சதுர அங்குலமாக் உருவாக்கியபின், அந்தப் புதையலைத் தெரிந்தே எதிரிகளின் கோட்டையில் புதைக்கும் அபாக்கியத் திற்கும் சம்மதிக்க வேண்டும். புதையல் திரும்பக் கிடைக்குமோ, எதிரிகளுக்கு உபயோகமாகிப் போகுமோ என்ற கேள்வியின் இரண்டு பதில்களையும் சந்திக்கத் தயாராய் இருக்க வேண்டும்.
>
> — அலெக்ஸாண்டர் க்ளீன்.



ஆபத்து நெருங்குகிறது...

COUNT DOWN — 16

பத்தொன்பது வருட காலம் அமீர் ஜவஹரை வளர்த்து, பயிற்சி அளித்து, ஆளாக்கிய மேஜர் நாஸர் சிரித்துக் கொண்டே கதவருகே நின்றிருந்தார்.

''அமீர்... மேரே லால்... கப் ஆயா பேட்டா?'' மேஜர் நாஸர் கதவைக் காலால் பின்புறம் தள்ளினார். கதவு மூடித்தானாகத் தாழ் போட்டுக் கொண்டது.

அமீர் ஜவஹர், ஒற்றைச் சிப்பாயின் எதிரே கொண்டு வந்து நிறுத்தப்பட்ட பீரங்கி வண்டியைப் பார்ப்பது போல் மேஜர் நாஸரைப் பார்த்தான். அவனைச் சுமந்த தோள்களில் இன்னும் விறைப்புத் தெரிந்தது. அவனைத் தாங்கிய மார்பில் இன்னும் உறுதி தெரிந்தது. அவனை ஊஞ்ச லாட்டிய கைகளில் இன்னும்...

''நாஸர், உன் அருமை மகன் என்ன செய்திருக்கிறான் தெரியுமா?'' மேஜர் ஜெனரல் அப்துல் கரீம் பதற்றமாக ஓரடி முன்னால் நகர்ந்து மேஜையின் கண்ணாடிப் பரப்பைத் தொட்டதும், ''டோண்ட் மூவ்'' என்று கத்தினான் அமீர் ஜவஹர்.


மேஜர் ஜெனரல் விறைத்து நிற்கும் ராணுவ வீரன் பொம்மை போல நின்றார்.

''அமீர்... என்ன இது?''

''ஸாரி மேஜர் அங்கிள்.'' அமீர் ஜவஹர் அவருடைய கனன்ற தீப் பார்வையைச் சந்தித்தான். ''நான் இப்போது அவசரமான வேலையோடு வந்திருக்கிறேன். எனக்கும் மேஜர் ஜெனரலுக்கும் நடுவில் ஒரு சின்ன வியாபாரம் முடிவடைகிற நேரத்தில் தெரியாத்தனமாக நீங்கள் நுழைந்து விட்டீர்கள்.''

மேஜர் நாஸர் விறைப்படைந்தார். விளக்கொளியை விட வேகமாக நகர்ந்து ஒரு நாற்காலியை உதைத்து அவன் பக்கம் தள்ளி

அஞ்சனா மைக்கேல்ராஜ்



னார். அவருடைய கையில் ராணுவத் துப்பாக்கி அந்த சொற்ப சமயத்தில் ஜனித்திருந்தது.

''என்னுடைய குறி பற்றி உனக்குத் தெரியும் அமீர். கைகளைத் தூக்கு!''

நெருக்கடியான நேரத்திலும் சூழ்நிலையை மின்னல் நேரத்தில் புரிந்து கொண்டு அவர் செயல்பட்டதை அமீர் ஜவஹர் பேராச்சரியத்துடன் பார்த்தான்.

''மேஜர் அங்கிள். ஆயுதம் வைத்திருப்பதால் மட்டும் எதிரி பலசாலியாகி விட மாட்டான் என்று நீங்கள்தான் எனக்குச் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் பலசாலி இல்லை என்று இப்போதே உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். ராணுவ முறைப்படி பார்த்தால் உங்களை விட அதிக அதிகாரம் படைத்தவர் மேஜர் ஜெனரல். அவர் உத்தரவு தரட்டும். கைகளைத் தூக்கச் சொல்லி. உடனே தூக்கி விடுகிறேன்.''

''நோ...'' மேஜர் ஜெனரலின் கண்கள் விரிந்தன. அவருடைய நயனங்களில் நர்த்தனமாடிய கிலி நாஸருக்குக் குழப்பத்தைத் தந்தது.

''மேஜர் ஜெனரல், மேஜரின் துப்பாக்கியைக் கீழே போடச் சொல்லுங்கள்.''

''நாஸர். அவன் சொற்படிச் செய்.''

மேஜர் நாஸர் துப்பாக்கியைக் கீழே எறிந்தார்.

''அமீர், உன்னை இந்த மாதிரியான ஒரு சூழ்நிலையில் சந்திப்பேன் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை'' — மேஜர் நாஸரின் கண்களில் காழ்ப்பு இருந்தது.

''ஹாண்ட்ஸ் அப்'' என்றான் அமீர் ஜவஹர்.

''அமீர்'' என்று அலறினார் மேஜர் நாஸர்.

''அவன் சொல்வதைச் செய் நாஸர். நீ தடுமாறினால் நான் வெடித்துச் சுக்கலாகி விடுவேன்.''

நாஸர் கைகளை உயரத் தூக்கினார். கண்கள் நெருப்பை உமிழ்ந்தன.

அந்த அறையின் சுவரில், கொடியேற்றத்திற்காகப் பயன்படுத்தப்படும் நைலான் கயிறு வளையங்களாக மாற்றப்பட்டு ஒரு கொக்கியில் தூங்கிக் கொண்டிருந்தது.

அமீர் ஜவஹர் அந்தக் கயிற்றைச் சுட்டிக் காட்டினான், தன் பார்வையால்.

''மேஜரைக் கட்டிப் போடுங்கள், மேஜர் ஜெனரல்.''

மேஜர் ஜெனரல் பணிந்தார்.

''அமீர். ஐ ஆம் அஷேம்ட் ஆஃப் யூ.'' மேஜர் நாஸர் எச்சிலைத் தரைக் கம்பளியில் உமிழ்ந்தார். ''உன் அம்மா, அப்பாவைக் கொன்ற இந்தியர்களுக்கு எதிராகச் செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் மேஜர் ஜெனரலிடமும் என்னிடமும் காட்டுகிறாய்.''

''என் அம்மாவைத் துரத்தித் துரத்திச் சிதைத்தவர்களை நான் மன்னிக்கப் போவதில்லை மேஜர்! நிச்சயம் மன்னிக்கப் போவதில்லை. நான் பாகிஸ்தானில் உங்களுக்கு மட்டும்தான் கடமைப்பட்டிருக்கிறேன் மேஜர். என்னையும், சாந்தினியையும் வளர்த்ததற்காக. படிப்பையும் உடம்பில் உறுதியையும் கொடுத்ததற்காக. ஆனால் இந்தியாவிடம் நான் அதிகமாகக் கடன்பட்டிருக்கிறேன். அது உங்களுக்குத் தெரியும்.''

''துரோகி. நமக்ஹராம்! என்ன விலை கொடுத்தார்கள் உனக்கு?''

''ஏக் ந—யா—பை—சா—'' அமீர் ஜவஹர் மேஜர் ஜெனரலின் பக்கம் திரும்பினான். ''ரகசியப் பெட்டியைத் திறக்கிறீர்களா மேஜர் ஜெனரல். உங்களுக்கு வேறு வழியில்லை.''

சாட்டையிலிருந்து விடுபட்ட சுழல் பம்பரம் போல மேஜர் ஜெனரல் அவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவது மேஜர் நாஸருக்குத் தீராத வியப்பாக இருந்தது. நயனங்களைச் சுழற்றி அவர்களைப் பார்த்தார்.

எண்கள் சரியாக அமைக்கப்பட்டன. லீவர்கள் தேவையான கோணங்களுக்கு மாற்றப்பட்டன. ஸேஃப்வால்ட் மேஜர் ஜெனரலின் உத்தரவிற்குக் கீழ்ப்படிந்து திறந்தது. அதனுள்ளிருந்து நகைப் பெட்டி போலிருந்த ஒரு பெட்டியை எடுத்து, மேஜையின் மீது வைத்தார்.

அமீர் ஜவஹர் அதை இடது கையால் திறந்தான். உள்ளே நீல நிற வெல்வெட் படுக்கையில் சிங்காரமான துப்பாக்கி படுத்திருந்தது. அதன் அடிப்புறம் இருந்த எண்களைப் பார்வையிட்டான். 99 60 90. இடது கையாலேயே அதன் முதுகுக் குதிரையை விலக்கி, அது டம்மித் துப்பாக்கிதான் என்பதை உறுதி செய்து கொண்டான். பழையபடி பெட்டியில் வைத்து அழுத்தி மூடினான்.

''மேஜர் ஜெனரல். நீங்கள் எனக்காக இன்னும் கொஞ்சம் சிரமப்பட வேண்டியிருக்கிறது. இன்டர்காமில் உங்கள் கீழதிகாரிகளை அழையுங்கள். என்னிடம் மிக முக்கியமான பொறுப்பு ஒன்றை ஒப்படைத்திருப்பதாகச் சொல்லுங்கள். பாகிஸ்தான்—இந்திய எல்லையருகே ஹெலிகாப்டரில் என்னை அழைத்துச் சென்று இறக்கி விடும்படி உத்தரவிடுங்கள். இடையில் எந்தத் தடையும் எனக்கு ஏற்படுத்தக் கூடாதென்று கண்டிப்பாகச் சொல்லுங்கள்; உங்களையும், மேஜர் நாஸரையும் இன்னும் மூன்று மணி நேரத்திற்குத் தொந்தரவு செய்யக் கூடாது என்று ஆணையிடுங்கள்.''

''இத்துடன் நீ தப்பித்து விட முடியும் என்று நினைக்கிறாயா அமீர் ஜவஹர்?''

அமீர் ஜவஹர் பேச்சின்றி இன்டர்காமை அவர் பக்கம் நகர்த்தினான். அவன் உத்தரவிட்டபடி அவர் உத்தரவிட்டதும், ''அபவுட்டர்ன்!'' என்றான்.

மேஜர் ஜெனரல் அவன் எதற்குத் திரும்பி



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-இல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாட சாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ.300/' அல்லது 500/' ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/' அல்லது 5000/' மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப் போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்பவேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த
தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

****** இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு *****

நிற்கச் சொல்கிறான் என்று தெரிந்தும் திரும்பி நின்றார்.

அமீர் ஜவஹர் கீழேயிருந்த துப்பாக்கியைப் பொறுக்கி, அதன் வலுவான பின்புறத்தால் மேஜர் ஜெனரலின் பின் மண்டையைத் தாக்கினான்.

தென்னை மட்டை அறுந்து விழ்வது போல் மேஜர் ஜெனரல் மயக்கமாகி விழ்ந்தார். அமீர் ஜவஹர் அவரைக் கட்டிப்போட ஒரு முழு நிமிடம் எடுத்துக் கொண்டான்.

மேஜர் நாஸரை நெருங்கினான்.

''மேஜர்'' என்றான் இளகிய குரலில். ''நான் உங்களுக்குத் துரோகம் இழைக்கவில்லை. ஆனால்... ஆனால்... என்னிடம் நீங்கள் ஒரு மாபெரும் பொய்யைச் சொல்லி விட்டீர்கள். எனக்கு உண்மை தெரிந்த பிறகு, என்னால் இப்படி துரோகியாகத் தான் மாற வேண்டியதாகி விட்டது. நான் உங்களுடைய தேசத்துரோகி. உங்கள் துரோகி இல்லை.''

குனிந்து உட்கார்ந்து உதடுகளைக் குவித்து அவர் கன்னத்தில் முத்தமிட்டான்.

''ஸாரி அங்கிள்!'' என்றான் கன்னத்தில் வழிந்த நீருடன்.

''போகிறேன் அங்கிள்,'' என்று சொல்லி விட்டு, மேஜரின் அழுக்கடையாத தூய கைக்குட்டையை எடுத்து அவருடைய வாய்க்குள் வைத்தடைத்தான். புறப்பட்டான்.

ஹெலிகாப்டர் இரைச்சலாகக் குளிர் காற்றை இறைத்துக் கொண்டு இறங்கியது.

அது தரை ஊன்றித் தன் மண்டையில் இருந்த விசிறிகளின் சுழற்சியை நிறுத்தாமல் தொடர்ந்தது.

அமீர் ஜவஹர் தன் படபடத்தை அடக்கிக் கொண்டு ஒரு பெருமூச்சை விடுதலை செய்தான். இனிமேல் தான் திரும்பியே வர முடியாத தேசம் என்ற எண்ணத்துடன் பின்னால் திரும்பிப் பார்த்தான். மனத்தில் பாரமாக உணர்ந்தான். ஒரு சாதாரணப் பிரஜையாக வளர்ந்திருக்கலாம். நடந்தது எதுவும் தெரியாமல், தான், தன் தங்கை என்ற சின்ன வட்டத்தைத் தன் உலகமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தியிருக்கலாம். பெட்டிக் கடை வைத்திருக்கலாம். இல்லையென்றால் வேறு ஏதாவது தொழில் செய்திருக்கலாம். இப்போது யோசித்து எதுவும் நடக்கப் போவதில்லை.

''ஸார்!'' என்றான் ஹெலிகாப்டரைச் செலுத்தி வந்தவன்.

அமீர் ஜவஹர் திரும்பி அவன் தோளில் தட்டினான். கட்டை விரலை உயர்த்திக் காட்டினான். ஹெலிகாப்டரின் பைலட் சிரித்துக் கட்டை விரலைப் பதிலுக்கு உயர்த்திக் காட்டினான்.

ஹெலிகாப்டர் நின்ற இடத்திலிருந்து நூறடி தூரத்தில் ஒரு ஜீப் நின்றிருந்தது. அதன் முன் விளக்குகள் அவனை அழைத்

ராயல் பூடான் அரசின்

பூடான் தீபாவளி பம்பர்



உங்கள் அதிர்ஷ்ட ராசிக்கு ஏற்ப பரிசுச் சீட்டுகளை தேர்ந்தெடுத்து வெல்வீர் பரிசுகளை



வெல்க! முதல் பரிசு ரூ/ரூ.

1 கோடி

108வது குலுக்கல்: 18.10.1990

2 வது பரிசு (1)	3 வது பரிசு (1)	4 வது பரிசு (48)
ரூ/ரூ. 25 லட்சம்	ரூ/ரூ. 10 லட்சம்	ரூ/ரூ. 1 லட்சம் வீதம்

சிறப்பு சலுகை!


- டிக்கட்டுகளை நேரடியாக பெற டிமாண்ட் டிராப்ட் அல்லது மணிஆர்டர் அனுப்பவேண்டிய முகவரி **பயனீர் லாட்டரீஸ்** 19, 9வது கிராஸ், மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003
- தபால் செலவு இலவசம்.
- பத்து டிக்கட்டுகள் வாங்கினால் ஒரு தோல் பர்ஸ் இலவசம்.

டிக்கட் விலை ரூ/ரூ. 100/-

5th	96	5,000	500	500
6th	960	1,000	200	200
7th	9600	500	100	100
8th	9600	200	50	50
9th	96000	100	20	20

10 டிக்கட்டுகளுக்கு எண்டுகள் உடனடி கூப்பன

120 டிக்கட்டுகளுக்கு உடனடி சிறப்புக் கூப்பன



விற்பனையாளர்கள் :
M s. பயனீர் லாட்டரீஸ்,
சென்னை, பெங்களூர், டெல்லி

வெளியீடு :
துணை செயலாளர் . லாட்டரி இயக்ககம்,
ராயல் பூடான் அரசு, பண்ட்ஷோலிங், பூடான்



"உன்னுடைய மனைவியின் வியாதியை அந்த டாக்டர் நிமிஷமாக் குணப்படுத்திட்டாரா? எப்படி?"

"அவளிடம், அந்த வியாதி வயதானவர்களுக்கு மட்டுமே வருவது என்று சொன்னார். அதிலிருந்து அவள் அதைப் பற்றி வாயே திறப்பதில்லை."

— பன்னீர்செல்வன்.

தன.

ஓர் இரவு முடிவதற்குள் எத்தனை விஷயங்கள் நடந்தேறி விட்டன!

அமீர் ஜவஹர் அந்த ஜீப்பில் ஏறினான். ஜீப் உடனே ஓடத் தொடங்கியது. அதன் டிரைவர் மிக மரியாதையுடன் ஜீப்பைச் செலுத்தினான். இந்திய எல்லைக்குச் சற்று தூரத்தில் நிறுத்தினான்.

அமீர் ஜவஹர் ஜீப்பிலிருந்து இறங்கினான். கையசைத்தான். ஜீப் திரும்பியது. விளக்குகள் எதுவுமின்றி அவனை விட்டு விலகித் தன் தேசத்தை நோக்கித் தன் கடமையைச் செய்ய முன்னேறியது.

அமீர் ஜவஹர் ஒரு விரக்தியான சூள் கொட்டலை வெளிப்படுத்தினான்.

சாந்தினியை நினைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

பிரதேசம் வெகு அமைதியாக இருந்தது. எங்கேயோ வெகு தூரத்தில் டப, டப வெனப் பட்டாசுச் சப்தம் போல் கேட்டது.

எல்லை வீரர்கள் சுயக் குண்டுகளை விரயம் செய்கிறார்களோ என்னவோ என்று நினைத்துக் கொண்டான்.

இந்திய எல்லைக்குள் நுழைந்தான். இந்தியச் சீருடை. இந்திய எல்லை. இனி நெஞ்சில் அதிக இதயத் துடிப்பின்றி நடக்கலாம் என அவன் முடிவெடுத்த போது அவன் முகத்தில் ஒளி வட்டம் பாய்ந்தது.

"அமீர்!"

மணிமாறன்!

பாகிஸ்தானின் இந்தியக் கைக்கூலி. அவன் மேல் எரிச்சலாக வந்தது. 'காசுக் காகத் தன் தேசப்பற்றைத் துறந்தவன். ஒவ்வொருவருக்கு ஒரு விலை. எனக்குப் பாசம். அவனுக்குக் காசு.

'எப்படியிருந்தால் என்ன? அவன் பத்திரமாக உள்ளே அழைத்துச் செல்லப் போகிறான். பாகிஸ்தான் ஒற்றன் என்று நினைத்து என்னைப் பல்லக்கில் தாங்கப் போகிறான். முட்டாளே! நான் ஒரு தேசத் துரோகி. பாகிஸ்தான் தேசத்துரோகி.'

"போன காரியம் என்ன ஆயிற்று அமீர்? வெற்றியா?"

"மிகவும்!"

மணிமாறன் டார்ச்சைத் தழைத்தான். "வெரிகுட். எனக்கு ஏதாவது செய்தி உண்டா?"

"ஜீப்பில் போய்க் கொண்டே பேசுவோமே."

ஜீப் உறுதியான டயர்களைப் பூமியில் பதித்து விரைந்தது. இருபது கிலோ மீட்டர் பயணித்திருந்த போது பீப் பீப் பீப் என்று ஜீப்பின் ரிசீவர் சப்தித்தது.

மணிமாறன் ஹெட் ஃபோன்களை அணிந்தான். ரேடியோ அலைவரிசையைச் சரிசெய்து கொண்டான். அவனுக்கு வந்த செய்தியை, "அப்படியா, சரி, சரி" என்று கொஞ்சம் கலவரத்துடன் கேட்டுக்கொண்டான்.

ஹெட்ஃபோன்களைக் கழற்றினான்.

"யார் மணிமாறன்?"

மணிமாறன், "ஆபத்து நம்மை நெருங்குகிறது" என்றான். "உன்னையும் என்னையும் எதிரிகள் அடையாளம் கண்டுவிட்டார்கள்" என்று சொல்லி, ஜீப்பைத் திடீரென்று தார்ச் சாலையில் இருந்து மரங்கள் அடர்ந்த, பாதையற்ற ஒரு பாதையில் நுழைந்து செலுத்தினான்.

"யார் எதிரிகள்? இந்தியர்களா?"

மணிமாறன், "ஜீ் கொயட்" என்றான்.

ஜீப்புக்கு எதிரில் மரங்கள் மோதும் வேகத்தில் வந்தன. ஜீப்பின் பத்தடி முன்னால் மட்டும் விளக்குகள் பாதையை ஊடுருவிக் காட்டின. அடர்ந்த பாதை.

சில மின்மினிப் பூச்சிகள் பறந்தன. பல சுவர்க் கோழிகள் கிரீச்சிட்டன. அமைதி கலந்து அங்கங்கே ஆந்தைகள் குரல் எழுப்பின. ஜீப்பின் பின்னால் இருட்டு. பக்கங்களில் இருட்டு. மரங்களினூடே ஏதோ ஒரு மிருகம் கிளைகளை முறித்துக் கொண்டு ஓடியது ஜீப்பின் இயந்திர சப்தத்தை மீறிக் கேட்டது. எருமையாக இருக்கலாம்.

அமீர் ஜவஹருக்குப் புதிராக இருந்தது. ரேடியோவில் என்ன செய்தியை யார் அனுப்பினார்கள்?

ஜீப் நின்றது. வெகு திடீரென்று நின்றது. மணிமாறன் இயந்திர சப்தத்தை அணைத்தான். வெறும் இயற்கையின் சப்தங்கள் மட்டும். மிகவும் பாதுகாப்பான சூழ்நிலையில் அந்த இயற்கைச் சப்தங்கள் மனத்திற்கு மகிழ்வைக் கொடுக்கலாம்.

இப்போது கொடுக்கவில்லை.

"மணிமாறன் சொல். ஏன் இந்தப் பரபரப்பு? யாரிடமிருந்து செய்தி?"

"இண்டியன் கமாண்ட். உன்னைச் சுட்டுத்தள்ளச் சொல்லி உத்தரவு அமீர்."

மணிமாறன் தன் துப்பாக்கியை அமீர் ஜவஹரின் மார்புக்குக் குறி வைத்தான்.

(தொடரும்)

சினிமாவை வீடியோ விழுங்குமா?

கிஷோர், மாம்பலம் ஏரியா முழுக்கச் சல்லடை போட்டுச் சலித்து விட்டார்... ஒரு விடியோ லைப்ரரியில் கூட அவருக்கு வாடகைக்கு ஒரு டெக் கிடைக்கவில்லை.

"ஏன் சார்! இரண்டு நாள் சேர்ந்தாப்பல லீவு என்பது முன்னேயே தெரிந்த விஷயம் தானே! மூணு, நாலு நாளைக்கு முன்பே எல்லா டெக்கும் 'புக்' ஆயிடுச்சு. நீங்களும் முன்னமே புக் பண்ணியிருக்கலாமே" என்று விடியோ கடைகளில் 'அட்வைஸ்' தான் கிடைத்தது கிஷோருக்கு.

இத்தனைக்கும், சென்னை நகரில் மட்டும் சுமார் 1200 விடியோ லைப்ரரிகள் உள்ளன. தமிழகம் முழுவதுமாகச் சுமார் ஆயிரத்து ஐந்நூறு இருக்கும்!

மயிலாப்பூரில் விடியோ லைப்ரரி நடத்தும் சேகர், "கலர் டீ.வி. மத்தியதர வகுப்பினருக்கு எட்டும் பொருளான பிறகு வி. சி. ஆர். வாங்குவது பெரிய விஷயமாக



* சேகர்



• படுக்கையில் சாய்ந்தபடி படம் பார்க்கலாம்...

இக்கட்டுரைக்கு யோசனை வழங்கிய வாசகர்: டி. பாஸ்கர், நாகப்பட்டினம்

* ராஜேந்திரன்



இல்லை. 'டெக்கை' வாடகைக்கு எடுப்பது அதை விடச் சுலபமாகி விட்டது. எனவே வீடியோ லைப்ரரிகள் நிறைய முளைக்க ஆரம்பித்துள்ளன'' என்றார்.

போட்டி கடுமையாகி, எட்டே ரூபாய்க்கு ஒரு 'டேப்பை' வாடகைக்கு எடுக்க முடிகிறது. மயிலாப்பூர் வீடியோக் கடை ஒன்றில் ஆண்டுக்கு ஐம்பது ரூபாய் கட்டி உறுப்பினராகி விட்டால் சலுகை கட்டணமான ஐந்து ரூபாய்க்கே தருகிறார்கள். அதே போல் டெக் வாடகையும் இருபத்து நாலு மணி நேரத்துக்கு எழுபத்தைந்து ரூபாய் முதல் அறுபது ரூபாய்க்குள் வேறுபடுகிறது. ஒரே ஒரு படம் பார்த்து விட்டுத் திருப்பித் தர மூன்று மணி நேரத்துக்குக் கூட டெக்கை வாடகைக்குத் தருகிறார்கள் ஒரு திருவல்லிக் கேணிக் கடையில்!

ஆக, தியேட்டருக்குப் போய்ச் சினிமா பார்ப்பதை விடச் சுலபமாகவும் செலவு குறைவாகவும் வீட்டிலேயே விரும்பிய படத்தைப் பார்க்க முடிகிறது — அதாவது டெக் வாடகையை ஒரு குடியிருப்பின் ஐந்தாறு குடும்பங்கள் பங்கு போட்டுக் கொண்டால்.

அமெரிக்காவில், இந்த வீடியோ மோகத்தை முறியடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் சின்னத் திரையில் சுவைக்க முடியாத, STAR WARS போன்ற பிரமிப்பூட்டும் காட்சிகளடங்கிய படங்கள் வர ஆரம்பித்தன. 'அஞ்சலி' படத்திலும் இத்தகைய பல காட்சிகளைக் காண்கிறோம். மறுபுறமாக ''பழைய தமிழ்ப்பட காஸெட்டுகள் அறுபத்தொன்பது ரூபாய் விலைக்குக் கிடைக்கும்'' எனக் குறிப்பிட்டது வி.ஜி.பி. நிறுவனத்தின் விளம்பரம். எப்படி இவ்வளவு மலிவு விலையில் தர முடிகிறது என்று கேட்ட போது வி. ஜி. சந்தோஷம் கூறினார்:


''இங்கு வீடியோ சூடு பிடிக்காதபோதே அயல்நாட்டில் வாழும் தமிழர்களுக்காக நாங்கள் பல தமிழ்ப் படங்களுக்குக் 'கடல் கடந்த உரிமை' வாங்கி, அவற்றை வீடியோ காஸெட்டுகளில் பதிவு செய்து விற்போம். இங்கே வீடியோ பிரபலமானதும் இங்கேயும் அறிமுகப்படுத்தினோம். இது தள்ளுபடி விற்பனை போலத்தான்.''

வீடியோவால் சினிமா பாதிக்கப்பட்டுள்ளதா என்ற கேள்வியை நந்தனத்தில் வீடியோ கடை வைத்துள்ள நாக பூஷணத்திடம் கேட்டோம்.

''சில நல்ல படங்கள் மகத்தான வெற்றி அடைவது வீடியோவால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது வாஸ்தவம்தான். ஆனால் தியேட்டரில் ஒரு படம் நன்றாக ஓடிப் பெயரெடுத்தால்தான் அந்தப் பட காஸெட்டுகளுக்கும் கிராக்கி இருக்கிறது. ஒரே வாரத்தில் தியேட்டரிலிருந்து 'தூக்கப்படும்' படத்தை மக்கள் வீடியோவில் பார்க்க விரும்புவதில்லை'' என்றார் அவர்.

தி. நகரில் வசிக்கும் கனரா வங்கி ஸீனியர் மானேஜர் அன்பழகன், ''எங்கள் வீட்டில் மாதம் தோறும் காசெட் வாடகைக்கு எடுக்க என்று நூறு ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கி விடுகிறோம். டெக் வாங்கிய பிறகு வருஷத்துக்கு ஓரிரு முறைதான் தியேட்டர் பக்கம் போகிறோம். அதற்கு முன்பு குடும்பத்தோடு மாதமிருமுறை போனதுண்டு'' என்றார்.

தியேட்டர் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள ரங்கராஜன் வீடியோவினால் தியேட்டர்கள் பாதிக்கப்படவில்லை என்றே கூறினார்.



கி. வா. ஜ. வெளியூருக்குச் சென்றிருந்த போது தங்கியிருந்த வீட்டு நண்பர், ''உங்களுக்கு மாலையில் என்ன பண்ணச் சொல்லலாம்? பூரி பிடிக்குமா?'' என்று கேட்டார்.

''என் பெயரை எண்ணினாலே தெரிந்து கொள்ளலாமே!'' என்றார் கி. வா. ஜ.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார் நண்பர்.

''ஜகந்நாதருக்குப் பூரி பிடிக்காமல் இருந்தால் அங்கே இருப்பாரா?'' என்று கேட்டார் கி. வா. ஜ.!

— எஸ். முகம்மது ஜுசுப்.

நீங்கள் மிகவும் விரும்பி அணிந்திடும்

பட்டுச் சேலைகள்

20%

தள்ளுபடியுடன் வாங்கிட வாரீர்!

- தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை,
  350, பாந்தியன் சாலை,
  எழும்பூர், சென்னை-8.
- பட்டு மாளிகை,
  57, தேரடி, சேலம்-1.
- பவளம்,
  147, நேத்தாஜி சாலை,
  ஈரோடு-1.
- தாமரை பட்டு மாளிகை,
  314, 315, ராஜா தெரு,
  கோயம்புத்தூர்-1.
- பட்டு மாளிகை,
  36, வெங்கலக்கடைத் தெரு,
  மதுரை.
- அமுதசுரபி,
  12, 14, தேரடி கடைத்தெரு,
  திருச்சி-2.
- பட்டு மாளிகை,
  59-59-ஏ, வடக்கு ரதவீதி,
  திருநெல்வேலி டவுன்-6.
- ரேஷம் தாரா,
  சபீனா பிளாசா, முதல் மாடி,
  84, 85, இன்பேன்டரி சாலை,
  பெங்களூர்.
- குஷ்பூ,
  16, 17, புது மார்கெட்,
  திலக் சாலை, அபைட்ஸ்,
  ஐதராபாத்-1.

பட்டு இரகங்கள் கோ-ஆப்டெக்ஸின் இதர விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

DIPR/1455/MS/90/ET

'மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. அந்த அளவுக்குத் தியேட்டர்களின் எண்ணிக்கை உயரவில்லை. ரிலீசாகும் படங்களின் எண்ணிக்கை மட்டும் அதிகரிக்கிறது! புதுப் படங்களுக்குத் தியேட்டர் கிடைப்பதே கஷ்டமாகி விட்டது. வீடியோ உயர் மட்டத்தினர் சமாசாரம். கீழ் மட்டத்தினரும் கிராமவாசிகளும் இன்னமும் தியேட்டரில் போய்த்தான் படம் பார்க்கிறார்கள்'' என்றார் ரங்கராஜன்.

''எனக்கு வீடியோவில் படம் பார்த்தால் திருப்தியாகவே இருப்பதில்லை'' என்று கூறினார் மந்தைவெளியைச் சேர்ந்த ரவிச்சந்திரன். ''வீட்டினுள் பார்க்கும் போது பலவிதமான தொந்தரவு, இடையூறு. படத்துடன் முற்றிலும் ஒன்ற முடியாது. மேலும், பல காஸெட்களின் தரம் மிகக் குறைவு. திருட்டுக் காஸெட்கள்தான் நிறைய வருகின்றன'' என்றார்.

வீடியோ திருட்டு பிரச்னை பற்றி விவரமாய்ச் சொன்னார், ராஜ் வீடியோ விஷனைச் சேர்ந்த ராஜேந்திரன்:

''முதன் முதலில் ஆங்கிலப் படக் காஸெட்டுகள் மட்டுமே வாடகைக்குக் கிடைத்தன. அவை எல்லாமே கள்ளக் காஸெட்டுகள்தான். தமிழ்ப் படங்களும் இதே ரீதியில் வர ஆரம்பித்த பின்தான் தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும் உஷாராயினர். பின்னர் நாங்கள் தமிழ்ப் படங்களுக்கான வீடியோ உரிமையை வாங்கி, சட்டபூர்வமான முறையில் வீடியோ காஸெட்களைத் தயாரித்து விற்பனை செய்ய ஆரம்பித்தோம். இம்முறை இன்று வேறு பலராலும் பின்பற்றப்படுகிறது. சில படங்களின் வீடியோ உரிமைகள் பூஜை போடும்போதே விற்கப்படுகின்றன. வேறு சில தயாரிப்பாளர் படம் நூறு நாள் ஓடிய பிறகே வீடியோ உரிமை தருவர்.

''இப்போதெல்லாம் வீடியோ உரிமை வாங்கப்பட்ட படங்களின் காஸெட்டுகள் மீது உரிமைச் சான்றிதழ் ஒட்டி விற்கப்படுகிறது. சான்றிதழ் இல்லாத காஸெட்டுகள் திருட்டுத்தனமாய்ப் பதிவு செய்யப்பட்டவையாகும். வீடியோ 'பைரஸி' செய்வது யார்? எந்த நிலையில் இது நடக்கிறது? என்பதே சுவாரசியமான ஒரு விஷயம் தான்.

1. லேபரட்டரியில் திரைப்படப் பிரிண்டுகள் தயாராகும்போதே, திருட்டுத்தனமாய் வீடியோ கேஸட்டிலும் பதிவு செய்து கொண்டு விடுகிறார்கள். 2. வெளியூர்

களுக்கு ரிலீஸ் தினத்துக்கு முன்பாகவே பிரிண்டுகள் அனுப்பப்பட்டு விடுகின்ற படியால், அங்கே வீடியோவில் பதிவு செய்யப்பட்டு, அதிலிருந்து திருட்டு வீடியோக்கள் தயாராகின்றன. 3. அயல் நாடுகளுக்கான வீடியோ உரிமை விற்கப் பட்டு, வீடியோ கேஸட்டுகள் அனுப்பப் படும் போது, அதன் ஒரு பிரதி இந்தியாவுக்கு வந்து, திருட்டு வீடியோவுக்குப் பிள்ளையார் சுழி போடுகிறது. இவை தவிர உரிமை பெற்று, வீடியோ கேஸட்டுகள் வெளியான பின்பும், ஓர் ஒரிஜினல் வீடியோ கேஸட்டிலிருந்து வீடியோ லைப்ரரிக்காரர் ஒன்பது பிரதிகளை எடுத்து விடுவார். இவ்வாறு கள்ளத்தனமாக எடுக்கப்படும் பிரதிகள் தரத்தில் மோசமாய் இருக்கும்.''

இந்த வீடியோ பைரஸியை ஒழிக்க முடியாதா? ''முடியவே முடியாது!'' என்கிறார் அசோக் நகரைச் சேர்ந்த கங்காதரன். ''எத்தனை கடுமையான சட்டங்கள் போட்டாலும் அதைத் தடுக்கவே முடியாது! இப்போதும் நாளிதழ்களில் திருட்டு வீடியோ பற்றித் தகவல் சொன்னால் பரிசு என அறிவிப்பு இடம்பெறுகிறது. ஆனாலும் வீடியோ திருட்டு தொடரவே செய்கிறது.''

வீடியோ பைரஸிக்கு எதிராய் ஒரு சில தடவைகள் தமிழகப் போலீஸ் கடும் நடவடிக்கை எடுத்துள்ளது. ஒருமுறை, ஒரு பிரபல நடிகரின் படம் வெளியானவுடன், அவர் கேட்டுக் கொண்டதன் பேரில், பல வீடியோ லைப்ரரிகளில் ரெய்டு நடத்தி, பைரஸி கேஸட்டுகளைக் கைப்பற்றினார்கள். இன்னொரு முறை, ஒரு பிரபல இயக்குனர், தமது படம் வெளியானதும், தமது ஆட்களைப் பல வீடியோ கடைகளுக்கும் அனுப்பி, அந்தப் பட கேஸட் இருக்கிறதா என்று கேட்டு வரச் சொல்லி, 'இருக்கிறது' என்று தெரிந்தால், நேரடியாய் ஆக்ஷனில் இறங்கி, கடையைத் துவம்சம் பண்ணினார்.

வீடியோ லைப்ரரிகள் சில ''நீலப் பட''ங்களையும் ரகசியமாக விநியோகிக்கின்றன என்பது விசனத்துக்குரிய செய்தி. போலீஸார் இப்போதெல்லாம் இது பற்றி அதிகமாகக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. ஒருவேளை கள்ளச் சாராயம் போல் இதையும் ஒழிக்க முடியாது என்ற முடிவுக்கு அரசு வந்து விட்டதோ என்னவோ!

சினிமாவிலிருந்து வீடியோவுக்கு வருவது ஒருபுறமிருக்க, டிவிக்காக வீடியோ காமிராவிலேயே எடுக்கப்பட்ட தொடர்கள் இன்று காஸெட்டில் வெளியாகின்றன. ராமாயணம், மகாபாரதம், கே. பாலசந்தரின் 'ரயில் சிநேகம்' போன்றவை விலைக்கும் வாடகைக்கும் கிடைக்கின்றன.

வீடியோ உலகில், இன்று மிக முக்கியமாய்க் கருதப்படுபவர் ஏக்நாத். அவரைச் சந்தித்த போது ''சினிமா தியேட்டரை விட, வீடியோ தியேட்டர்களில் பல அனுகூலங்கள் உள்ளன. தயாரிப்பாளர், விநியோகஸ்தர், ரசிகர்கள் எனப் பல தரப்பினருக்கும் நன்மைதான். ஆனால், வீடியோ தியேட்டர் விஷயத்தில் அரசு ஏனோ ஆர்வம் காட்டவில்லை'' என்றார்.

ஆக மொத்தம் வீடியோவினால் சினிமாவுக்கு ஆபத்து என்றாலும், சினிமாவில் ஒரு கால் வீடியோவில் ஒரு கால் என்று வைத்து சினிமாத் தொழில் பிழைத்துக் கொள்ளலாம். ஆனால் எதிர்காலத்தில் மெய்யான ஆபத்தை எதிர்நோக்க வேண்டியவை சினிமா தியேட்டர்களே என்று தோன்றுகிறது. இப்போதே சென்னையில் எத்தனை சினிமா தியேட்டர்கள் 'இடிக்கப்பட்டு விட்டன' என்று கணக்குப் பார்த்தால் பிரமிப்பாயிருக்கும்!

— எஸ். சந்திரமௌலி

அட்டை வண்ணப்படம், படங்கள்: **ரமணன்**

அட்டைப்படத்தில்: **கவிதா, லாவண்யா, சேகர்.**

நன்றி: **வீடியோ பாரடைஸ்**



அடுத்த இதழில்......

இன்னும் சில வீடுகள்! மேலும் சில விரசல்கள்!

— ஒரு விவாதம்

சிறந்த வருங்காலம்!
சிறப்பான பரிசுகள்!
இடையில் இருப்பதோ ஒரு சீட்டு!

அறிமுகப்படுத்துவோருக்கான பரிசு

1. ஸ்ரீபெட் ஹார்லிக்ஸ் ஜார் 2
2. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் மினி டிபன் காரியர்
3. கூல் லான்சர்-350 மில்லி
4. மேஃபேர் லெமன் செட்
5. டிப்ளோமட் சர்வீஸ் பௌல்
6. காஸிஃப்ருட் பௌல்-மூடியுடன்
7. அலுமினியம் க்ளேடட் சாஸ் பான்
8. மில்டன் ஸ்கொயர் டீல் 3-இன்-1 கன்டெய்னர் செட்
9. 20 கிராம் வெள்ளிப் பதக்கம்-1
10. மில்டன்ஸ் சிம்பனி டீ செட்

1



2



3



6



5




7




9



4



10



8



எப்போதும் போல விழாக்காலத்துடன் கூடவே வரும் இனிமையான செய்தி. நீங்கள் எதிர் பார்த்திருக்கும் பரிசுகள் இதோ. ஒரு நாள் மட்டும் அல்ல. பத்து நாட்களுக்கு.

வாருங்கள், ஸ்ரீராம் சீட்டில் சந்தாதாரராகச் சேர்ந்து பரிசு பெறுங்கள். அந்த சக்திவாய்ந்த மக்கள் இயக்கம் உங்கள் வருங்காலத்தைத் தன் கவனத்தில் கொள்ளும். இதுவரை அந்த இயக்கம் 2 லட்சம் பேருடைய வருங்காலத்தைத் தன் கவனத்தில் கொண்டுள்ளது.

செப்டம்பர் 20 முதல் தினசரிகளில் வெளியாகவிருக்கும் எங்கள் விளம்பரங்களைக் கவனியுங்கள். அவற்றில் வெளியாகும் கிளர்ச்சியூட்டும் செய்தி உங்களை எங்கள் கிளைகளுக்கு விஜயம் செய்யும் வகையில் ஈர்க்கும்.

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ் &
இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி.லிமிடெட்.

நிர்வாக அலுவலகம் :
''சுப்பிரமணியன் பில்டிங்''
1, கிளப் ஹவுஸ் ரோடு,
சென்னை - 600 002.
போன்: 474451/475536/470400/473932.

மக்கள் இயக்கத்துடன் இணைந்து முன்னேற்றம் பெறுங்கள்.

ADWAVE/SCI/4101 TAM

* வீ. வீ. நாராயணன், ஆலத்தூர்.

? அண்ணா தி. மு. க. இனி யாரை நம்பிச் சட்டசபைத் தேர்தலைச் சந்திக்கும்? உங்கள் விரிவான பதில் கிடைக்குமா?

! கற்றறியாத, கொள்கை அரசியல் புரியாத, பாமர மக்களை நம்பித் தேர்தலைச் சந்திக்கும் என்ற சுருக்கமான பதில் கிடைக்கும்.

* ஆற்காடு எழிலன், திருச்சி — 2.

? நீங்கள் கேட்டவை பகுதியில், 'நிரூபிக்கப் படக்கூடிய பெரிய குற்றத்தைச் செய்திருந்தாலொழிய ஆட்சியிலிருப்பவரின் ராஜினாமாவைக் கோரக் கூடாது' என்கிறீரே, ஆட்டோ சங்கர் தப்பியது பெரிய குற்றமில்லையா?

! ஆட்டோ சங்கர் தப்பியதற்குத் தார்மிகப் பொறுப்பேற்றுக் கருணாநிதி தாமாகவே ராஜினாமா செய்யலாம் — அரியலூர் ரயில் விபத்துக்காக லால்பகதூர் சாஸ்திரி செய்தது போல. இது ஆட்சியிலிருப்பவர் மனச்சாட்சியைப் பொறுத்த விஷயம். ஆட்டோ சங்கர் தப்பியதில் கருணாநிதிக்கு சுற்றி வளைத்தேனும் ஒரு தொடர்பு உண்டு என்பதை நிரூபிக்க முடியுமானால் கருணாநிதியின் ராஜினாமாவை நாம் கோரலாம். அதற்கு நமக்கு உரிமை உண்டு. ஆனால் அப்படி நிரூபிக்க முடியாத போது அந்தக் கோரிக்கையை எழுப்பக் கூடாது. பிரதமர் ராஜீவ் காந்தியின் ராஜினாமாவை நாம் கோரினோம் என்றால் அதற்கு வலுவான காரணங்கள் இருந்தன. போஃபோர்ஸ் விஷயத்தில் அவர் உண்மைக்குப் புறம்பாகப் பல விஷயங்களை நாடாளுமன்றத்திலேயே பேசினார் என்பது நிரூபணமானது அவற்றுள் ஒன்று. இப்போதாவது புரிகிறதா, ராஜினாமா செய்வதற்கும் ராஜினாமா கோருவதற்கும் உள்ள வித்தியாசம்?

* கமல தியாகராஜன், திருவாரூர்.

? நம் நாட்டில் உள்ள பிரச்னைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதை தான்! (உ—ம்) தமிழகத்தில் குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் இலக்கை அடைந்து விட்டதாக மகிழும் வேளையில் கு. க. அறுவைச் சிகிச்சையில் மிக அதிகமான மரணங்கள் தமிழ்நாட்டில்தான் என்ற புள்ளி விவரம் இடியாகத் தாக்குகிறது.

* எல். மாறன், மேல்பட்டி.

? 'தமிழ்நாடு தனி நாடாக இருந்திருந்தால் இந்நேரம் பிரேமதாசா வேலூர் சிறையில் இருப்பார்' என்ற நாஞ்சிலார் முழக்கம் எப்படி?

! பொறுப்பற்ற பேச்சு; ஓர் அமைச்சர் பேசக் கூடாத சொற்கள். 'இருந்திருந்தால்' என்ற சொற்பிரயோகம் பிரிவினை வாதத்துக்கு ஒரு மாற்றுக் கம்பியாகி விடுவதால், நாஞ்சிலார் சிறைவாசத்திலிருந்து தப்பிக்கிறார்.

* அ. இராஜப்பன், கருமத்தம்பட்டி.

? தாங்கள் மறக்க முடியாத கார்ட்டூன் எது?


* ஏமாற்றம் இல்லை


* ஆறுதல்


* முழக்கம் எப்படி?


* மறக்காத கார்ட்டூன்


* ஆக்கிரமிப்பு

அ.தி.மு.க. யாரை நம்பித் தேர்தலைச் சந்திக்கும்?

! எமெர்ஜென்ஸி அறிவிக்கப்பட்டதும், வெளியான ஒன்று. அதில் முதல் படத்தில் இந்திரா காந்தி இருப்பார். படிப்படியாக, எட்டு படங்களில் அவர் ஹிட்லராக உரு மாறியிருப்பார்! செல்லப்பன் அசாத்தியத் துணிச்சலுடன் வரைந்த கார்ட்டூனை அசாதாரணத் துணிச்சலுடன் வெளியிட்டது முரசொலி.

• மல்லிகை மன்னன், மதுரை — 7.

? 'நான் உண்மையிலேயே இசைக்காக உழைக்கவில்லை. இசையின் பேரிலே தினமும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறேன். இது எல்லா இசைக் கலைஞர்களுக்கும் பொருந்தும் — தியாகராஜர் உள்பட' என்கிறாரே இளையராஜா?

! விளம்பரம் பெற்று உயர்ந்துவிட்ட நிலையில் இப்படியெல்லாமும் கூடப் பேச முடியும்தான். ஆனால் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளட்டும். தியாகராஜரை இதில் இழுப்பானேன்? மற்ற இசைக் கலைஞர்களையும் ஏமாற்றுப் பேர்வழிகள் என்பானேன்? ஒவ்வோர் இசைக் கலைஞனுக்கும் குறிப்பிட்ட ஒரு ரசிகர் கூறாம் உண்டு. அவர்களுக்கு நிச்சயம் ஏமாற்றம் ஏற்படுவதில்லை — இளையராஜா ரசிகர்கள் உள்பட.

• கே. பிரதாப்சிங், அரகண்டநல்லூர்.

? தமிழகத்தில் தி. மு. க. வுக்கு மாற்றாக வலிமையான எதிர்க்கட்சி எதுவும் இல்லை என்ற பிரமை ஏற்படுகிறதே?

! பிரமை இல்லை; அதுதான் நிஜம். தேர்தல் வெற்றி என்பது கூட்டணிகளின் பலத்தில் நிர்ணயிக்கப்படுகிறது.

• ரேகா பிரியன், திடாமங்கலம்.

? பிரதமரிடம் தாங்கள் காணும் சிறப்பு அம்சம் எது?

! ஒவ்வொரு பிரச்னையின் போதும் 'நாக் அவுட்' ஆகிவிட்டார் என்று நாம் எண்ணும் போது, தஞ்சாவூர்பொம்மைபோல் நிமிர்ந்து விடுகிறாரே, அதுதான்!

• அ. க. கிருஷ்ணன், வியாசர் நகர்.

? நா. பார்த்தசாரதியின் 'குறிஞ்சி மலர்' பார்த்தீர்களா?

! பார்த்துச் சலித்த கான்கிரீட் முகங்களுக்கு ஒரு மாறுதலாக ஸ்டாலின் தோன்றியது ஆறுதல்; வசனங்களில் நா. பா.வை அமுக்கிக் கொண்டு மேத்தா ஆக்கிரமிப்பதைத் தவறு என்று கூற முடியாவிட்டாலும் நா. பா. ரசிகர்களுக்குத் தேவைப்படும், தேறுதல்.

• ஈ. டி. விஜயகுமார், ஈரோடு. •

? தமிழை வளர்க்க எளிய வழி?

! உ. பி. முதல்வரை அடிக்கடி இங்கே வரவழைத்தாலும், அவர், 'ஹிந்தி திணிக்க வரவில்லை; தமிழைத் திணிக்கத்தான் வந்திருக்கிறேன்' என்று சொன்னாலும் தமிழ் வளர்ந்துவிடாது. தமிழை அகராதிக்குள் கட்டுப்படுத்தாமல் பிறமொழிச் சொற்களைப் போஷாக்காகப் பெற்று இயல்பாகவளர விட்டால்தான் அதுவளரும்.

• சைதை வி. முரளி, சென்னை.

? தாதர் எக்ஸ்பிரஸ் சம்பவம் பற்றிய உண்மைகள் மக்கள் முன் வைக்கப்படாதது ஏன்?

! சம்பவம் உண்மையா, கட்டுக்கதையா? என்பதே முடிவாகாத நிலையில், மக்கள் முன் இதுவரை வைக்கப்பட்டதே போதும்! போதும்!

• என். சுரேஷ், சேலம் — 5.

? காப்பி போடுவது, சமையல் செய்வது, துணி துவைப்பது — எது ஆண்களுக்கு அழகு?

! அழகு என்பது செயலில் இல்லை. இயன்ற அளவில் உதவும் மனத்தில் இருக்கிறது.

• வண்ணை கணேசன், சென்னை — 11.

? அருவிகளில் தங்களுக்குப் பிடித்தது எது?

! பார்ப்பதற்குச் சினிமா அருவி. நேரில் பார்ப்பதைவிடப் பிரமாதமாக இருக்கிறது. சமீப உதாரணம், "ஒரு வீடு, இரு வாசல்கள்." குளிப்பதற்குக் குற்றாலம் அருவிக்கு இணை வேறில்லை.

• ரூ. 20 பரிசு பெறுபவர்:

ஈ. டி. விஜயகுமார்,
5, வடக்கு பெருமாள் கோவில் வீதி,
ஈரோடு.

வன்முறையைத் தூண்டும் ஜோக்குகள் தேவைதானா?

* டி.ஜி.பி. துரை கூறுவதைப் படிக்கையில் தமிழக அரசு, வீரப்பன் கண்டு பிடிப்புத்துறை என்று தனியாக ஒன்றைத் தோற்றுவித்து அந்தத் துறைக்கு ஒரு அமைச்சரையும், அமைச்சருக்கு ஒரு பி.ஏ.வையும் நியமித்துச் செயல்பட்டால்தான் அவனைப் பிடிக்க முடியும் என்று தோன்றுகிறது!

நரிப்பாளையம், அ. கிருஷ்ணமூர்த்தி.

* அ. தி. மு. க. எம்.எல்.ஏக்கள் சட்டசபைக்குக் கைக்குட்டையால் வாயைக் கட்டிக்கொண்டு வந்தது பற்றிய கேள்விக்கு 'வழக்கமாக ஜெயலலிதா முன் பாக வாயைக் கட்டிப் பழகிப் போனவர்களுக்கு இது புதுமை இல்லை....' என்று தராசுவின் பதில் குபீர் சிரிப்பை வரவழைத்து விட்டது.

வளையமாபுரம், வலங்கை. ஜி. ராஜசேகர்.

* நாங்கள் தூங்குவதற்குக் கூட நேரமின்றாமல் தண்ணீருக்காக அலைந்து கொண்டு இருக்கும் நேரத்தில் தண்ணீர்ப் படுக்கையைப் பற்றி வெளியிட்டு எங்கள் வயிற்று எரிச்சலைக் கிளப்பி விட்டீர்கள்.

திருவெண்ணெய்நல்லூர், சுஜமுகன்.

* மாறுபட்ட கருத்துக்கள் கொண்டவர்களாக இருப்பினும் கண்ணை மூடிக் கொண்டு குற்றம் சாட்டாமல் நடுநிலைமையோடு பதிலளிப்பது தராசுக்கே உரிய தனிச்சிறப்பு என்பதை நிரூபித்து விட்டார், சம்பம் வாசகரின் கேள்விக்கு அளித்த பதிலின் மூலம். பாராட்டுக்கள் கல்கியின் தராசுத்தனத்துக்கு!

கொணவட்டம், கே.ஆர். தேவேந்திரன்.

* 9-9-90 இதழில் ஜனனியின் "கோடு தாண்டிய கோதை" கம்பீரமாகவும் உன்னதமாகவும் இருந்தது. அதற்கு கோபன் வரைந்த ஓவியம் சரியில்லை. அந்த ஓவியத்தில் பெரியவரின் கம்பீரம் சிறிதும் வெளிப்படவில்லை.

போளூர். கே. அரியநாதன்.

* ஜனனியின் சிறுகதை 'கோடு தாண்டிய கோதை' நெஞ்சைத் தொடும் வகையில் எழுதப்பட்டுள்ளது. ஓர் இரக்கமான முடிச்சு கொண்ட கதையை மெதுவாகப் படிப்படியாக அவிழ்க்கும் ஆசிரியர், இறுதியில் கிராமத்தில் இருக்கும் பெரியவர்கள் மேல் ஒரு தனிப்பாசம் பிறக்கச் செய்துவிடுகிறார். பாராட்டுக்கள்!

தஞ்சாவூர், மா. அதிராமலிஜயன்.

* தொண்ணூற்றொரு வருடங்களுக்கு முன்னால் செப்டம்பர் 9 இல் தமிழகத்தில் பிறந்த ரா. கிருஷ்ணமூர்த்தி என்ற அற்புத மனிதரின் சாதனைகள் யாரும் எட்டிக் கூடப் பிடிக்க முடியாத அளவிற்கு மிக உயர்வாக இருந்தன. விடுதலைப் போராட்ட வீரராக, சமுதாய சீர்திருத்த வாதியாக, கலைகளை வளர்த்த விமர்சகராக, பத்திரிகை ஆசிரியராக, சிரிப்பதோடு சிந்திக்கவும் வைத்த ஆற்றல் மிக்க எழுத்தாளராக, பாரதியின் புகழ் பரப்பும் பக்தராக, பொது நலத் தொண்டராக அவர் ஆற்றிய பணிகள் நம் முன் விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றன. கொள்கைகளை விற்றுப் பிழைக்கும் சந்தர்ப்பவாதிகளை, அமரர் கல்கியும், பாரதியும் காட்டிய வழியில் எதிர் கொண்டு, வெற்றி கொள்வோம்.

சிறுமுகை, ஜி. கதிரேசன்.

* மைடியர் மார்த்தாண்டன் படம் சரியில்லை என்பதற்காக மாணவரை வைத்து விமர்சித்துத் தப்பித்துக் கொண்ட உமது சாமர்த்தியமே தனிதான்.

திருவெண்ணெய்நல்லூர், ஆர்.கே. கங்கா சீனிவாசன்.

* 18 ஆம் பக்கம் 'டிப்ஸ்' பற்றி வெளியாகியுள்ள துணுக்கு நகைச்சுவைக்காகப் பிரசுரிக்கப்பட்டிருந்தாலும், ஒரு வகையில் வன்முறையைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய "ஜோக்குகள்" தேவைதானா?

புதுவை, எஸ். சதாசிவம்.

* மூகபஞ்சசதி போன்ற, மஹான்களின் ஸ்லோகங்களைக் குறைந்தது பதினைந்து ஆண்டுகள் ஸ்மரணம் செய்யப்பட்ட இடம். விரிவான பூஜை புனஸ்காரங்கள் செய்யப்பட்ட இடம். அங்கு ஒரு அசம்பாவிதமா? நடக்கவே நடக்காது!

மதுரை, ப .சோ. முத்து.

* 'விளிம்பில் சந்தித்தவர்கள்' சிறுகதையல்ல, வசன கவிதை! இணையும் அந்த இளசுகளின் இதயம் போலவே நமது இதயமும் கதையின் இறுதி வரிகளை வாசிக்கையில் இதமான இன்பத்தில் 'கரைந்து போகிறது!

நரிப்பாளையம், அ. கிருஷ்ணமூர்த்தி.

* பொன்விழா பரிசுத் திட்டக் கூப்பன் அடங்கிய இந்த வாரக் கல்கியை வாங்கியதும் முதலில் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்பி விட்டுத்தான் மற்ற விஷயங்களைப் படிக்க ஆரம்பித்தேன்.

கொங்கணாபுரம், வே. செந்தில்குமார்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.


லைம்
ஸிண்த்தால்
Godrej
CINTHOL
THE LIME FRESH DEODORANT SOAP
LIME
அனைத்திலும் புத்துணர்ச்சிமிக்க லைம் சோப்
அனைத்திலும் உன்னதமான லைம் சோப்
துர்நாற்றம் அகற்றும் ஓரே லைம் சோப்

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka